80—பக்கங்கள்.

ஓம் பரப்பிரம்மணே நம:

அமிர்தகுணபோதினி

அறிவை விளக்கி, உற்சாகத்தைப் பெருக்கவல்லதான விகடமும், ஆநந்தகரமான அநுபவ விநோத ஞானகலா விலாஸங்களும் நிறைந்திலங்கும் அமிர்தச் சுவையுள்ள மாதப் பத்திரிகை.

பத்திராசிரியர்:—திரிசிரபுரம் எஸ். ஜி. இராமாநுஜலுநாயுடு

"எண்ணிய எண்ணியாங் கெய்துப எண்ணியார்
திண்ணிய ராகப் பெறின்." (திருக்குறள்.)

கமலம்-9.	சென்னை பவஹு ஆனிமீ 1வ	இதழ் 99.
Vol. 9.	1934-ம்ஹு ஜூன்மீ 15வ	No. 99.

ஆநந்த தர்சனம்



"பகவத்தியானம் பாவ விமோசனம்" என்ற பெரியோர்களின் வாக்கியம் வெகு சிலாக்கியம். புருஷனைப் பிரிந்த ஸ்திரீ தன் தோழிகள் பேசும்போது மனதைப் புருஷனிடமும், சரீரத்தைத் தோழிகளிடமும் வைப்பது போல, பகவானைப்பிரிந்த பக்தர்கள் சரீரத்தை உலக வியவகாரங்களிலும், அந்தக்கரணத்தை ஈசுவரனது பாதாரவிந்தங்களிலும் வைப்பர். பக்தியைத் தன்னுள் உதயமாகச் செய்து கொள்வது கஷ்டமேயன்றி அது கிடைத்து விட்டால் அதைவிட வேறு ஆநந்த மொன்றுண்டோ? இதற்கு உதாரணம் வேண்டாம். பர்த்தாவினிடம் உண்மையான பிரீதியுள்ள ஸ்திரீ அவனுடைய ரூபத்தையே தன் மனதிற்கொண்டு. அவனுடைய ஸம்பாஷணைகளையே அடிக்கடி ஞாபகத்தில் வைத்து ஆநந்தப்படுகிறாள். அதுவே அவளுக்குப் போதும். எத்தனையோ நாட்களுக்குமுன் ஒருவரின் வீட்டில் உண்ட பக்ஷணத்தை நினைத்து நாக்கில் ஜலமூறுவது வழக்கமன்றோ? அநேக நூற்றாண்டுகளுக்கு முன் 'ஸாக்ரடிஸ்' என்ற தத்துவ சாஸ்திரி பேசிய பேச்சுகளை இப்போதும் கேட்டு ஆநந்தப் படுகிறோமல்லவா? இவ்வற்ப காரியங்களைத் தியானிப்பதாலேயே ஒருவித ஆநந்தம் ஜனிப்பது உண்மையாயின், பரமாநந்த மூர்த்தி

ஒரு உயிர் மற்றொரு உயிரைப் பின்பற்றி அதன் சக்தி. தத்துவத்தால் உலகில் நடமாடுகிறது. அந்த ஜீவாதாரமான உயிர் இவ்வுலகினின்றும் மறைந்திடில், அதைத் தழுவி வளர்ந்த உயிரோ வாடி உருக்குலைந்து விடுகிறது.

யாகிய பகவானுடைய ஸ்மரணை ஸந்தோஷத்தை விளக்குமென்பதில் தடையென்ன? ஆகவே, எங்கும் நிறைந்த எம்பெருமானைத் திரிகரண சுத்தியோடும் ஸதா தியானிக்கக் கடவோம்.

⁂

"கர்மமே தர்மம்" பகவானுகிய ஸ்ரீகிருஷ்ண பரமாத்மா பகவத் கீதையில் கர்மத்தைச் செய்வது தான் தர்மம் என்று கூறியிருக்கிறார். பிரம்ம, க்ஷத்திரிய, வைசிய, சூத்திரராகிய நான்கு வர்ணத்தார்களும் தத்தம் ஆசிரம தர்மங்களை வழுவாது செய்து வரவேண்டும். பல ஏழைகளுக்குப் பொருள் கொடுப்பதுதான் தர்மமென்று நினைக்கப்படாது. தாங்கள் செய்யவேண்டிய காரியங்களைக் குறைவின்றிச் செய்து முடிப்பதே தர்மமாகும். இம்மாதிரியே ஒவ்வொருவரும் தாம் செய்யவேண்டிய கடமைகளைத் தவிர்க்காது செய்து முடிப்பதையே தர்மமெனக் கொள்ளவேண்டியது அவசியம். மனிதர்களாய் ஜனித்தவர்கள் இரண்டுவித கர்மங்களைச் செய்யவேண்டும். ஒன்று தங்களுக்கு ஹிதத்தை நாடுவது. மற்றொன்று பிறர்க்கு ஹிதத்தைத் தேடுவது. இவ்விரண்டு கடமைகளையும் செய்யாமல் வீண்காலம் கழிப்பவனுக்கு சிரேயஸ் உண்டாகாது. எவன் கர்மப் பிரஷ்டனாய்த் திரிகிறானே அவனுக்கு சோம்பல் அதிகரித்து, சித்தம் கலங்கி, மனது ஒரு நிலையிலின்றி அங்கு மிங்கும் ஓடிப் பாப கர்மங்களில் பிரவர்த்திக்கும். ஆகவே, சித்த சுத்தி என்பது உண்டாகாமற்போம். இதற்காகவே முற்றும் துறந்த ஸந்யாஸிகள் கூடத் தங்கள் கருமத்தைச் செய்யாது விடுகிறதில்லை. இன்பமென்பது ஒரு காரியத்தைச் செய்த பிறகே அடையக்கூடியதாதலின், தனது காரியங்களைச் சரிவரச்செய்து முடித்தவனே இன்பத்தைக் காண்பதற்கு உரியனாவான். ஆதலின், பகவத் இன்பத்தைப் பெறுவதற்காக அதற்கானவற்றைச் செய்யக் கடவோம்.

⁂

"மனஸின் ஸ்தானம் ஹிருதய கமலம்" என்று பெரியோர் உரைக்கின்றனர். பகவான் நமது ஹிருதயத்திலே குடிகொண்டிருக்கிறாரென்பது சாஸ்திர வசனம். இவ்விதமிருக்க, 'மனஸின் ஸ்தானம் சிரசு' என்று மற்றோரிடத்தில் சொல்லப்பட்டிருக்கிறது. இதில் எதைச் சரியென்பது எனில், இரண்டும் அந்தந்த சமயங்கட்குப் பொருத்தமே. விழித்திருத்தலாகிய 'ஜாக்கிரத' ஸமயங்களில் மனம் மூளையில் நின்று வேலை செய்கின்றது. சுகமான நித்திரா காலமாகிய 'ஸுஷுப்தி' ஸமயத்தில் மனம் ஹிருதய கமலத்தில் வந்து அடங்குகின்றது. ஆகவே, மனதிற்கு இரண்டு ஸ்தானங்களிருப்பதும் உண்மையேயாம்.

⁂

"காலபேதம், அதிகாரிபேதம், அவஸ்தாபேதம், விஷயபேதம்" என நான்கு நிலைகள் உண்டு. சாஸ்திரங்களில் கூறப்பட்ட விஷயங்கள் ஒன்றுக்கொன்று எதிரிடையாக முரண்படும்போது, இந்த நான்கு நிலைகளையும் சிந்தித்துப் பார்த்து எதெது எந்த சந்தர்ப்பத்தில் கூறப்பட்டன, விதிக்

பகவத் ஸேவையைத் தரிசிக்கும்போது எத்தகையோரது மனமும் பரிசுத்தமாய்விடும். பலவிதத்திலும் ஒரு நிலையின்றித் திரியாநின்ற அந்தக் குரங்குச்சித்தம் இங்கு ஒரு நிலையிலாகி ஒன்றுபட்டுப் பரமனின் பாதநீழலில் தியானம் செலுத்தத் திறமைப்பக்குவம் கொண்டுவிடும்.

கப்பட்டன என்று ஆராயுமிடத்து எத்தகைய ஸம்சயங்களும் நிவர்த்தியாகி விடக்கூடும். (1) இதில் காலபேதம் என்பது கலியுகம், அதற்கு முந்திய யுகங்கள் முதலியவைகளாம். ஒரு யுகத்திற்குச் சொன்ன சாஸ்திர வசனங்கள் மற்றொரு யுகத்திற்குப் பொருந்தா. முந்திய யுகங்களில் மாமிசம் சிரார்த்தத்திற்கு உபயோகிக்கலாமென்று சொல்லியிருந்தால், கலியுகத்தில் அது மறுக்கப்பட்டிருக்கும். இது காலபேதத்தின் விளைவு. (2) அதிகாரி பேதம் என்பது அந்தந்த காலத்தில் சாஸ்திரங்களை உலகுக்கு உபகரித்த வகையில் அதிகாரம் வகித்த மகரிஷிகள் கால வேற்றுமைகளுக்குத் தக்கபடியே சாஸ்திர தர்மங்களைப் புகன்றனர். இங்ஙனம் அதிகாரி வேற்றுமையை உற்று நோக்கி, ஒன்றுக்கொன்று எதிரிடையாக முரண்படுவதை சரியாகத் திருத்திக்கொள்ளவேண்டும் (3) அவஸ்தாபேதம் என்பது விழித்திருக்கையில் சேர்வதும், தூங்குகையில் உண்டாவதுமான நிலைகளைக் குறிப்பிடுவதாம். (4) விஷயபேதம் என்பது ஓரிடத்தில் கூறி யிருப்பதையே இன்னோரிடத்தில் கூடாதென மறுக்கப்பட்டிருக்கும். ஓரிடத்தில் பிச்சை எடுப்பது இகழ்ச்சி என்றுகூறி, மற்றோரிடத்தில் பிச்சையிடு என்று சொல்லப்பட்டிருந்தால், இந்த பேதத்தை இடத்திற்குத் தக்கபடி பொருள் கொள்ளவேண்டும் என்றபடி.

ஃ

தாரக லக்ஷியம்:—'தாரகம்' எனில் நக்ஷத்திரமாம். தாரக லக்ஷியம் எனில், நக்ஷத்திரம்போல் உயரத்தில் இருக்கிற உயரிய லக்ஷியம் என்பதாம். உன்னதமான லக்ஷணத்தைப் பெறவேண்டுமாகில் அதற்குத் தக்கபடி உயர்ந்த லக்ஷியத்தை ஏற்று அதில் திருஷ்டி வைக்கவேண்டும்.

ஃ

சாதனங்கள் மூன்று வகை:—(1) சிக்ஷை—அதாவது மனதைக் கண்ட விஷயங்களில் புகாமல் தடுத்து ஆண்டிடுகை. (2) தீக்ஷை என்பது, நமது பிரியம்போல் மனத்தை நடத்திச் செலுத்தல். (3) லக்ஷியம் என்பது தான் குறித்துக்கொண்ட ஒன்றிலேயே சிந்தை மிகுந்து நின்று அதை சாதித்துக் கொள்வதாம். உயர் லக்ஷியமின்றி உத்தம லக்ஷணமில்லை.

ஃ

"பக்தி, அன்பு, விஸ்வாசம்" இம்மூன்றும் இடத்திற்கேற்றபடி பொருள்படும். பகவானிடத்தும், ஆசாரியாரிடத்தும் கொள்ளக் கூடியதற்குப் பக்தி என்பர். பெற்றோரிடத்தும் அரசனிடத்தும் கொள்ளும் வணக்கம் விஸ்வாசமாகும் மனைவி, மக்கள், ஸகோதரர் இவர்களிடத்தில் வைக்கும் பிரீதிக்கு அன்பு என்று பெயர். அன்பும் விஸ்வாசமும் அபிமானத்தால் தோன்றுபவை. பக்தியோ யாவற்றினும் மேலாகப் பகவானைக் கருதி வழிபடுதலால் உண்டாவதாம்.

ஃ

"துர்க்குணங்கள் பதின்மூன்று" (1) ராகம்—சிற்றின்ப இச்சை. ராவணன் சீதையைக் கவர்ந்தான். (2) துவேஷம்—தீமைக்குத் தீமை புரிதல்.

"என் மன உணர்ச்சிகளைப்பற்றி உமக்குச் சிறிது சொல்லலாமெனில், ர் உண்டாக்கிவிட்ட மனவேதனை தடங்கலாக வழியில் நிற்கிறது."

இரண்யன் தன் அண்ணனைக்கொன்ற மஹா விஷ்ணுவினிடத்துப் பகை சாதித்தான். (3) காமம்—முறை தவறிய போகப் பிரியம். நரகாசுரன் ஸ்ரீ கிருஷ்ணன் தேவிகளை அபகரித்தான். (4) குரோதம்—தன் விஷயங்களில் விக்கினம் செய்வோனிடத்துக் கொள்ளும் பகை. பகாசுரன் தனக்கு வந்த அன்னத்தையுண்ட பீமனை எதிர்த்தான். (5) லோபம்—பிறருக்கு நியாயமாய்த் தரக்கூடியதையும் மறுத்தல். துரியோதனன் பஞ்சபாண்டவர்களுக்கு ஐந்து அடி நிலம்கூடத் தரமுடியாதென்றான். (6) மோகம்—மற்றொன்றில்தான் வைக்கும் எல்லை மீறிய பிரியம். தசரதர் ராமனிடத்திலுள்ள பிரீதியால் புத்திர சோகம் கொண்டு மடிந்தார். (8) மதம்—செல்வத்திமிரில் கர்வித்தல். ராவணன் ஐசுவரிய கர்வத்தால் நாரதரை உபசரியாது போய் வாலியின் வாலில் சிக்கி வருந்தினான். (8) மாச்சரியம்—பிறரது வாழ்வைச் சகியாமை. தர்மரின் செல்வத்திரளைக் கண்டு துரியோதனன் பொறாமை படைத்தான். (9) ஈரிஷை—தனக்கு நேர்ந்த சோதனையைப் பிறர்க்கும் உண்டாகப் பண்ணுதல். அருணகேதன் தனக்கு வந்த துன்பம் போல் தன் பிரியனான வாணாசுரனுக்கும் வரவேண்டுமென விரும்பினான். (10) அசூயை—தன்னைப்போல் பிறரும் உயர்வுற்றால் அதைச் சகியாமை. அர்ச்சுனன் தன்னைப்போலவே அந்த வேடனும் வில்வித்தையில் தேர்ந்து விட்டானே யென்று துரோணரின் மூலம் அவ்வேடன் தன் பெருவிரலை அறுத்துத் தரும்படி செய்தான். (11) டம்பம்—பிறர் மெச்சும்படி தன் காரியங்களைப் பகிரங்கப்படுத்துவது. நபூர்வராஜன் துருவாசரிடத்து தன் யாகத்திற்கு சமமாக எவரும் செய்யவில்லை யென்று கூறித் துன்பங்களை யடைந்தான். (12) தர்ப்பம்—தனக்கு நிகரானவர்களில்லையெனத் தனது செல்வத்தாலும் பலத்தாலும் கர்வித்தல். சதகந்தன் தனக்குள்ள செல்வராசிகளைப்போல் வேறெவர்க்கு மில்லையென்று பேசி எதிர்த்து உயிரிழந்தான். (13) அகங்காரம்—பிறரிலும் தன்னை மேலோனாகக் கருதிக் கர்வித்தல். தமது மமதையால் மகாவிஷ்ணுவை எதிர்த்த மதுகைடவர்கள் இதற்கு உதாரணமாவர்.

ஃ

ஓ! சர்வலோக சிருஷ்டிகனே! கருணாகரனே! எம் ஆண்டவனே! ஸ்வாமி! பழுதற்ற வாக்கு, மனம், காயங்களால் உனது பாதாரவிந்தங்கட்கு நமஸ்காரம் செய்கின்றோம். ஓ! தேவாதிதேவா! தேவரீர் எம்மைப் படைத்த நாள் முதலாக இந்நிமிஷம் வரையில் மஹா அன்போடும் காப்பாற்றி வருகின்றீர். அடியாரும் உம்மை மனஸ்பூர்வமாக விசுவாசித்து, உமது கற்பனைக்குப் பயந்து நடக்கத்தக்க விவேகம் அளித்தீர். இவைகளை அடியேம் பெற்றும் நன்றி மறந்தவர் போன்று உம்மை ஸ்தோத்திரம் செய்யாமலும், உமது ஆக்ஞைக்குக் கீழ்ப்படியாமலும், உமக்குப் பயப்படாமலும் மனம் போனவாறு திரிந்து, கெடுதிகளைப் புரிந்து, மூடர்களின் உறுட்டுக்கும் பிறட்டுக்கும் பயந்து, உம்மை மறந்து அளவற்ற பாபத்தைக் கைக்கொண்டோம். ஆ! இரக்கமுள்ள எம் கோவே! எமது மௌடீகத்தினால் உம்மைத் தியானியாது பலபலவற்றில் உழன்றோம். மோசமே கண்டோம். இனி அங்ஙனம் நேராமலும், உமது பகவத் சேவையிலேயே நாட்டங்கொள்ளுமாறும் அனுக்கிரகிப்பாய் இவ்வாறே, அடியார் உற்றார் உறவின் முறையாரோடு பூமியின் கண்ணுள்ள மானிடர் யாவரும் எங்கணும் நிறைந்த பரிபூரணரான உம்மைத் துதி புரிந்து மோக்ஷமடையத் திருவருள் செய்வாய். ஓம் தத் ஸத்.

அமிர்தகுணபோதினி

பவ௵ ஆனி௴ 1௨

வலது கையின் அதிசய உன்னதம்.

ஆய்ந்து பார்க்கையில் குரங்கு முதலிய மிருகங்களுக்கு அமைந்துள்ள நான்கு கைகளைப் பார்க்கிலும், மானிடர்க்குள்ள இரண்டு கைகளே மிகுந்த சாமர்த்தியமுடையவையெனப் புலப்படும். ஏனெனில், நடப்பதற்காயினும் பிடிப்பதற்காயினும் அம்மிருகங்களுக்கு நான்கு கைகளும் உதவவேண்டும். மனிதர்க்கோ அப்படியல்ல. பிடிப்பதற்குரிய அவயவம் வேறு, நடப்பதற்குரிய அவயவம் வேறு. அதனால், மனிதருடைய இரண்டு கைகளை வானரங்களின் நான்கு கைகளைப் பார்க்கிலும் அதிக வலிமையுடையவை யாகின்றன. ஆயினும், மனிதர்க்குக் குழந்தைப் பருவத்திலே கைகளுக்கும் கால்களுக்கும் செய்கையில் அத்தனையாக வேற்றுமை யில்லை. தாய் மடியில் படுத்திருக்கையில் குழந்தையினுடைய கைகால் இரண்டும் ஒரேமாதிரியாகவே அசைந்தாடிப் பொருள்களைப் பிடிக்க முயலும். தவிழ்ந்து விளையாடத்தக்க வயது வந்தபோது கைகாலிரண்டும் தவழ்வதற்கு உபயோகமாகின்றன. பிள்ளைகளுக்குப் பேசத் திறமையுண்டாகிறவரையில் இடம், வலம் என்னும் வேற்றுமை தெரிவதே யில்லை. அதன்பின்னும், தொனி பேதங்கள் உண்டாவதுபோலவும், ஆண்மைப் பருவத்திற்கு அறிகுறியாய் மீசை முளைப்பதுபோலவும், இடம், வலம் என்னும் வேற்றுமை தானாகவே உண்டாவதில்லை. பலதடவை வாயாற் சொல்லிக் கற்பிப்பதாலும், மாதிரி காட்டுவதாலுமே அது பழக்கி வைக்கப்படுகின்றது. பெற்றோர், உபாத்தியாயர் முதலியோர் சிறுவர்கள் வேலை செய்யும்போதும், மரியாதை விஷயங்களிலும் வலதுகையன்றி இடது கையை உபயோகிக்காதிருக்கும்படி அந்தச் சமயங்களில் கற்பிக்கின்றனர். எங்கும் ஒரே தன்மையாய் அனைவரும் அதிக நிர்ப்பந்தத்தோடு வலதுகைப்பழக்கமே செய்விக்கின்றமையால் அதுவே நாகரீக நடையெனப் பலரும் பாவித்திருக்கின்றனர். அத்துடன், வலது கைக்கேதான் அதிக சக்தியென்றும், பலமென்றும், இடது கையால்

எவருமே எல்லாம்செய்து உதவியவருமல்ல. எவருமே ஏதும் செய்யாதவருமல்ல. மற்றவர் உதவியது பாதி, தானே செய்துகொண்டது பாதி.

எதுவும் ஆகாதென்றும் பிழைபட எண்ணியும் நம்பியும் விடுகின்றனர்.

ஃ

இந்த நம்பிக்கையோடு, சிலர் பெண்களைத் தாழ்வாகப் பேசுவதுபோல, இடது கையையும் தாழ்வாக நினைத்து, அந்தக் கையை உபயோகமற்றதாகவே பாழ் செய்துவிடுகின்றனர். ஆண்மக்களுக்கு மட்டும் கல்வியைக் கற்பித்துப் பெண்களுக்கு ஏன் படிப்பு என்பது போல, வலது கைக்கே எல்லாப் பயிற்சிகளையும் கற்பித்து, இடது கையை எவ்வித அப்பியாஸமுமின்றி விட்டுவிடுகின்றனர். அப்படியல்லாமல் வேற்றுமையின்றி இரண்டு கையும் சமமாகவே வேலை செய்யக் கற்பிக்கப்பட்டிருக்குமாயின், அது மிக்க நன்மை பயக்கத் தக்கதன்றோ? ஏனெனில், எக்காலத்திலும் ஏகரீதியாய் இரண்டு கையாலும் வேலை செய்யும்படி இருப்பதுமன்றி, ஒருவேளை தெய்வச் செயலாய் வலது கைக்கு ஏதாவது அபாயம் உண்டாகும்பக்ஷத்தில், அப்போது வலது கைகளின் வேலைகளையெல்லாம் சுலபமாய் இடது கையே செய்யும்படி ஆகும். அப்படியின்றி, அப்போது புதிதாய் அவ்வேலைகளைச் செய்ய இடது கைக்குப் பழக்கும்படியிருந்தால், அதைவிட வருத்தமான காரியம் மற்றொன்றுமில்லை. ஒரு பூட்டைத் திறப்பதற்குக்கூட இடது கையால் முடியாத நிலையில் அதை எவ்விதப் பயிற்சியுமற்றதாக்கிவிட்டு, இப்போது திடீர் என்று பூட்டைத் திறக்கும்படி இடக்கையை ஏவினால் ஐயோ! பாவம்! அந்த ஊமைப்பிள்ளையான இடக்கை என்ன செய்யும்? ஒரு கையெழுத்து போடுவதற்குக்கூட அதற்கு வராதே! அ, ஆ, இ, ஈ என்று வேகமாய் எழுதவும் அதற்கு முடியாதே!!

ஃ

வலக்கைப் பழக்கம் எங்கும் சாதாரணமாக வழங்கிவருவதுமன்றி, ஆதிதொட்டு வழங்கி வருகிறதெனவும் தெளிவாகின்றதனால், அது ஒரு நாகரீகமான வாடிக்கையென்றேனும், நாகரீகத்திற்காகவே வலக்கையை உபயோகிக்கின்றனரென்றேனும் சொல்வதற்கில்லை. தேசம் சற்று நாகரீகம் பெற்றபிறகு வழங்கிவரும் சிற்ப சித்திரம், கையாளும் கருவி முதலியவை மாத்திரமேயல்ல; பூர்வ காலத்தில் மூடமனிதர்களாயிருந்த ஒரு சாரார் கையாண்ட கேடுகெட்ட கருவிகள்கூட வலது கையாலேயே ஆளப்பட்டனவென

"உன்னை என் கண்ணில் வைத்துள்ளேன். இதயத்திலே சிந்திக்கிறேன். வாக்கில் தியானிக்கிறேன். எப்போதுமே நினைக்கிறேன். என் பக்கத்தில் நீ இல்லையே யெனத் தவிக்கிறேன். உன் சொல்லோசையமுதம் கேட்கச் செவி ஆவலுறுகின்றது. வெளியே செல்லுங்கால் உன் துணை வேண்டுகின்றேன். ஆனால், நீயோ தூரத்தில் இருக்கின்றனை. என்று உன்னைக் காணும் நாளோ தெரிகிலேன்."

அவர்கள் வெட்டிய குகை முதலியவைகள் பிரத்தியக்ஷமாய்க் காட்டுகின்றன.

ஃ

மேலும், சித்திரங்களும் புஸ்தகங்களும் எழுதும்போது நாம் முதலில் தலைப்புறத்தில் இடக்கைப்பக்கமாய் ஆரம்பித்து வலது கைப்புறம் நோக்கி எழுதிக்கொண்டு வருகின்றோம். இதை யோசிக்கையில், முதலில் எழுதி ஈரமாயிருக்கிற பாகம் உடனே நமது கைப்பட்டுக் கலையாதிருப்பதற்காகவே எனத் தோன்றுகிறது. இதனால், எழுதுகிற கை வலதுகை யெனவே தெளிவாகின்றது. இப்படியே பூர்வ காலத்து ஜனங்களுடைய சிற்பசித்திரம் முதலியவை எல்லாம் வலக்கைச் சிறப்பையே விளக்குகின்றன. இந்த வழக்கம் அநாதி என்பது மாத்திரமேயல்ல; ஓரிடத்திலன்றி இப் பூலோகம் எங்கும் ஒரேமாதிரியாகப் பரந்திருக்கின்றது. முத்தமிடுவது பிரீதிக்கு அடையாளமென எங்கும் பிரசித்தமாயிருக்கின்றதே. ஆயினும், முத்தம் என்கிற பெயரே தெரியாதவர்களும் பலபேர் இருக்கின்றனரெனச் சிலர் சொல்லுகின்றனர். வலக்கைப் பழக்கத்தைப்பற்றி அப்படிப்பட்டதொன்றுமில்லை. எஸ்கிமோ, அமெரிக்க தேசத்துப் பூர்வ குடிகள், நீக்கிரோ ஜாதியார், த்வீபாந்திரங்களிலுள்ளவர் முதலிய பலரும் கத்தி, ஊன்றுகோல், கசை முதலியவைகளை வலது கையில் தரித்து, கேடயம், கடிவாளம் முதலியவைகளை இடக்கையில் பிடிக்கிறார்கள். எத்தேசத்தாராயினும் எல்லோரும் ஆதிகாலம்தொட்டு வழங்குகிற வில், கவிண்டு முதலிய ஆயுதங்களை வலக்கையாலேயே பிரயோகித்து வருகின்றனர்.

ஃ

இப்படி உலக வழக்கம் மாத்திரமேயல்ல; உலகத்திலுள்ள பல பாஷைகளாலும் வலக்கைச் சிறப்பு வெளியாகின்றது. தமிழ் பாஷையில் வலது இடது என்னும் சொற்களுக்கு வலிமையுள்ளது, வலிமை யில்லாதது எனப் பொருளாகும். ஸமஸ்கிருதத்தில் வலக்கைக்குத் தக்ஷிணமென்று பெயர். தக்ஷிணமென்றால் சாமர்த்தியமுள்ளது. இடக்கைக்கு வாமம் என்று பெயர். வாமம் என்றால் அதற்கு (சாமர்த்தியத்துக்கு) மாறானது. இப்படியே, மற்றும் இதரமான பல பாஷைகளிலும் கைகளுக்கு அததின் செய்கைக்குத் தக்கபடியே பெயர் அமைந்திருக்கின்றது.

ஃ

மனிதன் முரட்டுத்தனமான நிலையிலிருந்து நாகரிக நிலைக்கு ஏற ஏற வலக்கைக்கு வேலை செய்யக் கற்பிக்க வேண்டுவது மிகவும்

எப்பொழுதோ ஒரு சமயத்தில் சிலர்மீது ஒருவித ஸந்தேகம் உண்டாய் விடுகிறதே அது என்? இறுதியில் அது உண்மையும் பெறுகிறது.

அவசியமாகின்றது. இக்காலத்திய சிற்ப சித்திர வேலைக்காரர், எழுத்து வேலைக்காரர் முதலியோர் வலக்கையை இழந்துபோனால், அவர்களுக்கு எவ்வளவு கஷ்டம் உண்டாகுமோ அவ்வளவு கஷ்டம் சாதாரணமான வில்லி வேடன் முதலியோர்க்கு உண்டாகாது. ஏனெனில், கோல், ஈட்டி முதலியவைகளை எளிதில் இடதுகையால் ஆளும்படி பழகிக்கொள்ளலாம். இடது கையால் எழுதப் பழகுவது அத்தனை சுலபத்தில் முடியாது. மேலும், இக்காலத்திய பல ஆயுதங்களும், கருவிகளும் வலது கையால் ஆள்வதற்கே ஏற்றவையாகச் செய்யப்பட்டிருக்கின்றமையால், வலக்கைப் பழக்கமே அவசியமெனத் தெளிவாகின்றது. சில இடங்களில் அற்ப ஜாதி ஜனங்கள் இடது கையையே விசேஷமாக வழங்கி வருகிறார்கள். ஆயினும், நாகரீகத்தில் சிறந்த ஜாதியார் அனைவர்க்கும் வலக்கைப் பழக்கமே விசேஷமாய் இருக்கின்றது.

ஃ

வேலை செய்வதற்கு வலதுகையைப் பழக்குவதற்குக் காரணம் இவ்வளவுதானே? இரண்டு கையும் சமமாகப் பழக்கினால் மிக்க நலமாய் இருக்குமல்லவா? வீணை வாசிப்பவர்கள் இரண்டு கைகளாலும் மீட்டி வாசிக்கின்றனரே! மகாரதர்கள் இரண்டு கைகளாலும் தேர்க் குதிரைகளை ஓட்டுகிறார்கள், பாணங்களைப் பிரயோகிக்கிறார்கள். அவர்களுக்கெல்லாம் இடதுகையில் ஏதாவது குறைவு தோன்றுகிறதா? இவ்வண்ணமே மிக்க சமர்த்தர்களான சித்திர வேலைக்காரர், ரணவைத்தியர், பாடகர், மல்லர் முதலியோர் இரண்டு கைகளையும் சமமாகவே பழக்கி வைத்துக்கொண்டிருக்கின்றனர். ஒன்றுக்கொன்று பக்ஷபாதம் இல்லாமல் கண்களைப்போலக் கைகள் இரண்டையும் நாம் ஒரே சமமாய் ஏன் கற்பித்து வைக்கக் கூடாது? ஆனால், அது சாத்தியமாயில்லையே! அப்படி சாத்தியமாயிருந்து, அவ்வாறாகப் பழக்கி வைத்திருப்போமாயின், அரசனுக்கு ஓர் அபாயம் வரும்பக்ஷத்தில் அந்தப் பட்டத்துக்கு எப்போதும் தயாராய் இளவரசன் சித்தமாய்க் காத்திருப்பதுபோல, வலக்கைக்கு ஓர் அபாயம் வரும்போது அதன் வேலையை ஏற்றுக்கொள்ள இடக்கை, அதுவும் உடன்பிறப்பான கை சித்தமாய் இருக்குமே. ஆனால், இப்போது இந்தக் கேள்வி கேட்பதில் பயன் ஏதுமில்லை.

அடிமைகளை உற்பத்திசெய்யும் தாய்மார்களாகவும், தந்தையர்களாகவும் இருக்கக்கூடாது. கல்யாணம் என்பது காமநுகர்ச்சிக்கு மட்டுமன்று. அது ஜீவியத்தை ஐக்கியப்படுத்தும் ஓர் ஏற்பாடாகும். திருமணங்கள் சரீர இன்பத்திற்கன்று; மனோ இன்பத்திற்குத்தான் என்பதை எல்லோரும் உணர வேண்டும் சரீரத்தினாற் பெறும் இன்பம் நெடுநாள் இனிமை தராது. ஆனால், பரஸ்பரம் மனோ இன்பம் (முன்னதை நினைத்துச் சுவைக்கும் இன்பம்) நுகரும் தம்பதிகளே தம்வாழ்க்கையை அழகுபெற நடத்திவைத்தவர்களாவார்கள்.

வலக்கைப் பழக்கம் எங்கும் பழமையாய்ப் பல தலைமுறைகளாக வழங்கத் தலைப்பட்டு நன்றாக வேரூன்றி எவர்க்கும் தொன்று தொட்டுவந்த இயற்கையாய்விட்டபடியால், அந்த வழக்கத்தை இப்பொழுது அழிப்பது எளிதான காரியமல்ல.

ஃ

இப்பூமியில் ஆதி நாளில் முதன் முதல் தோன்றிய மனிதனுக்கு வேலை செய்கிற பழக்கம் வலதுகைக்கே உண்டானதேன்? ஆதிதொடங்கியே அந்த இடக்கையையே பழக்கி வரக்கூடாதா? இதற்குக் காரணம் என்னவென்பதைப்பற்றிப் பலபேர் பலவிதமாக விசாரணை செய்துவந்தனர். அரிஸ்தோதல் என்பவரே முதலில் இவ்விஷயத்தைப்பற்றி உற்சாகமுண்டாக்கினவராகக் காணப்படுகின்றது. இடம், வலம் என்பவை மிருகங்களுக்கும் உண்டு; ஆயின், அவை நிலைமையைப்பற்றியல்ல, செய்கிற வேலையைப்பற்றியே நிர்ணயிக்கவேண்டுமென அவர் சொல்லுகிறார். வலதுகையின் வலிமைக்கும், சுமைகளை யெல்லாம் வெகுவாய் இடது தோளிலேயே தூக்கிக் கொண்டு போவதற்கும் காரணங்களை வெளியிடும்பொருட்டு அவர் வெகுவாய் எழுதியிருக்கிறார். வேலை செய்ய வலதுகையே பழகுவதற்கும், பூர்வகாலத்துப் பல சித்திரப் பதுமைகளிலும் காணப்பட்டிருக்கிறபடி சுமைகளை இடதுபுறத்திலேயே தூக்கிக்கொள்வதற்கும் காரணம்—மனித சரீரத்தின் அளவு இருபுறமும் ஸம பரிமாணமா யில்லாமையே—என ஒரு சரித்திரக்காரர் சொல்லுகிறார். அதாவது, மனித தேகத்தின் மைய நிலை, அதாவது நடுவான நிலை (Centre of Gravity) சரீரத்தின் மத்தியத்திலில்லை; கொஞ்சம் வலதுபுறமாகச் சாய்ந்திருக்கிறது. வலப்புறத்துச் சுவாஸாசயம் இடப்புறத்துச் சுவாஸாசயத்தைப் பார்க்கிலும் பெரிதாய் இருப்பதினாலும், தேகத்தினுட்புறத்திலுள்ள அவயவங்களுக்குள் மிகப் பெரிதான ஈரல் வலதுபுறமாயே அமைந்திருப்பதாலும் வலதுபுறத்தில் பளுவு அதிகமிருக்கிறது. இக்காரணம்பற்றி வலதுகைக்கு வேலை செய்ய வலிமை அதிகம் உண்டென்றும், சுமையை இடத்தோளில் தூக்குகிறவன் கொஞ்சம் வலதுபுறமாய்ச் சாய்ந்துகொண்டு போனால், அந்த மூட்டையின் சுமை வலதுபுறத்து உறுப்புகளின்மேல் நேராகத் தாங்குமென்றும் ஏற்படுகின்றது. ஆயின், வலது புறத்தில் அமைந்துள்ள பளுவான உறுப்புகள் இடக்கைப் பழக்கமுடையவர்

ஒரு தனவானும் ஒரு ஏழையும் ஒரு கோயிலில் சந்திக்கிறார்கள். இருவரும் முன்பு மிக்க அன்பாயிருந்தவர்களே. இப்பொழுதோ ஏழை குதூகலமாய்ப் பேச முயலுகிறான். தனவானோ அதிகம் நெருங்கிக்கொள்ளக் கூடாதென்ற கருத்துடன் தான் பேசும் வார்த்தைகளைக் கொஞ்சங் கொஞ்சமாய்க் குறைத்துக் கொள்கிறான்.

களுக்கு இடதுபுறத்தில் மாறியிருக்கின்றனவென்றும் சொல்லவேண்டியதாகின்றது.

ஃ

தேகத்தின் உட்புறத்து உறுப்புகள் ஒருவர்க்கு ஒருவிதமாயும், மற்றொருவர்க்கு மற்றொரு விதமாயும் மாறுபட்டிருப்பதை எவரும் காணவில்லை. ஆயின், இடக்கைப் பழக்கமுடையவர்களை மாத்திரம் பலர் கண்டிருக்கிறார்களாதலின், அப்படிப்பட்டவர்களுக்கெல்லாம் பளுவான உறுப்புகள் சரீரத்தின் இடது பாரிசத்திலேயே அமைந்திருக்கவேண்டும். ஆயினும், தேகதத்துவத்தைப்பற்றி விசாரித்த பண்டிதர்கள், வயது முதிர்ந்தவர்களுக்கு வலது புறத்திலே பளுவு அதிகமாகி, அதுகாரணமாக அவர்களுடைய சரீரத்தின் மையநிலை சிறிது வலது புறமாயே சாய்ந்திருக்கிறதென்றும், சிறுபிள்ளைகளுக்கும், நாற்கால் ஜெந்துக்களுக்கும் சரீரம் இருபுறமும் ஸம பரிமாணமாகவே இருக்கிறதென்றும் சொல்லுகிறார்கள்.

ஃ

சரீர தத்துவ சாஸ்திரத்தில் மற்றொரு தத்துவமுண்டு. அதாவது, மூளையில் இரண்டு பிரிவு இருக்கிறதென்றும், அந்தந்தப் பக்கத்திலுள்ள பிரிவு சரீரத்தின் அந்தந்தப் பக்கத்திலேயே தன்னுடைய காரியத்தைக் காட்டாமல், வலதுபுறத்துப்பிரிவு இடதுபுறத்தையும், இடதுபுறத்துப்பிரிவு வலதுபுறத்தையும் பற்றியிருக்கிறதென்றும் சொல்லுகின்றனர். ஆனதுபற்றி, மூளையின் வலது பாதியில் ஏதாவது துர்ப்பலமுண்டானால், அது சரீரத்தின் இடது பாரிசத்தையும், இடது பாதியில் ஏதாவது தீங்குண்டானால் அது வலதுபாரிசத்தையும் தாங்கும். ஆதலால், இளமையிலேயும் மூளையில் இடதுபுறத்து மடல் மிகப் பெரியதாக மலர்ந்திருப்பதனால், வலது புறத்து உறுப்பு மிக்க வலிமையாக வேலை செய்கிறதென்று ஒரு சாஸ்திரி சொல்லுகிறார். மற்றொரு தேகதத்துவ சாஸ்திரி தான் பரிசோதனை செய்த பல மூளைகளிலும் வலதுபுறத்தைவிட இடதுபுறத்துமடலே மிகப் பளுவாயிருக்கக் கண்டதாகச் சொல்லுகிறார். ஆயினும், வலக்கைச் சிறப்பைப்பற்றி விசாரிக்க இவ்வளவே போதாது. இன்னும் அதிக நுட்பமாய் ஆய்ந்தறிந்து உண்மை இன்னதெனக் கண்டறியவேண்டும்.

ஃ

கண்பார்வை மந்தப்படுகையில் தூரத்தில் வருவோரைப் பார்க்க முடிகிறதில்லை. ஏதோ வெள்ளைத்திரை யிட்டதுபோலும், இடையிலே ஒரு புகை நின்று மற்றவரின் முகம் தெரியாமற் செய்வதுபோலவும் தோற்றமாகிறது. சமீபத்தில் வந்தபிறகே முகம் தெரிகிறது. தூரத்தில் பொதுவாக உருவம் மட்டுமே தென்படுகிறது.

பிரகிருதியில் எல்லாப் பொருளும் இருபுறமும் ஸமபரி மாணம் உடையதாகவே இருக்கிறதென்பதில்லை; அவசிய மிருந் தால் மாறுபட்டிருப்பது முண்டு. கடற்கரைகளில் காண்கிற நத்தை முதலிய ஓடுள்ள ஜந்துக்களுக்கெல்லாம் ஒட்டிலிருந்து முன்புறம் அதிகமாக வெளியே வந்திருக்கக் காண்கிறோம். டாம்புகளுக்கு வலப்புறத்துச் சுவாஸாசயமே அதிகமாய்ப் பருத்திருக்கிறது. பறவைகட்கு சினைப்பை வலப்புறமாகவே இருக்கின்றது. கிளிகள் வெகுவாய் வலது காலாலேயே நின்றுகொண்டிருக்கக் காண்கிறோம். ஆப்பிரிக்கா தேசத்து யானைகள் வலது புறத்துக் கொம்பையே கிழங்கு முதலியவைகள் வெட்ட உபயோகிக்கின்றன. அதனால் அந்தக் கொம்பு ஒடிந்து விலை பெறுமற் போகின்றது. மனிதர்களுள் அநேகர்க்கு இடது கண்ணைப் பார்க்கிலும் வலது கண்ணுக்கே பார்வை அதிகமாயிருக்கின்றது. மணல் வெளிகளில் நடந்து போகின்றவர்களுடைய அடி வைப்பைப் பார்த்தால், வலது புறத்து அடியே அதிக தூரம் தாவியிருக்கக் காண்போம். ஆபினும், இவை யெல்லாம் ஒரு உத்தேசமாய் அறிவதற்கு ஏதுவாகுமே யொழிய, உண்மை இன்னதென நிச்சயிப்பதற்குப் போதுமான காரணங்க ளல்ல. வலக்கையே அதிகமாக வழங்குதற்கும், உலகத்து எல்லாச் சிறப்புகளும் வலக்கைக்கே தரப்பட்டிருப்பதற்கும், தேகதத்து சாஸ் திர நியாயத்தாலும், இயற்கையமைப்பாலும் ஏதோ ஒரு பிரதான காரணம் இருக்கவேண்டுமென்று மட்டும் உணர்கிறோம் நாளள விலே இதற்கான காரண உண்மை உறுதியாய் ஏற்படுமென்றும், அதற்கென்று ஆராய்வதற்குச் சிலர் தொடங்கி ஒரு முடிவுக்கு வருவார்களென்றும் நம்புகின்றோம். வலக்கை வாழ்க. இடக் கையும் வாழ்க. வலக்கையை இராமபிரானாகவும், இடக் கையை லக்ஷ்மணராகவும் கொள்ளலாம். லக்ஷ்மணர் இவ் வுலகைவிட்டு மறைந்தபின்பு இராமச்சந்திரருக்கு இவ்வுலக விருப் பம் இன்பமாயிருக்கவில்லை. அவரும் தக்ஷணமே இவ்வுலகு விடுத்து ஜோதியில் கலந்துவிடுவாராகின்றார். வலக்கைக்கு இடக்கையே பெரிய துணை. இடக்கையின் உதவிகொண்டே வலக்கை உலகை ஆள்கின்றதென்பது அனுபவ பூர்வமான உண்மை. எது பயனற்றது போல் தோன்றுகின்றதுவோ அங்குதான் இயக்கும் சூக்ஷ்மசக்தி பெரிதும் நிறைப்பப்பட்டுள்ளதென்பதையும் ஞாலவாழ்வினில் நாம் அவ்வப்போது அறிந்து வருகின்றோமன்றோ? ஆதலின், இடது கையையும் இரண்டாவது ஸ்தானத்தில் வைத்து நாம் கௌரவப்படு த்த வேண்டியவர்களாகிறோம். "வலது கைக்கு இடதுகை துணை" என்பது பழமொழி.

ஒருபக்கம் ஒருவருடைய தர்மங்கள் நடந்துகொண்டிருக்கலாம். மற்றொரு பக்கம் அவருக்குக் கடன் வாரண்டுகள் வந்துகொண்டிருக்கலாம்.

புருஷன் மனைவி யுத்தம்.

"ஐயா, போதுமையா, உமக்கும் ஒரு வந்தனம், என்னை உமக்குக் கல்யாணம் செய்துகொடுத்த என் தந்தைக்கும் ஒரு வந்தனம். எனக்கு நீர் வைத்திருக்கிற பெருமைக்கு ஊரெல்லாம் சிரிக்கிறது! காற்றில் பறக்கும் பிச்சைக்காரனுக்குத் தன் செல்வத்தையெல்லாம் கொடுத்து என்னை உமக்குத் தள்ளிய தந்தை ஒரு ஏமாறிய மனுஷன்தான். உம்மோடு இல்வாழ்க்கை செய்தது போதும் போதும். நீர் என்னென்னவோ எனக்குச் செய்துகொடுத்து விடுவதாய்ச் சொன்னீர். எதைத்தான் நீர் நிறைவேற்றினீர்? இனி உம்முடன் இருக்க எனக்கு இஷ்டமில்லை" என்கிறாள் மனைவி. புருஷனோ 'அப்படியே செய்; இக்ஷணமே வீட்டைவிட்டுப் போய்விடு" என்கிறான்.


இவ்விதம் கலகப்பட்டு கைகலந்து சண்டை போட்டுக்கொள்ளுதல் எத்தனையோ வீடுகளிலுண்டு. இவர்கள் அனைவரும் ஞாபகத்தில் வைத்துக்கொள்ளவேண்டிய விஷயம் ஒன்றுண்டு. ஒருவன் கோபம் மேலிட்டு மனம்பொங்கிக் கலகத்திற்குக் காத்திருப்பதாகத் தெரியவந்தால், அப்போது மற்றொருவன் அவனுக்கு எதிரியாக நின்று மேன்மேலும் அவனுடைய கோபத்தைத் தூண்டிவிடாமல், அதைத் தணியச்செய்யவாவது முயலவேண்டும். அல்லது, அவனுக்குக் கோபம் தீருமளவும் அவனோடு பேசாமல் ஒதுங்கியாவது நிற்கவேண்டும். ஒருவன் கோபிக்கும்போது எதிரி அதற்குப் பதில் ஒன்றும் பேசாமல் பொறுத்திருப்பானானால், அதனாலேயே அவன் வெட்கிக் கோபம் தணிவான். இதை நினைப்பில் வைத்து நடப்பின் கணவனும் மனைவியும் மற்றவர்களும் கலகப்பட்டு வருந்தித் தவிப்பதற்கு இடமிராது.

கனம் கிளாட்ஸ்ட்டன்.

கனம் பொருந்திய மெஸ்தர் கிளாட்ஸ்ட்டன் 1809-ம் வருஷம் டிசம்பர் மீ பிறந்தவர். இவருடைய புத்தியும், கல்வி கற்பதிலிருந்த ஆஸ்தையும் வாலிப வயதிலேயே வெளியாயிற்று. தாம் கலாசாலையில் இருக்கும் பொழுதே அந்தப் பாடசாலைப் பிள்ளைகள் வாங்கி விநோதமாய்ப் படிக்கும்படி சிறு பத்திரிகையொன்று பிரசுரம் செய்துவந்தார். பின்பு ஆக்ஸ்போர்ட் வித்தியாசாலையில் படித்துத் தம்முடைய 22-வயதில் மிகப் பண்டிதர் எனப் பிரசித்திபெற்றார் 1832-ம் வருஷத்தில் பார்லிமெண்டு சபையில் ஒருவராக நியமிக்கப்பட்டார். இவரது சிறந்த நடத்தையும், விடாது உழைக்கிற உழைப்பும் அதிக கண்ணியத்தைத் தந்தது. 1868-ம் வருஷத்தில் இங்கிலாந்தின் மந்திரியானார். கிரந்தங்கள் எழுதுவதும், தேக சௌக்கியத்திற்காக மரங்களைக் கோடரிகொண்டு வெட்டித் தள்ளுவதும் இவருக்கு விநோதமான காலக்ஷேபங்கள். பிரசங்கம் செய்வதிலும், வாதாடுவதிலும் ஒப்பற்றவர். தைரியமும், பிடித்ததைச் சாதிக்கும் திறமையும், ஈசுவர பக்தியும் இவருக்கு அதிகம். இரவில் வெகுநேரம் விழித்திருந்து வேலை செய்வார். இங்கிலாந்தின் பிரதம மந்திரியாக விளங்கிய இவர், இவ்வுலகில் ஒரு மனிதன் பிரவிசிக்கவதற்கு வேண்டிய பல பெருங் குணங்களும் அமையப்பெற்றுப் புகழோங்கி வாழ்ந்தார். விக்டோரியா மகாராணியாரின் காலத்தில் இவரது பெயர் பத்திரிகைகளில் ஸதா வந்தவாறு இருந்தது.

பொறுமையும் பிரீதியும் மேலிட்டுச் சுகமாக வாழ்தல்கூடும்.

பிரபஞ்சதரிசனம்



கிரீன்லாந்து தேசம் ஒரு பெருந் தீவு. அது அமெரிக்கா கண்டத்தைச் சார்ந்த உத்தர மகா சமுத்திரத்தில் உள்ளது. அது இந்தியாவில் ஏறக்குறைய பாதியளவுள்ள ஓர் மலைநாடு. எக்காலமும் பனி மூடிக்கொண்டிருக்கும். பனிக்கட்டிகளே மழையாகப் பெய்யும். செடி கொடி முதலிய விருக்ஷங்களேனும், ஜீவ ஜெந்துக்களேனும் அங்கு இல்லை. கலைமான், ஒருவகைக் கஸ்தூரி மிருகம், நாய் இவைகளே வாசம். சில ஜாதி மீன்கள் ஸமுத்திரத்தில் கிடைக்கும். அத்தேசத்து ஆதி குடிகளுக்கு எஸ்கிமோ என்று பெயர். இவர்கள் மாமிசங்களைப் பச்சையாகத் தின்று கலைமான் தோல்களை ஆடையாக அணிவர். ஸ்நானம் செய்வதே கிடையாது. ஒரு வருஷம் வரையிலும்கூட தேகத்தைக் கழுவாதிருப்பர். எண்ணெய்விட்டேற்றிய தீபத்தின் வெப்பத்தில் பனிக்கட்டியை உருக்கினால்தான் அவர்களுக்குத்தண்ணீருண்டு. அங்கே தண்ணீர் பொன் படுகிற பாடு. அவர்களின் வீடு பனியின் உபத்திரவம் தோன்றாதபடி பாதி பூமிக்குள்ளும்.பாதி வெளியேயுமாகப் பனிக்கட்டிகளால் கட்டப்பட்டிருக்கும். தூரத்துப் பார்வைக்கு அவ்வீடுகள் பெரிய புற்றுகள்போலத் தோன்றுகின்றன. அவ்வீடுகளுக்கு வாயில் வழிகளோ, புகைபோக்கிகளோ இல்லை. மார்பினால் ஊர்ந்துகொண்டேதான் அவ்வீட்டுக்குள் போகவேண்டும். மான் கொம்புகளைத் தண்ணீர் குடிக்கப் பாத்திரமாக உபயோகிப்பர். மீன் பிடித்து ஜீவிப்பர். கடவுள் ஒருவர் உண்டென்ற ஞானமே அவர்களுக்கில்லை.

ஃ

ஜப்பான் தேசத்தின் ஜனத்தொகை மூன்றரைக்கோடி. பத்திலொருபங்கு பூமிதான் பயிர் செய்யப்படுகிறது. அத்தேசத்தார் தமது மக்களைப்போலவே பிறருடைய மக்களையும் கொண்டாடுகிற சுபாவமுள்ளவர்கள்.

ஃ

ருஷியா தேசத்தின் விஸ்தீரணம் இவ்விந்தியாவைப்போல் ஆறு பங்கு பெரிதாயிருக்கிறது. ருஷியா தேசத்து ஜனங்கள் மரப்பலகைகளையே பகல் வேளைகளில் உட்கார ஆசனமாகவும், இரவுக்குக் கட்டிலாகவும் உபயோகிப்பர். அத்தேசத்து ஜனங்

பிள்ளைகளையும் பெண்களையும் சதை பெயரும்படி சில உபாத்யாயர்கள் பிரம்புகொண்டு வீசுகிறார்கள். இது எந்த உபகாரத்தைக் கருதியோ? படிக்கிறவர்கள் தரும் சம்பளத்திற்கு அடிகள் கைம்மாறு?

கள் நன்ருகப் பருத்துக் கொழுத்த பலசாலிகள். கலைமான்கள் பூட்டிய சக்கரமில்லாத ஒருவகை விசித்திர மான வண்டிகளில் ஏறிப் பனிப்பூமி களில் சவாரி செய்வதே அவர்க ளுடைய முக்கியமான பொழுது போக்காம்.

ஃ

இத்தாலி தேசம் சிற்ப சித்திர கீத வாத்தியங்களுக்குப் பிறப்பிட மெனப் பிரசித்தி பெற்றது. கவி களும் யாத்திரைக்காரர்களும் விசே ஷமாக வர்ணித்துக் கூறிய கம்பீர மான காட்சிகளெல்லாம் வெகுவாய்த் தென் இத்தாலியாவிலேயே இருக் கின்றன. அத்தேசத்தார் அழகிற் சிறந்தவர்கள். ராபீல், மைகேல் அஞ்சலோ, டான்டீ, கலிலியோ முத லிய மகா வித்வான்கள் அத்தேசத் தில் பிறந்தனர். ரோம், பிளாரன் ஸ, பலோஞ முதலிய பட்டணங்கள் அத்தேசத்தில் சிற்பசித்திர கீத வாத் தியங்களுக்கு மிகப் பிரசித்தி பெற் றவை.

ஃ

இந்த ஈசுவர சிருஷ்டியிலுள்ள விசித்திரக் காட்சிகள் பலவற்றுள் ளும் முதன்மையான காட்சி யாதெ ன்று நினைக்கிறீர்கள்? பொருளேது மில்லாமல் காட்சி மாத்திரம் தோன்ற யாராவது கண்டிருக்கிறீர்களா? அப் படிப்பட்ட காட்சி உலகில் ஒன்று உளதெனின், அதைவிட விசித்திப மாக மற்றெந்தக் காட்சியைச்சொல்ல லாம்? இப்படி யாவரும் கண்டு வியக் கத்தக்கதான காட்சி கானலின் காட்சியாம். ஆசியா, ஆப்பிரிக்கா முதலிய உஷ்ண தேசங்களில் கோ டை காலத்திலே காடு, மணல்வெளி’ ஆறு முதலிய இடங்களில் கானலை விசேஷமாகக் காணலாம். கோடை காலத்தில் நன்ருய் வெயிலெரிக்கும் பொழுது, அடுத்த காடுகளில் மேய் கின்ற ஆடு, மாடு, மான் முதலிய மிருகங்கள் தண்ணீரென்றெண்ணித் தாகந் தணித்துக்கொள்ள ஆவல் கொண்டு அதை நோக்கி ஓடும்படி, வெட்ட வெளிகளிலும், மணற்காடு களிலும் தெளிந்து தண்ணீர் ஓடுவது போலக் கானல் வீசுவதைப் பார்க்க வெகு விநோதமாயிருக்கும்.

ஃ

ஆஸ்திரேலியா தேசத்து மிரு கங்கள் மிகவும் அற்புதமானவை. அவை அத்தேசந் தவிர மற்றெங்கும் காணக் கிடைக்கா. நமது தேசங் களில் சாதாரணமாயிருக்கிற மிருகங் கள் அத்தேசத்தில் அருமை. ஆஸ்தி ரேலியாவில் குரங்குகளே யில்லை. ஆடு மாடு முதலிய அசைபோடும் மிருகங்களும், யானை, பன்றி வகை யைச் சேர்ந்தவைகளும் ஒன்றுமில்லை. மாமிசம் புசிக்கின்ற பலவகை மிரு கங்களுக்கும் பதிலாய் நமது தேசத்து நாயைப்போன்ற டிஞ்சோ என்னும் ஒருவகை மிருகமும், இரண்டொரு நீர்வாழ் ஜெந்துக்களுமே யிருக்கின் றன. வௌவால்களில் அநேக வித மும், பலவகை விசித்திரமான நீரேலிகளுமுண்டு. இன்னும் தேசத் துக்கே உரியனவாய்ச் சில மிருகங் கள் இருக்கின்றன. அவற்றுள் காங்காரு என்பது ஒன்று. மற்ருெரு மிருகம் வாத்து மூக்குபோன்ற மூக்கு உடையதாயிருக்கின்றது. அதை வாத்து மூக்கு மிருகமென்று வழங்கு

ஆபத்துக்கு உதவக்கூடிய மாமி வீடில்லாதவர்கள் எத்தனை பேர்! “மாமி வீடு” என்றபெயரே மருந்துக்கும் காணுமல் அற்றுப்போனவர்கள் எத்தனை பேர்!

கின்றார்கள். இந்த மிருகம் ஆஸ்திரேலியா தேசம் ஒன்றிலேதான் காணப்படுகிறது. இது தண்ணீரில் நீந்தும்; பள்ளங்களும் தோண்டும். அதற்காகவே, அதன் பாதங்களில் வலிவாய் நீண்ட நகங்கள் இருக்கின்றன. வாத்துமூக்கு மிருகம் நீரெலிபோல் ஆற்றங்கரைகளில் வளை தோண்டிக்கொண்டு அங்கே வசிக்கின்றது. இதற்கு நீர்ப் பூச்சிகளே ஆகாரம். இந்த மிருகத்தின் குட்டிகள் முட்டையினின்றுமே உண்டாகின்றனவென்றாலும் அவை தாயின் வயிற்றுக்குள்ளேயே குஞ்சு பொரிக்கின்றன. பின்பு அந்தக் குஞ்சுகள் முலைப்பாலைக் குடித்து வளர்கின்றன. இந்த மிருகங்கள் படுக்கும்போது பந்துபோலச் சுருட்டிக்கொண்டு படுக்கும். ஆஸ்திரேலியா தேசத்தில் மிருகங்கள் போலவே மரச்செடிகளும் அத்தேசத்திற்கே உரியனவாய்ப் புதுமை புதுமையாயிருக்கின்றன.

அமிர்தினிச் செல்வியை
ஆசையாய் ஏற்போர்
இறும்பூதுற்று
ஈகை மிகுந்து
உண்மை பேசிப் புதிய
ஊக்கம் தாங்கி
எல்லாம் தெரிந்து
ஏற்றம் கொண்டு
ஐயன் அருள் பெறுவர்;
ஒப்புயர்வில்லாது
ஓங்கி வாழ்வர்;
ஔவை மொழி யின்பம்
கண்டு மகிழ்வர்.

சி. வீ. ந. நாராயணன்.

நானா தேச சின்னங்கள்.

ஐரோப்பிய நாடுகள் ஒவ்வொன்றிற்கும் ஒவ்வோர் சின்னமுண்டு. அந்த சின்னங்களைக்கொண்டு அந்தந்த தேசங்களை வேடிக்கையாகக் குறிப்பிடுவதே வழக்கம். ஜெர்மனிக்குக் கழுகு, ரஷ்யாவுக்குக் கரடி, இங்கிலாந்திற்கு "புல்டாக்" (நாய்), அமெரிக்காவுக்கு நீண்ட தாடியுடனும் உயர்ந்த தொப்பியுடனும் கூடிய ஒரு மெல்லிய மனிதர் "அமெரிக்க மாமா". இதேபோல் அயர்லாந்துக்கு ஒரு பெண்ணையே எப்பொழுதும் குறிப்பிடுவதுண்டு "கருநிறமான ரோசலின்" என அயர்லாந்தை அழைப்பதுண்டு. அயர்லாந்துக்கு ஒரு பெண்ணின் சின்னத்தைக் கொடுப்பதற்குக் காரணமில்லாமலில்லை. ஏனெனில், அயர்லாந்தின் சுதந்திரத்திற்கும் முன்னேற்றத்திற்கும் அநேகமாக பல வீரப்பெண்களே காரணமாயிருந்தார்கள். அயர்லாந்தின் சுதந்திரப் போராட்டத்தின்போது அங்கு "ஜோன்" போன்ற வீரமாது ஐரிஷ் வீரர்களுக்குத் தைரியமூட்டினாள். இதுபோன்று பல வீரப் பெண்மணிகள் அயர்லாந்தில் தோன்றியிருக்கிறார்கள்.



பெண்ணும் புண்ணும்.

1. உலதும் அறிவும் உதவும் பகவனேன்பாள் நற்பெண்ணே
இலதும் உளதும் இயற்கைப்பா டேன்பவள் புண்ணே.

2. கல்வி யறிவாதும் கற்பே நிலையென்பாள் நற்பெண்ணே
கல்வியில் என்னேன்பாள் காசே பேரிதேன்பாள் புண்ணே.

3. கணக்கு மிலக்கணமும் *காதறநு பண்ணுஞ் சோல் நற்பெண்ணே
பிணக்குஞ் சமநும் பிணிவாழ்வும் பேணுவாள் புண்ணே.

4. புத்தக வாசிப்பில் புத்தியைக் கோண்டவள் நற்பெண்ணே
மேத்தவே ஊர்வம்பு மேதினியிற் கோண்டவள் புண்ணே.

5. உடலுக் கணிபோலே உண்மை உயிரேன்பாள் நற்பெண்ணே
திடமாக எக்காலந் தில்லுமல்லு சேய்பவள் புண்ணே. [பெண்ணே

6. நேறியல்லா நேறிநில்லாள் நல்லாரின் சோற் கேட்பாள் நற்
துறிசோல்லல் யேவல் கோள்சதுனங் கோள்ளுமவள் புண்ணே.

7. அதிகம் அறியினும் ஆய்வறிவ டக்கத்தாள் நற்பெண்ணே
பதியை எதிர்த்துப் பவிஷைத் தோலைப்பவள் புண்ணே.

8. ஆய் வறிவால் தன்னை அடக்கி வருபவள் நற்பெண்ணே
பேய்போலே வாய்திறந்து பேசி மடிபிடிப்பாள் புண்ணே.

9. மிகைச்சோல் கடுஞ்சோல் வீண் வீம்பு பழகாதாள் நற்பெண்ணே
பகைச் சோல் நகைச் சோல் பழிச்சோல் பழகுபவள் புண்ணே.

10. கோண்டான் விரும்புவ கோள்ளுவாள் ஆபரணம் நற்பெண்ணே
கண்டோர் புகழ்ந்திட காட்டுவாள் தன்னலம் புண்ணே.

11. பூசூடாள் பூணணியாள் பாங்க னயல்சென்றல் நற்பெண்ணே
பூசூடி பூணணிந்து பாங்காய் உலாத்துமவள் புண்ணே.

12. விடியுமுன்னே யேழுந்து மேய்ச்சுத்தம் சேய்பவள் நற்பெண்ணே
தடிபோலே நித்திரையில் தள்ளுவாள் காலத்தை புண்ணே.

13. தன்னுடை சீர் சேய்து தன் மானங் காப்பவள் நற்பெண்ணே
போன்னுடை மேல்விலக யோமுடலைக் காண்பிப்பாள் புண்ணே.

14. நயமாக எத்துலமும் நன்றே எனமோழிவாள் நற்பெண்ணே
அயலார் துலம்பழித் தாரையும் எள்ளுவாள் புண்ணே.

15. தன்புருடன் தாய்தந்தை தன்னுடைய் தாக்கோள்வாள் நற்பெண்ணே
வன்மமே சாதித்து வழக்குரைத்து நிற்பவள் புண்ணே. (தொடரும்)

மு. துரைப்பிள்ளை.

---

*காதறநு—காதல்தரு. (காதல்தரு—விருப்பந் தருகின்ற)

கஜேந்திர மோக்ஷம்.

(144-ம் பக்கத் தொடர்ச்சி.)

அச்சமயம் இந்த யானைக்குத் தன்னுடன் வந்த யானைக் கூட்டங்களைப்பற்றியாவது மற்றவிதமான சிந்தனைகளாவது தோற்றவில்லை. பூர்வ ஜன்மத்தில் தான் செய்த தபோமகிமையால் பகவானுடைய பிரணவ ஸ்வரூபமாக விளங்கும் "ஓம்" என்னும் புனிதமான அக்ஷரத்தை ஜபம் செய்து உயிர்விடத் தீர்மானித்து "ஓம் நாராயணாய நம:" என்று கதறிற்று. உடனே சர்வஸ்வரூபியாகையால், ஜகந்நிவாஸனாகிய பரமாத்மா துன்பமடைந்து தவிக்கும் கஜத்தை ரக்ஷிக்க வேதரூபமான கருடன்மீது ஏறிக்கொண்டு சக்ராயுதத்துடன் ஏந்தி விரைவாக கஜேந்திரன் இருக்குமிடம் வந்து சேர்ந்தார். ஸ்ரீ பகவானை கருடன்மீது பார்த்தவுடன் தன் தும்பிக்கையை உயரத்தூக்கி ஓ ஸ்ரீமந் நாராயணா என்று கூவி வணங்கிற்று. கருணைக்கடலான பகவானும், விரைவில் கருடனைவிட்டு இறங்கி, கஜத்தை உயரத்தூக்கிவிட்டார். முதலையையும் சக்ராயுதத்தால் பிளந்தார். உடனே, ப்ரம்ஹதேவரும், மற்ற தேவர்களும், ரிஷிகளும் புஷ்பமாரி பொழிந்தனர். ஸ்ரீ புருஷோத்தமனைப் புகழ்ந்தனர்.

ஃ

தேவலர் என்ற ஒரு முனிவர் இந்த ஸரஸில் ஸ்நானம் செய்ய இறங்கினர். அச்சமயம் ஹூ ஹூ என்ற ஒரு கந்தர்வன் ஸ்திரீகளுடன் ஜலக்கிரீடை செய்துகொண்டிருந்தான். வேடிக்கையாக, ஹூ ஹூ தேவலரின் காலைப்பிடித்து இழுத்தான். முனிவர் மிக்க கோபங்கொண்டு, அக்கந்தர்வன் முதலையாகக் கடவான்என்று சாபமிட்டார். உடனே அவன் மன்னிக்க வேண்டுமென்று முனிவரைப் பிரார்த்திக்க, அம்முனிவர் கூறியதாவது; 'ஏ கந்தர்வ, என் பாதத்தை எப்படி இழுத்தாயோ அப்படியே கஜேந்திரனைப் பிடித்துக்கொள். அக் கஜேந்திரனைக் காப்பாற்றவரும் பகவான் உன்னையும் இச்சாபத்திலிருந்து விடுவிப்பார் என்றார். ஹூ ஹூ என்ற கந்தர்வனே சாபத்தால் இம்முதலை வடிவமானான். ஸ்ரீ விஷ்ணுவின் ரூபத்தைத்தரிசித்தவுடன் முதலை கந்தர்வனாக மாறி, பகவானை வணங்கி தோத்திரம் செய்துவிட்டு கந்தர்வ லோகம் சென்றான்.

இக் கஜேந்திரனும் ஓர் சாபத்திற்குள்ளானது. முன் தமிழ்நாட்டில் இந்திரத்யும்னன் என்ற பாண்டிய அரசன், சிறந்த விஷ்ணுபக்தன். ஒரு

ஒரு வேலையை முடிக்குமுன்பு அதற்குள்ள கூலியை முதலில் கொடுத்துவிடுவது அந்த வேலைக்குக் கேடு. வேலையும் விரைவில் நடவாது. விவாகத்திற்குப் பிறகு சுகிக்கவேண்டியதை விவாகத்திற்கு முன்பே கண்டுவிட்டால், பின்பு அந்தப் பெண்ணை மணக்க மறுத்துவிடுவதும் பல நாகரீக இடங்களில் கண்ட சம்பவமே.

சமயம், மலய பர்வதத்தில் தவம் செய்து பகவானை ஆராதனம் செய்து வந்தான். மௌனவிருதம்பூண்டு, த்ரு டபுத்தியுடன் ஒருநாள் ஸ்ரீமந்நாராய ணனைப்பூஜிக்கலுற்றான். இவன் ஏகா க்ர மனத்துடன் தியானத்தில் ஆழ்ந் திருந்தான். அப்போது அநேக சிஷ் யர்களோடு அகஸ்தியமுனி அங்கு சென்றார். இம்முனிவர், மௌனமா யும், தான் வந்ததையும் கவனிக்கா மல், மரியாதை செய்யாத அப் பாண்டிய ராஜனின்மீது மிக சின ங்கொண்டார். இவ்வரசன் அசை வற்று யானைபோல் உட்கார்ந்திருந்த மையால், மந்தபுத்தி யுடையவனாக நினைத்து, இவன் கஜமாக ஆகக்கட வன் என்று சபித்தார். இவ்வரசனும் யாதொன்றும் கவலையில்லாமல், இச் சாபம் தெய்வவசத்தால் தனக்கு நேரிட்டதென்று நினைத்து, கஜமாக மாறிவிட்டான். இவ்வரசன் விஷ்ணு பக்தனாயிருந்தபடியால், இவனுக்குப் பிராணன் போகும் தருவாயில் ஸ்ரீ நாராயணஸ்மரணை ஏற்பட்டு விமோசனத்தை அடைந்து, மோக்ஷ மும் பெற்றான். இதுவே கஜேந்திர மோக்ஷ வரலாறு.

எஸ். வி. ஸ்ரீநிவாஸன்,
பி. ஏ., பி. எல்.

மனிதன் அதிகமான சிக்க லில் பலமாக அகப்பட்டுக் கொள்கிறபோதுதான், தான் மிகவும் சாமர்த்தியமாக வேலை களை நடத்தியிருப்பதாகத் தன க்குள் தானே மகிழ்ந்து தன்னை மெச்சி உச்சிமேல் தூக்கிவைத் துப் புகழ்ந்துகொள்ளுகிறான்.

தேறுதல் கூறுபவர் வேண்டும்.

எவ்வளவு கஷ்டங்கள் பட்டாலும் பாதகமில்லை. படு கிற ஒருவன் தன் கஷ்டங்களைத் தனது மனம் தாளாமல் வாய்விட்டுச் சொல்லிக்கொள்ளும்பொழுது, அதை அனுதா பத்துடனும் கேட்டுப் பரிந்து பேசுகிற யதார்த்த நெஞ்சினர்—இரக்க சிந்தையினர்—பக்கத்திலிருக்கவேண்டும். அவ்வித மின்றி, தன் கஷ்டங்களை முறையிடுவோன்மீதே சிடு சிடுத் துக் குதிரை ஏறுவதாயிருந்தால், அதனினும் மனக்கஷ்டம் வேறில்லை. அனுதாபமற்றவர்களுடன் கூடியிருப்பதைவிடப் பிரிந்து தூரத்திற் சென்றுவிடுவதுமேல். பிரிய முடியாவிடில் தனித்த ஓரிடத்தில் சென்றுக் கதறி யழுவதைத் தவிர வேறு வழியில்லை. ஒரு காயம் பட்டாலும், நோய் வந்தாலும், கீழே தடுக்கி விழுந்தாலும், ஒன்றைப் போக்கடித்து ஏங்கி னாலும்—அதற்கு இரக்கப்படுகிறவர்கள் வேண்டும்; அப்போ துதான் மனதிற்கு ஒரு ஆறுதல் ஏற்படும்.

பீகன்ஸ் பீல்டு பிரபு.

பீகன்ஸ் பீல்ட் பிரபு 1804-ம் வருஷம் டிசம்பர் மாதம் பிறந்தவர். யோக்கிய வயது வருவதற்கு முன்னமேயே இவர் கிரந்தங்கள் எழுதத் திறமை யுடையவராகி, 20-வயதிலே விநோதமான கற்பித கதைகளில் விருப்பமுடையவர்களெல்லாம் படித்து மிகவும் ஆனந்தப்படத்தக்க பல விசித்திரமான யுக்திகளும் சாதுரியங்களும் அமைந்த சிங்காரக் காவியங்கள் அநேகம் எழுதினர். 1874-ம் வருஷத்தில் கனம் கிளாட்ஸ்ட்டனுக்குப் பிறகு இங்கிலாந்தின் முதன் மந்திரியானர். இவர் காலத்தில்தான் 1875-ம் வருஷம் எட்வர்ட் சக்ரவர்த்தி இந்தியாவைப் பார்ப்பதற்கு வந்தார். அதற்கு ஏற்பாடு செய்தவர் இவரே. 1876-ம் ஸ்ரீ விக்டோரியா மகாராணியாருக்கு இந்தியா சக்ரவர்த்தினி யென்னும் பட்டத்தைச் சூட்டுவித்தார். பார்லிமெண்டில் இவருக்கு நேர் எதிராக நின்று எந்த விஷயத்திலும் இவர் சொல்வதற்கெல்லாம் விரோதமே சொல்லிவரும் மெஸ்தர் கிளாட்ஸ்ட்டன் பிரபுவும் சபையை விட்டு வெளிவந்தவுடன் இவரைப் புகழ்ந்து கொண்டாடுவார். இவருடைய கவிதா சாமர்த்தியத்தையும், சமத்காரமாய்ப் பேசும் திறமையையும் புகழாதவர்களில்லை. ஒழிவு காலங்களில் இவர் பொழுதுபோக்காக இயற்றிய புஸ்தகங்கள் பல. இவர் 1881-ம் வருஷத்தில் காலஞ்சென்றுர். உலகத்தில் அநேகர் தம்முடைய நன்மையையே பெரிதாகக் கருதிப் பல பெருங் காரியங்கள் செய்து பெருமை பெற்றுர்கள். இந்த பீகன்ஸ் பீல்டு பிரபுவோ தம்முடைய சாமர்த்தியங்களை யெல்லாம் தமது தேசத்தாருடைய நன்மைக்காகவே முக்கியமாய் உபயோகித்தவராவர்.

செவ்வாய் நக்ஷத்திரம்

செவ்வாய் அல்லது அங்காரகன் என்ற நக்ஷத்திரம் சுமார் இரண்டு வருஷம் அல்லது 780-நாளைக்கு ஒரு தரம் சூரியனுக்கு நேர் எதிராகவந்து சிவப்பு நிறத்துடன் மிகப் பிரகாசமாகத் தோன்றும். பூமிக்கும் சூரியனுக்கும் சமீபத்தில் செவ்வாய் ஏறக்குறைய எட்டு வருஷத்துக்கு ஒரு தரம் வரும். 15-வருஷத்திற்கு ஒரு தரம் செவ்வாய் தனது பூரண காந்தியோடு பிரகாசிக்குமாதலின், அப்போது தூரதிருஷ்டிக் கண்ணாடியால் பார்க்க நன்றாகத் தெரியும். செவ்வாய் பளபளப்பில் சுக்கிரனோடு சிறிதும் ஒப்பிடத்தக்கதல்ல. செவ்வாய் இந்தப் பூமியைப்போலத் தன்னைத் தானே சுற்றிக்கொண்டிருக்கிறபடியால் ஒருகாலத்தில் அதன் முன்புறம் தெரிகிறது. மற்றொரு காலத்தில் அதன் பின்புறம் தெரிகிறது. செவ்வாய் மண்டலத்தில் பொன்னிறமாகத் தோற்றும் இடம் தரை; கருப்பாய்த் தோற்றும் இடம் நீர் சூழ்ந்ததாகும். செவ்வாய் நம்முடைய சந்திரனைப் போல இரட்டத்தனை பெரியது. சூரியனுக்கும் செவ்வாய்க்குமுள்ள சராசரி தூரம் சுமார் 13-கோடியே 90-லக்ஷம் மைல். செவ்வாய் மண்டலத்தில் உயிர்வாழ்க்கைக்குவேண்டிய எல்லாப் பொருள்களும் அமைந்திருக்கின்றன. ஆனல் அங்கு உயிர் வாழ்க்கை செய்யும் மனிதர்கள் பிராணிகள் இருக்கின்றனரோ யாதோ! அவ்விஷயம் அதைப் படைத்த கடவுள் ஒருவர்க்கன்றி மற்றெவர்க்கும் தெரியாது. அவ்விதம் தெரிந்தால் அங்குள்ளோருக்கும் நமது முனிசிபாலிட்டியார் வரி போட்டுவிடுவார்களன்றோ! நமக்கு சுக்கிரன் எவ்வாறு தோன்றுகிறதோ, அவ்வண்ணமே செவ்வாய் மண்டலத்தில் வசிப்பவர்களுக்கு இப்பூமி சிறியதாகத் தோன்றும்.

புசிக்கும்போது சண்டையா?

எல்லா பாடுக ளும் படுவது இந்த வயிற்றுக்காகத்தான். அதை சமாதானமாகவும், சாந்த சித்தத்துட னும், சந்தோஷமாகவும், திருப்தியாக வும் உண்ணவேண்டாமா? எவ் வளவோ காய்கறிகள் வாங்கி வந்து போடுவது எதற்காக? பலவித காய் கறிகளும் சமைப்பது எதன் பொரு ட்டு? வாய்க்கு ருசிகரமாக இருப்பதற் குத் தானே? சமையல் எல்லாம் முடிந்து இலையில் உட்காரும்போது வீட்டுக்காரி ஒரு சண்டையை ஆரம் பித்து விடுகிறாள். சண்டை எப்படி யோ உண்டாய் விடுகிறது; எவ்வித மோ தயார் செய்யப்பட்டு விடுகிறது. சாதாரண ஒரு சிறு சங்கதியைப் பெரும் விஷயமாகப் பெருக்கி விடு கிறார்கள்.

ஃ

புசிக்கப் போகும் சமயத்தில் பள் ளிக்கூடத்திலிருந்தும் சிறுவன் வந்து சேர்கிறான். வந்ததும் இலை யில் உட்கார்ந்து விடுகிறான். தகப்ப னார் அதைக்கண்டு, வெளியிலிருந்து வந்ததும் கால்கைகளைக் கழுவிச் சுத் தம் செய்துகொண்டு அந்த ஈரத் தோடே புசிக்க உட்கார வேண்டு மென்று குமாரனுக்குப் புத்தி சொல் லுகிறார். அதையவன் கேட்டுக் கொண்டும் எழுந்திருக்கச் சோம் பியோ அதிக பசியாலோ உட்கார்ந்த படியே இருந்து விடுகிறான். புசிக் கும் வேளையில் கண்டிக்கக் கூடா தென்றும், எவ்விதமோ சந்தோஷ மாய்ப் புசிக்கட்டும் மென்றும் தந்தை மௌனமாகிறார். இதற்குள் தாய் வருகிறாள். கால்களைக் கழுவிக் கொண்டுவா என்று சிடுசிடுத்துப் பழித்துப் பேசுகிறாள். சிறுவனோ அந்தப் பழிப்பைத் தாளாமல் அழு கிறான். தந்தைக்கு அவனது கண் ணீரைக் கண்டு சகியாமல் "வெகு தூரத்திலிருந்து வெயிலில் அலுத்து வந்தவனை ஏன் இவ்விதம் கோபித் துச் சிடுசிடுக்கிறாய்" என்கின்றார்.

ஃ

மனைவிக்குக் கோபம் வந்து விடு கிறது. "நீங்கள் சும்மாயிருங்கள்" என்று தன் கையை ஒரு முழநீளம் நீட்டி அலக்ஷியமாகப் பேசுகிறாள். இது கணவனுக்கு அவமானமாகப் பட வே மனம் நொந்து, "சீ! பேசாமலிரு, கையை நீட்டிக்கொண்டு பேச வராதே" என்று சினத்துடன் கண் டிக்கிறார். உடனே மனைவி ஒரு துள்ளு துள்ளி எரிந்து விழுகிறாள். புருஷனுக்கு இன்னும் அதிக ஆத்தி ரம் பொங்குகிறது. "என்னடி! சாப்பிடப் போகும்போது சண் டையா? சமாதானமாகப் புசிக்கவேண் டாமா? எவ்வளவோ பாடு பட்டுப் பணம் தேடி, அதைச் செலவிட்டு உண்ணப் போகிற வேளையில் யுத் தமா? வாங்கி வந்து போடுவதால் தானே விழுங்கிவிட்டு இவ்வளவு திமிர் பிடித்து அலைகிறது" என்கி றார். மனைவியோ மேலும் எதிர்த்து "நான் சமைக்காவிட்டால் எல்லாம் ஆகி விடுமோ? நானேதான் எல்லாம் தின்று விடுகிறேனோ?" என்கிறாள்.

இருவர் முன்பின்னாக நடந்துபோயினும், அவர்களுக்குள் பேச்சுத் தொடருமாயின்; ஒருவரையொருவர் எட்டிப்பிடித்தே பேசி நடப்பர்.

"பணம் செலவிட்டு வாங்கிவராவிட்டால் சமையல் எது?—இந்த வாய் நீளமும் எது?" என்று கணவன் மனக் கொதிப்புடன் பேசுகிறான்.

ஃ

மனைவியோ ஒரு திருப்பு திருப்பி முகம் சுளித்து, சாதம் குழம்பு அனைத்தையும் அப்படியே போட்டுவிட்டுப் பாதி சாப்பாட்டிலிருப்பதையும் எண்ணாமல் பக்கத்து வீட்டிலே போய் உட்கார்ந்து கொள்கிறாள். கணவன் மிக்க நொந்து போய் சாதம் குழம்பு முதலியவற்றைத் தானே எடுத்துப் பரிமாறிக் கொண்டு புசித்து எழுந்திருக்கிறான். இவ்விதமே நித்தம் ஒரு சண்டை புசிக்கும் சமயத்தில் புறப்பட்டுக் கொள்கிறது. சிறு சம்பவம்-வார்த்தைகளின்மேல் வார்த்தையாக வளர்ந்து பெரியதாய் விடுகிறது. புசிக்கும் போது சண்டைக்குப் புறப்படுகிற மனைவி காலையில் நான்குமணிக்கே எழுந்து வீட்டு வேலைகளெல்லாம் தொடங்கிச் செய்வதில் என்ன பிரயோஜனம்? அவ்வளவுக்கு உழைத்துச் சமையல் செய்து என்ன பயன்? நாலு காய் கறிகளுடன் பாயசமும் வடையுமாகத் தயார் செய்திருக்கிற நாளில் தான் புசிக்கத் தொடங்கும் வேளையிலோ, அதற்கு முன்னரோ ஒரு கலகம் தொடங்கிக் கொள்கிறது. புசிப்பு கசப்பாய் மண்ணாய் விடுகிறது.

ஃ

எவ்வளவு தரித்திரத்தில் வாழ்ந்தாலும், கூழும் கஞ்சியும் பருகினாலும், உண்ணப்போகும் வேளையில் சந்தோஷமாகப் புசிக்கும்படி யிருக்க வேண்டும். திருப்தியாக உண்ணும் படிப் பிரியமாய்ப் பரிமாறவேண்டும். சாதம் இடுகிறவர்கள் அந்த வேளையில் காண்பிக்கும் உபசரிப்புக்குத் தக்கபடிதான் உண்ணுகிறவர்களின் புசிப்பும், இன்னும் ஒரு பிடி சாதம் அதிகமாய் உண்டு திருப்தி கொள்வது மிருக்கும். எவ்வளவு சம்பவங்கள் நேர்ந்தபோதிலும் புசிக்கும் பொழுது சமாதானம் வேண்டும். எவ்வளவோ உழைத்துப் பணம் தேடி வந்த கஷ்டத்திற்கு அந்தப் புசிப்புச் சமயம் ஒரு திருப்தி சாந்தம் இருந்தால் தான் ஒரு ஆறுதலாக இருக்கும். மேலும் உழைக்கவும், உற்சாகப் படவும் தேகத்தில் சக்தி யுண்டாகும்.

ஃ

பாதி போஜனத்தில் மனைவி வெடுவெடுப்புடன் பக்கத்து வீட்டுக்குச் சென்று விடுவதானால், பாதியோடு இலையில் உட்கார்ந்திருப்பவர்களுக்கு உண்டாகிற ஆத்திரம் கூற முடியுமோ? ஏதேது சமைத்து இன்னும் பரிமாறப் படாமல் இருக்கிறதோ—அது இலையில் உட்கார்ந்திருப்பவர்களுக்கு எப்படித் தெரியும்? பசியோடு உண்ணும் சமயத்தில் இந்த அலங்கோலமா? இவ்விதம் செய்யில் கணவனுக்கு வீட்டில் எப்படிப் பிடிப்பு, பற்றுதல் இருக்கும்? உழைக்கிறவனுக்கு ஒரு ஆயாச பரிகாரம் திருப்தி வேண்டாமா? மூடஸ்திரீகளுக்குச்சொந்த புத்தியுமில்லை. பிறர் கூறும் புத்தியும் கேட்பதில்லை. புத்தி சொல்லுகிறவர்களைவிடத் தங்களின் குறுகிய புத்தியையே உயர்வாக எண்ணிவிடுகிறார்கள்! இவர்களைக் கட்டி மேய்த்து வாழ்க்கையை நடத்துவதும் பெரிய பாடான பாடாயிருக்கிறது. புசிக்கும் போது சண்டையாயின் வாழ்வில் எப்படித் திருப்தி படுகிறது?

எனக்கென்ன போச்சு!

ஒன்றில் — ஒரு சங்கதியில் ஒருவன் சிக்கிக்கொள்ளாத வரையில் —பட்டுக்கொள்ளாதவரையில், மற்றவர்கள் அவனை நெருக்கித் தூண்டி அந்த ஒரு காரியத்தைக் கவனிக்கும்படி வேண்டுவர். அதை அவன் கவனிக்கத் தொடங்கியதும் தங்கள் கருத்து நிறைவேறிற்றென்று கண்டுகொண்டு, பிறகு அவன் செய்யும் காரியத்தை அற்பமாகவும், சாமான்யமாகவும் பேசி, தங்களுக்கு அதில் சிரத்தையில்லாததுபோல் விலகிக்கொண்டு; "எனக்கென்ன போச்சு, உன் பாடு, எப்படியாவது போ" என்பார்கள். ஒருவனை ஒன்று செய்ய ஏவிவிட்டு, அவன் அதைச் செய்யும்போது, "செய்கிறேனே" என்ற விசுவாசமில்லாமல் சிடுசிடுத்து "எனக்கென்ன போச்சு" என்று ஒதுங்குதலானது, நடுவழியில் கத்தியால் கழுத்தை அறுத்துவிடுவதற்குச் சமமான சண்டாளத்தனமாகும். அவன் அதைச் செய்யாவிடில், தாங்களே அந்தக் காரியத்தைச் செய்ய வேண்டியிருக்கும் என்பதை மறைத்து மூடிவிட்டு, மேலுக்கு இவ்விதம் சிரத்தை யில்லாததுபோலப் பசப்பிக்கொள்ளுதல் ஒரு சமர்த்தாகும். இத்தகைய சமர்த்துப் பேச்சுகளால் உண்மையாக உழைப்பவனைப் புண்படுத்துவதில் அடையும் லாபமென்னவோ?

ஃ

ஒரு பெண் தன் குமாரத்திக்கு ஒரு நகையைச் செய்யுமாறு தன் கணவனைப் பல மாதங்களாக வற்புறுத்துகிறாள். எத்தனையோ தடவைகளில் சொல்லித் தூண்டுகிறாள். கணவன் நெடுநாட் கழித்துப் பணத்தை மிச்சம் பிடித்துச் சேர்த்து அதற்குப் பவுன்கள் வாங்கித் தன் மனைவியிடம் தந்து 'கையிலிருந்த ரூபாய்க்குப் பவுன்கள் வாங்கியாயிற்று; இனி வேறு பணமில்லை; ஆதலின், ஆபீஸ் சம்பளம் வந்தபிறகே தான் நகை செய்யவேண்டும்; அதற்குள்ளாகத் தட்டானிடம் நகை செய்யக் கொடுத்து, அவன் தனது கூலிக்குத் தொந்தரை தரும்படி நடவாதே; சம்பளம் வரும்வரையில் பவுன்களைப் பெட்டியில் வைத்திரு" என்கிறான். இது நியாயமான வார்த்தையாயினும், மனைவி இதைச் செவியில் ஏற்றுக் கொள்ளாமல், உடனே நகை செய்யவில்லையே என்று முகம் கோணி, "எனக்கென்ன போச்சு, நகை செய்யுங்கள், செய்யாமலிருங்கள், நான்தானா அந்த நகையைப் போட்டுக்கொள்ளப் போகிறேன், எனக்கென்ன போச்சு" என்று வெறுப்பும் சிடுசிடுப்புமாய்க் குதித்துப் பேசுகிறாள். இதைக் கேட்ட கணவனின் மனம் நொந்து புண்ணாகிறது.

ஒரு ஆசிரியரின் மொழி:—ஸதா ஸந்தோஷத்தோடு கூடியிருக்க விரும்பும் எனக்கு எந்நேரமும் வருத்தப்பட்டுக்கொண்டிருப்பதென்பது முடியாத காரியம். எது எவ்விதமாயினும், எந்தச் சிக்கல் தொந்தரையிலுங்கூட பலாத்காரமாகவேனும் ஸந்தோஷத்தை என்னிடம் இழுத்துக்கொண்டால்தான்; என் ஆசிரிய வேலையை உற்சாகத்தோடும் செய்யமுடியும்.

பவுன்கள் வாங்கியதற்குத் தன் வீட்டிலுள்ளோரால் தான் ஆநந்தப்பட வேண்டிய சந்தர்ப்பம்—ஒரு சிரம பரிகாரம்—அவனுக்குக் கிடைக்காமலே போய்விடுகிறது. உற்சாகப் படுவதற்குப் பதிலாக அவன் மனம் ஒடிந்து சுருங்கிப் போகிருன். பவுன்கள் வாங்காமலும், எதிலும் பட்டுக்கொள்ளாமலும் ஒதுங்கி யிருந்தால் "எனக்கேன்ன போச்சு" என்ற வார்த்தையைக் கேட்காமலிருக்கலா மல்லவா என்று பலவாறு எண்ணமிட்டுச் சோர்ந்து போகிருன்.

ஃ

"எவ்வளவோ கஷ்டத்துடன் சிறுகச் சிறுகப் பணம் சேர்த்து பவுன்கள் வாங்கியதற்கு, "வாங்கி வந்தானே" என்கிற விசுவாசமில்லாமல், வாங்கி வந்ததற்கு சந்தோஷமான முகமே காட்டாமல், "எனக்கேன்ன போச்ச" என்று விலகிச் சிடுசிடுக்கிருளே; தனக்கு அதில் எந்த சிரத்தையு மில்லாததுபோலக் காண்பித்துக் கொண்டு அலக்ஷியமாய்ப் பேசி ஒதுங்குகிருளே; இந்த ஒதுங்குதலையும் சிரத்தையில்லாததையும் முதலிலேயே தெரிவித்திருந்தால் பவுன்கள் வாங்காமலே யிருந்து விடுவேனே; இருந்த பணத்துக்குப் பவுன்கள் வாங்கியாயிற்று, இனி நகை செய்வது சம்பளம் வந்தபிறகு ஆகட்டுமென்ருல், அதற்கு இவ்வளவு சிடுசிடுப்பும், விலகிக் கொள்ளும் பாவனையுமான பேச்சுகளா? "சரி, பவுன்கள் வாங்கியாயிற்று, நகை எப்படியும் செய்தாகிவிடும், நாம் தூண்டிய காரியம் முடிந்தது, இனி அதில் ஒரு சிரத்தையுமில்லாதது போல ஒதுங்கிக்கொண்டிருந்துவிடுவோம்" என்று நினைத்துப் பேசுகிற சமர்த்தா இது? ஒருவனை ஒன்றில் சிக்கிக்கொள்ள வைத்துவிட்டு, பிறகு அதில் எந்த சம்பந்தமுமில்லாதது போலத் தூர நின்றுகொள்வதில்—சிக்கிக்கொண்டவனுடைய மனம்—எவ்வளவு வேதனைப்பட்டுவிடுகிறது? ஒரு காரியத்திற்குக் கையில் பணம் இருக்கிறதா இல்லையா என்று பார்த்துக்கொண்டல்லவா செய்யவேண்டும். மனைவி என்ருல் கணவனோடு மனம் ஒத்து அன்னியோன்னியமாய், கணவனின் கை கடிக்கிற பணக்கஷ்டம் தெரிந்து நடக்கவேண்டாமா? ஆபீஸ் சம்பளம் வரும்வரை சற்று பொறுத்துக்கொண்டு, பவுன்கள் வாங்கி வந்ததற்குச் சந்தோஷ முகம் காண்பித்து உத்ஸாகப்படுத்தக் கூடாதா? "எனக்கேன்ன போச்சு" என்று கூறி விலகிக் கணவனின் மனத்தை ஏன் நோக வைக்க வேண்டுமோ? வீட்டுக்கு உழைக்கிருனே என்ற விஸ்வாசம்சற்றும் காணுமே" என்று உள்ளம் வெந்து செந்தணலாகின்ருன்.

ஃ

தனது நாயகனை, ஸம்ரக்ஷகனை, இகத்துக்கும் பரத்துக்கும் துணையானவனை, இவ்வுலகிலேயே தனக்கு ஒரு பெரும் ஆதரவா யிருப்பவனை இவ்விதம் வருந்தச் செய்வது சரியா? இவ்விதம் கணவனை வெடுவெடுத்துக் குத்தித் துளைத்துப் புண்ணுக்குவதைத் தங்களின் சமர்த்தாகவோ. கெட்டிக்காரத்தனமாகவோ இம் மங்கையர் கருதிவிடும் மூடமதிதான் என்னே! பரஸ்பரம் கணவனும் மனை

சிலர் தங்களின் வியாபாரத்திற்கு வேண்டிய வார்த்தைகளையும், அதற்கான முகச்சிரிப்புகளையும் மட்டுமே வைத்துக்கொள்ளுகிருர்கள். அதற்கு மேல் பேசாமல் நடுவில் வார்த்தையை முடித்துக்கொண்டு தங்களின் கடை வியாபாரமே கண்ணுய் விடுகிருர்கள்.

வியும் கஷ்ட சுகங்களில் ஒருமித்துப் பங்குகொண்டு ஒருவரை யொருவர் அனுஸரித்துப்போகாத இல்வாழ்க்கையில் எந்த மனோரம்மியமும் காண இயலா. கணவனிடமுள்ள பணத்தின் அளவு கண்டு, அதற்குத் தகுந்தவாறு சிக்கனமாய் நடவாத மங்கையின் சமர்த்தெல்லாம் நெய்க்குடத்தைக் கீழே கவிழ்த்த மாதிரியாய்ப் பிறகு துன்பமே அனுபவிக்க வைக்கும். கணவனைப் படுத்துகிற கொடுமையைப் பிறகு தான் படவும் வரும்.

ஃ

"எனக்கேன்ன போர்ச்சு" என்று சொல்வது பெண்பாலார் மட்டுமல்ல. உலகத்தில் பலரும் இவ்விதமே ஒதுங்குகிற ஸ்வபாவமுள்ளோராகவே இருக்கிறார்கள். ஒரு வீடு கட்டுவதற்கு ஒருவனை நம்பித் துணியப் போக, அவனே நடுவில் விலகி ஒதுங்கிக்கொண்டு "எனக்கேன்னபோச்சு" என்கிறான். சரிவரக் கவனியாத மாமியார் வீட்டைப் பெற்றவன், "எனக்கேன்ன போச்சு"என்று பல சங்கதிகளிலும் அவர்கள் ஒதுங்கிக் கொள்வதைக் காணவேண்டியவனாகிறான். தாங்கள் ஒருவனிடமிருந்து சுரண்டுகிறவரையில் சுரண்டிக் கொண்டு, பிறகு "எனக்கேன்ன போர்சு" என்றும் விலகிக்கொள்ளுகிறார்கள். கலியாணவீட்டுச் சண்டையில் "எனக்கேன்ன போச்சு" என்று கோபித்துக்கொண்டு வெளியேறுவோர் பலர். ஒரு மனஸ்தாபத்திலோ, சண்டையிலோ—அதையே தாங்கள் நழுவி ஒதுங்கிவிடுவதற்கு ஒரு சாக்காகவும், துணையாகவும் கொண்டு—"எனக்கேன்ன போச்சு" என்று தூரப்போய்விடுவோருமுண்டு. ஆதலின், உலகின் கபடபுத்திப் போக்குகளை ஒரு காரியம் செய்வதற்கு முன்பே சிந்தித்துப் பார்ப்பது நன்றாகும்.

> மூக்குப்பொடி காரமாயிருக்க ஒருநாள் விட்டுவிட்டுப் போட்டால் வெகுசுகம். மனைவி தித்திப்பா யிருக்க, அவளைத் தாய்வீட்டுக்கு அனுப்பி சிலநாள் பிரியவேணும். வீட்டில் தன் மீது கசப்பு ஏற்பட்டால்தான் வெளியூர் போய் வந்தால் அது மாறிவிடும். தேசசுகம் தவறினால் காலையும் இரவும் பழமும் பாலும். பகல் ஒருவேளைக்குமட்டில் போஜனமும் கொண்டால் சரியாகிவிடும்.

அமிர்த குணபோதினி:—நல்ல குணங்களை, அனுபவ ஆராய்ச்சிகளை, அமிர்தமெனப் போதிக்கும் இத்திவ்ய சஞ்சிகையின் 8 வது வால்யூம் 86-வது இதழ் நமக்குக் கிடைத்திருக்கிறது. இதன் ஆசிரியர் நாடறிந்த பிரபல அனுபவ ஞான சாஸ்திரியான ஸ்ரீமான் எஸ் ஜி. இராமானுஜலு நாயுடுகாரு அவர்களாவர். அடக்கமே உருவெடுத்த இதன் ஆசிரியர் ஏற்கனவே தமிழணங்கின் மலரடிகட்குப் பல்வேறு அரிய நூல்களின் மூலம் அர்ச்சனை செய்தவராவர். கட்டுக் கதைகளும், விகடமும், நாள்தோறும் பலர் எழுதலாம். ஆனால், உலகானுபவங்களைப் படம்பிடித்தாற்போல் எழுதி, வாசிப்பவர்களின் மனதை லயப்படச் செய்வதில் நமது இராமானுஜர் அன்றி. வேறு எவரையும் நாம் காணவில்லை—இனி காணப்போவதுமில்லை. ஆசிரியர் நீடூழி வாழ்க! தமிழ் நாட்டிற்கு வேண்டிய பல்வேறு கருத்துக்களும் ஒருங்கே பொதிந்துக் கிடக்கும் இப்பத்திரிகையை அனைவரும் ஆதரிக்கவேண்டியது கடமையாகும்.

"சீர்திருத்தம்", 31-3-34, திருப்பாதிரிப்புலியூர்.

கபட வேஷதாரிகள்.

தோளிலிருந்து செவியைக் கடிப்பது பாம்பின் குணம். இத்தன்மையானவர்கள் அந்தந்த வீட்டுக்குள்ளும் வெளியிலும் அநேகருண்டு. அவர்கள் பார்வைக்குமட்டும் கம்பீரமானவர்களாயும், வலிய வந்து நம்மோடு நட்பவர்களாயும் இருப்பார்கள். அவர்கள் பேசுவதெல்லாம் சிறிதுகால மட்டும்தான் நமக்கு இன்பம் தருவதுபோலிருக்கும். பின்பு அவர்கள் தங்கள் இயற்கையின்படியே அல்பபுத்தியைக்காட்டிப் பாம்பைப்போல வெடுக்கு வெடுக்கென்று எந்நேரம் பார்த்தாலும் பிடுங்கி நிமிஷத்தில் விலகினவண்ணமா யிருப்பார்கள்.

சிலர் எப்போதும் பிறர்மேல் பழிசொல்வதையே தொழிலாகக் கொண்டிருப்பதுமுண்டு. இப்படிச் சொல்லாவிடில் அவர்களுக்குத் தூக்கம் வராது. நாவின் தினவடங்கப் பிறர்மேல் இன்னு கூறக்கால் அவர்களுக்குப் பொழுது போகாது. பலவகையான நோய்களைப் போலவே, பொய் பேசுவதும், குறளைச் சொல்வதும், சிலருக்கு இயற்கையாகவே நோய்களாகி விடுகின்றன. சிலர் அயல் வாழப்பொறுமல் ஆத்திரத்துடன் பெருமூச்சு விட்டுக் கண்டபடிபேசிக் கபடம் தாங்கிக் கெடுவர். பேடித்தனமும் பொறாமையும் கபட வேஷதாரிகளின் பெருங்குணங்கள். அதனாலேதான் இவர்கள் தாமே நேர்நின்று செய்யாமல், பின்னே நின்று மற்றவர்களை ஏவிவிட்டுத் தங்களின் மனோரதத்தை நிறைவேற்றுவார்கள். இவ்வாறாக, வஞ்சகர், துரோகி முதலியவர்கள் இவ்வுலகமுண்டான காலமுதல் தீங்கிழைத்துக்கொண்டு வருவது இயற்கையேயன்றிப் புதிதல்ல. ஆயினும் ஸகவாச தோஷமே இக்கேட்டிற் கெல்லாம் மூலமென்பது நிச்சயம். நடுவு நிலைமை தவறி நடவாமையே மேலான தருமம்.

தேகப் பயிற்சியின் முக்கியம்.

வாழ்நாளில் காரியசித்தி யுண்டாவதற்கு முக்கியகாரணம் தேக சவுக்கியமே. பெரும்பாலும் மனுஷர் இப்படி நினையாமல் பணம் ஒன்றுமட்டுமே எல்லாம் சாதித்துவிடுமென நம்புகின்றனர். படிப்பு புத்தியைப் பண்படுத்துவதுபோலவே, உழைப்பு தேகத்தைப் பண்படுத்தும். ஆதலால், ஒவ்வொருவனுக்கும் ஒழிவு காலத்தில் செய்ய ஏதாயினும் ஒரு வேலையும், அப்படித் தேகத்தால் உழைத்து வேலைசெய்யச் சிறிது ஒழிவுகாலமும் இருப்பதே எத்தேசத்தாருக்கும் மிகவும் ஏற்றமான நிலையாம். எவ்வகை அறிவும், இயற்கை செயற்கை இருவகைப் பொருளுடன் பயிலும் எவ்வகைப் பயிற்சியும் புத்திக்கு விநோதமாவதன்றி வலிமையும் உண்டாகும். பந்தடிப்பது கைகால்களுக்கு நல்ல முயற்சியாகும். சோம்பலைத் தவிர்த்து, உனக்குள்ள ஒழிவுகாலம் எல்லாம் பயன்பட வருந்தி உழை. மனம் முயற்சியின்றி இருக்கும் வேளைகளில்தான் கெட்ட ஆசைகள் எளிதில் நுழைகின்றன. உழைப்பின்றிச் சுகித்துச் சோம்பியிருக்கும் எவனும் தீய ஆசைகளின் வசப்படலாம்; அவன் சுத்தனுமிரான். மெய் வருந்தி உழைக்கும் உழைப்பே தீவினை அகற்ற உதவும். ஒருவன் கற்றுத்தேர்ந்து வல்லவனாவதற்கு மனோமுயற்சியுடன் சரீரமுயற்சியும் வெகு முக்கியமானது. கைப்பாடு படுவது இழிவென்று எண்ணல் பெரிய அறியாமைகளில் ஒன்று. தமக்கும் பிறர்க்கும் உபகாரிகளாகும் திறமையைத் தருவது தேகமுயற்சியொன்றே. தேகத்தால் உழைத்து ஜீவிக்கவேண்டியவர்கள் ஒரு கைத்தொழிலில் பயிலும்போது கைச்சாதுரியமும் தேகசக்திப் பெருக்கமும் கொள்ளும்படியாகிறது. இந்த நலம் செயலற்று வீண்பொழுது போக்குவார்க்கு இல்லவேயில்லை.

நாகானந்தம்

(24-ம் பக்கத் தொடர்ச்சி.)

ஜீமூதகேது வின் வார்த்தையைக் கேட்ட சங்கசூடன் "நாகக் குலத்து தித்து, சங்கசூடனென்னும் பெயர் வாய்ந்த நான் கருடனுக்குப் பலியாக நாகராஜனால் அனுப்பப் பட்டேன். சுருக்கமாகச் சொல்லுகிறேன்; கேளும். மிகவும் தயைவாய்ந்த ஒரு வித்யாதரன் தன்னைக் கருடனுக்குப் பலியாகக்கொடுத்து என்னைக் காப்பாற்றினான்." என்றான். காதுக்குள் நாராசம் சென்றதுபோன்ற அவ்வார்த்தையைக் கேட்ட ஜீமூதகேது "ஐயோ! என் மைந்தனைவிட அதிகமான ஜீவகாருணியம் வாய்ந்த வேறொரு வித்தியாதரனும் மண்ணுலகி லுண்டோ? ஆ! ஜீமூதவாகனன் இறந்தானே! நான் பாக்கியமில்லாதவனே. தந்தையிடம் பக்தி மிகுந்த குழந்தாய்! நீ பரலோகத்துக்குச் செல்லும் போதும் உன்னுடைய சூடாமணியை என் காலில் வீழ்த்தியே சென்றாய். உன் வணக்கத்தை இறக்குந் தருவாயிலும் நீ மறக்கவில்லை.' என்றுகூறிப் புலம்பினான். அவருடைய மனைவி "குழந்தாய்! நீ எனிப்படிச் செய்தாய்? பெற்றோருக்குப் பணிவிடை செய்வதை விட்டு மற்ற எதும் விரும்பாத நீ தந்தையை விட்டு ஸ்வர்க்க சுகத்தை யனுபவிக்க எப்படிச்சென்றாய்?" என்றனள். மலயவதியோ "என் மனதில் தோன்றிய எண்ணமே நிச்சயமாயிற்று. ஆ பிராணநாதா! உங்களை நான் இனி எங்கு காண்பேன். இச்சூடாமணியை மார்பில் தரித்து, அக்னியில் பிரவேசிப்பதே நலமாகும்" என்றாள்.

இவர்களுடைய துக்கத்தை நோக்கிய சங்கசூடன் "ஆ! எனக்காக இன்று வித்தியாதரகுலமே அழிந்துவிடும்போலத தோன்றுகிறது. நாமொன்று நினைத்தால் தெய்வமொன்று நினைப்பது வழக்கமே. ஆயிலும் நான் ஒருபாயம் செய்கிறேன்." என்று நினைத்து, ஜீமூதகேதுவைப் பார்த்து "இராஜராஜனே! நாமெல்லோரும் மலயமலையில் கருடனிருக்குமிடத்திற்குச் செல்வோம். என்னைக் கண்டவுடன் கருடன் ஜீமூதவாகனனை விட்டு விடவுங் கூடும்." என்றான். அதைக்கேட்ட ஜீமூதகேது "நீ சொல்வது உண்மையே;" எனக்கூறி எல்லோருடனும் மலய பர்வதத்துக்குப் புறப்பட்டான்.

இனி நாம் நமது கதாநாயகனுடைய நிலைமையைக் கவனிப்போம். ஜீமூதவாகனனை நாகமென நினைத்து மலய பர்வதத்துக்கு எடுத்துச்சென்ற கருடன் பிரதிதினமும் நாகத்தைப் பக்ஷிப்பது போல, ஜீமூதவாகனனுடைய மாமிசத்ஸதயும் பக்ஷிக்கலானான். ஆயினும் அவனுடைய முகம்

ஒருவர்மீது சந்தேகம் ஜனித்துவிட்டால், பிறகு அவரது எந்தச் செயலிலும் சந்தேகமே காணப்படும். மனதிற்குள்ளாகவே மறைக்கப்படும் சந்தேகம் கொடிய விஷம்போன்றது.

சிறிதும் வாடாததுகண்டு "ஆ பிறந்ததுமுதற்கொண்டு புஜங்களைப் புசித்தபோதிலும் நான் இவ்வாச்சரியத்தை இன்றுவரையில் கண்டதில்லை. அளவற்ற இரத்தத்தைக் குடித்தபோதிலும் தைரியக்கடலாகிய இம்மகானுபாவன் வருத்தமடையவில்லை. மாமிசத்தைத் துண்டிக்கும்போது உண்டாகும் துக்கத்தையும் பொருட்படுத்தாத இவனுடைய முகம் சந்தோஷக்குறியுடன் காண்கிறது. உடலில் எவ்விடத்திலும் சிறிதேனும் மயிர்க்கூச்சில்லை. நான் இவனுக்கு அபகாரம் செய்தபோதிலும் இவனுடைய பார்வையோ எனக்கு உபகாரம் செய்பவன்போலக் காட்டுகிறது. இப்படிப்பட்ட புருஷனை நான் புசிக்கமாட்டேன். இவன் யாரென அறியவேண்டும்." என நினைத்துச் சும்மா யிருந்தான்.

கருடன் சும்மா யிருப்பதைக் கண்ட ஜீமூதவாகனன் "ஓ கருட! என்னுடலிலுள்ள இரத்தக் குழாய்களிலிருந்து இன்னும் குருதிபெருகிக் கொண் டிருக்கிறது. என்னுடலில் இன்னும் மாமிச மிருக்கிறது. உன் வயிறும் நிறையவில்லைபோல் காண்கிறது. நீ என் என்னைப் புசிக்காமலிருக்கின்றாய்?" என்றான்.

இதைச்செவியுற்ற வைநதேயன் "ஆஹா! இத்தசையிலும் இவ்வளவு தைரியமாகக் கூறும் இவன் யாரென அறியவேண்டும்" என நினைத்து ஜீமூதவாகனனை நோக்கி "ஓ மகாபுருஷ! என்னுடைய மூக்கினால் உரிந்த உன் இரத்தத்தை நீ உன் தைரியத்தினால் திரும்பவும் வாங்கிக்கொண்டாய்! நீ யார் என்பதை எனக்கு முதலில் அறிவி." என்றான்.

ஜீமூதவாகனன் "நீ இவ்வாறு பசியோடு வருந்துகையில் நான் உன்னோடு ஒன்றுங் கூறமாட்டேன். என்னுடைய மாமிசத்தையும் இரத்தத்தையும் உட்கொண்டு நீ உன் பசியையாற்றிக்கொள்" என்றான்.

இச்சமயத்திலேயே ஜீமூதகேதுவும், அவனுடைய மனைவியும், மலயவதியும் கையில் நெருப்பை யேந்திப் பின்தொடர, சங்கசூடன் ஓடி வந்து கருடனைக் கண்டு "கருட! அவசரப்படாதே! அவசரப்படாதே! அவனை விட்டுவிடு! என்னைத் தின்று உன் பசியை யாற்றிக் கொள்! நானே வாஸுகியால் உனக்கு ஆகாரமாக அனுப்பப்பட்டவன்." என்றான்.

இருவருக்கும் கொலை யடையாளங்களிருப்பதைக் கண்ட கருடன் எவன் நாக மென்பதை யறியாமல் திகைக்க, சங்கசூடன் "கருட! எங்களிருவரில் நானே நாகம் எனக்கு இதோ படமிருப்பதைப் பார். இப்பொழுது நீ யாரைக் கொன்றாயோ அவனே வித்தியாதர குலதிலகனாகிய ஜீமூதவாகனன்." என்றான்.

(தொடரும்.)

K. S. ஸ்ரீநிவாசாசாரியார்.

எவ்வளவோ ஆவலுடன் ஒரு சந்தோஷத்தை அனுபவிக்க நினைத்திருக்கையில் அதைக் கெடுக்க ஒரு கலகமோ. ஒரு விபத்தோ நேர்ந்துகொள்கிறது. எவர்கள் நமக்கு ஆபத்தில் உதவுவார்களென்று நினைக்கிறோமோ அங்கேதான் நாம் ஏமாறுதலும் மோசமும் அடைகிறோம். நமது குழந்தைகள் என்று வளர்த்து உன்னத ஸ்திதிக்குக் கொண்டுவர, அவர்களோ காதல் வலையிற்பட்டு மற்றோர் உயிரை விரும்பி நாடுவதில் சிந்தை அதிகமாகிறார்கள். ஞாலத்து வாழ்க்கை யெல்லாம் இவ்விதமாக ஒவ்வொரு குறைவும் கோணலும் கொண்டதுதான்.

தன் துயர்க்கு ஏங்கல்.

என்னே இறைவா! இவ்வுலகினிலே
இன்னுயிர் போன்று இதயம் கவர்ந்த

அன்பரை யெல்லாம் அருகினிலின்றி
என்றும் தூரத்(து) இருத்தியே விடுகிறாய்!

மலர் முகம் கண்டு மகிழ்வதற்கின்றி
பலநாள் அவர்தம் பரிவுறு கடிதம்

பெற்றிடச் செய்து, பேசிடல் என்றே
உற்றிட வைத்து, உவந்திடச் செய்து,

உடனே பிரித்து, உள்ளத்தை இடர்க்
கடலில் அமுக்கக் கருதிடுகின்றாய்!

ஊழ்வினைப் பயனால் ஒருவரை ஒருவர்
வாழ்நாள் முழுதும் வருந்த பிரித்து

வைத்திடுகின்றாய்! வருவதன் முன்பே
சேத்தவர் ஈமம் சேர்ந்திட, மறுநாள்

இல்லத்திலவர் இருந்த இடத்தைச்
சோல்லவரிய துயர் மிகுந்தவனாய்க்

கண்ணாற் கண்டு கதறிப் பதறப்
பண்ணிடுகின்றாய்! பரமா! அன்பு

கோண்டு பெரிதும் குலவும் மனத்தைக்
கண்டும் இரங்கிக் கருணை செய்யாயோ?

அன்பர் துன்பம் அகல்வ(து) எக்காலம்?
என்னே! நீ செய் இன் விளையாட்டே!

ஆரியூர்—வ. பத்மநாப பிள்ளை.

ஜப்பானில் ஸ்திரீகளின் வசீகரமான யோசனைகளைக் கணவன் அலக்ஷியம் செய்வதில்லை. அதேவிதமாகக் கணவன் சர்வ சக்தியுள்ள புருஷன் என்பதை மனைவி யுணர்ந்து அதற்கேற்பப் பயபக்தியுடனிருப்பதினின்றும் வழுவுவதில்லை. வீட்டில் மனைவியின் செல்வாக்கிற்கு மீறிய அதிகாரமே கிடையாது. மனைவியும் கணவனுக்குக் கீழ்ப்படிந்து அந்தரங்க விசுவாசத்துடன் நடந்துகொள்ளுமாறு பரம்பரையாய்ப் பழக்குவிக்கப்படுகின்றனர். ஒவ்வொரு பெண்ணுக்கும் 6-வயது முதல் 12 வயது வரையில் கட்டாயக்கல்வி போதிக்க சட்டம் வற்புறுத்துகிறது.



ஹாஸ்ய சஞ்சீவினி



சேஷி:—உன் வீட்டுக்காரர் அதிர்ஷ்டசாலி. சீக்கிரம் போய்விட்டார். அவருடைய பாக்கியந்தான் நீ இப்படி வெறுங்கழுத்தாய் உட்கார்ந்தது.

அலமேலு:—எண்டியம்மா அப்படிச் சொல்றே?

சேஷி:—உயிரோடிருந்து உன்னிடம் பிடுங்கல்கள் படுவதைவிட, கடவுளிடம் போய்விட்டது அவர் செய்த பெரிய பாக்கியமல்லவா?

அலமேலு:—இது உன் வாய்க் கொழுப்பா! இன்னும் என்னென்ன பேசுவே?

சேஷி:—அப்போது அவரை நீ பிடுங்கித் தின்றதுபோல இப்போது யாரிடமாவது உன் கைவரிசை, வாய் வரிசை, மூஞ்சியைத் திருப்பிக் கோணுகிற வரிசை ஏதாவது காட்ட முடியுமோ? அது செல்லுமோ? எவருமே உனக்கு உட்படுகிறவர்களுமல்ல, உன்னை லக்ஷ்யம் செய்கிறவர்களுமல்ல, அந்தக் காலம் மலையேறிவிட்டதடியம்மா, என்னோடு சண்டையிடுகிறாயா? அப்படியானால் தொடங்கு, நானும் வேறு வேலையில்லையேயென்று உன்னிடம் ஒரு சண்டை பிடிக்கத்தான் வலியவந்திருக்கிறேன்.

ஃ

புருஷன்:—எனக்கு இட்டிலி போதாது, இன்னொரு இட்டிலி வை.

மனைவி:—இப்படித் தின்றால் என்ன செய்யட்டும்? என்னால் இட்டிலிக்கு மாவு அரைக்க முடியவில்லையே.

புருஷன்:—ஒரு இட்டிலி கூடக் கேட்டால் அதற்கு இப்படி எரிந்து விழுகிறாயே? உன் பேய்க்குணம் எப்போது தொலையுமோ?

ஃ

பிச்சைக்காரன்:—அம்மா, பசிக்குமுத்து போடுங்கோ. அம்மா தாயே, பிச்சை போடுங்கோ.

வீட்டு மனுஷி:—எங்கள் வீட்டில் "முத்து"வும் இல்லை; "பிச்சை"யும் இல்லை "கிருஷ்ணன்*தான் இருக்கிறான். (S. வாசுதேவன்.)

ஃ

தாத்தா:—எண்டா! விளக்கின் கீழ் உட்கார்ந்துகொண்டு புஸ்தகத்தோடு அழுகிறாய்?

பேரன்:—நேற்றிக்கி அம்மாதான் இவ்வளவு நேரம் விளையாடுகிறாயே! கொஞ்சநேரம் புஸ்தகத்தை வைத்துக்கொண்டு அழுகிறதுதானே என்றது. அதற்குத்தான் இப்போது அழறது. (S. ரங்கநாதன்.)

ஃ

ஒருவர்:—நான் நீங்கள் இறங்கியிருக்கிற இடத்துக்கு வந்தபோது, உங்களைப்பற்றி அவ்வீட்டார் அவ்வளவாய் சந்தோஷப்படுவதாகக் காணோமே?

கடவுளிடத்திலும் தன்னிடத்திலும் நம்பிக்கையில்லாதவன்தான் பிற மனிதரைக் கண்டு பயப்படுவான்.

மற்றவர்:—அவ்வளவு குறிப்பாக நீங்கள் அறிந்தது எப்படியோ?

ஒருவர்:—உங்களை விசாரித்ததற்கு உள்ளே யிருப்பதாகச் சலிப்புடன் பதில் சொன்னார்கள். அதிலிருந்தே நினைத்தேன்.

மற்றவர்:—அப்பொழுதே நாங்கள் அங்கிருந்து புறப்பட்டிருந்தால் இப் படி அவர்கள் சலித்துக்கொள்ளும் படி யிருந்திராது. வந்த இடத்தில் வேலைகள் சீக்கிரம் முடியாததால் இந்தப் பாடும் தவிப்பும். இனி எங் கள் ஜென்மத்துக்கும் குடும்பமாய் இங்கு வரமாட்டோம். இது நல்ல படிப்பினைதான்.

ஃ

வேணு:—உனக்குத்தான் மனைவி யிருக்கின்றாளே; மறுபடியும் ஏன் இன்னொரு விவாகம்?

ராமு:—என்னை மருமகனாகக் கொள்பவர் ஒரு பெரிய தனவான். அவர் தமது புத்திரிக்கே ஸர்வ சொத் துக்களையும் எழுதி வைத்திருக்கிறார். அவளை ஸம்ரக்ஷிக்க எனக்கு ஒரு காசும் செலவில்லை. விவாகமான பிறகும் அவரிடமே புத்திரி யிருப் பாள். நான் புது மனைவியிடம் ஒரு மாதமும், பிறகு என் ஊர் வந்து பழைய மனைவியிடம் ஒரு மாதமும் இருப்பதாக வார்த்தை. இருவரும் ஓரிடத்திலிரா ராதலின் சண்டை யில்லை. என் முதல் மனைவிக்கும் ஆயிரம்ரூபாய் நகைகள் தருகிறார்கள். இதில் நான் செய்யவேண்டிய வேலை யெல்லாம் சீமானின் புத்திரிக்கு ஒரு ஆண் குழந்தையைத் தருவதே.

வேணு:—அப்படியானால், குட்டி கள் போடுகிற உத்தியோகத்திற்குப் போகிறாயா?

ஃ

மனைவி:—ஐயா, இனியாகிலும் உம்மை ஏதும் தெரியாத படித்த முட்டாளென்று ஒப்புக்கொள்ளும்.

புருஷன்:—உன்னைக் கல்யாணம் பண்ணிக் கொள்ளும்வரை என்மீது அந்த அபிப்பிராயத்தைப் பிறர்கொள் ளாதபடி இரகஸ்யமாய் வைத்திருந் தேன். மனைவி—புருஷன் இருவருள் எவருமே எதையும் மறைக்க முடிகிற தில்லைதானே.

மனைவி:—இப்படியே உலகத்தில் வெளி வேஷத்தைக் கண்டு ஸாது ஜனங்கள் மயங்கி ஏமாந்துபோகின்ற னர். ஒவ்வொருவருடைய குணத் தையும் தீர விசாரித்தாலன்றி உண் மை தெரிகிறதா?

புருஷன்:—என் கண்ணே தெரியா தென்பதே விடை!

ஃ

அலமேலு:—நான்ரொம்ப ரோசக் காரி யாச்சுதே. இனிமேல் அவன் வீட்டு வாசலை மிதிப்பேனா? அது ஏது? நடக்காது.

பாக்கியம்:—அவன் உன்னை லட் சியம் செய்து கூப்பிடப்போகிறா

ராமன் எழுதிய நூலைப்பார்த்துப் பொன்னன் அலக்ஷியமாய் அபிப்பிரா யம் சொல்லுகிறான். பிறகு பொன்னன் தான் எழுதிய ஒரு நூலை ராமனிடம் தரும்போதுதான் அவன் என்ன அபிப்பிராயம் சொல்லுகிறானோ என்ற கவலையுண்டாகிறது. தன்னுடையது என்பதில் ஒரு கவலை, சிரத்தை உட னே தோன்றிக்கொள்ளும். பிறருடையது என்பதில் அவ்வளவுக்குக் கவனம் ஏற்படுவதில்லை.

னென்று நீ நினைத்திருக்கிருயா? அது எது? நடக்காது.

அலமேலு:—அவன் வீட்டு நாற்றச்சோறு வேணுமென்று யார் அலைகிருர்கள்? நான் அப்படி அலையவில்லை. மகாராணி போலிருக்கிறேன்.

பாக்கியம்:—உன் வீட்டு நாற்றச்சோறு வேணுமென்று யார் அலைகிருர்கள்? அவன் அப்படி அலையவில்லை. அவனும் மகாராஜாபோலவே இருக்கிருன்.

அலமேலு:—உன்னிடத்தில் வாய் கொடுக்கவந்தது போதும். போடியம்மா போ!

பாக்கியம்:—உன்னிடத்தில் பேச வந்ததும் போதும். போடியம்மா போ!

ஃ

செட்டியார்:—அந்த ரெட்டியார் தனது பாக்கி நூறு ரூபாயையும் ஒரு வருஷமாகியும் இன்னும் தரவில்லையே. இப்போது ரயில் செலவுக்கு வேறே பத்து ரூபாய் கொடுத்தனுப்பினீரே? கடைசியில் உங்கள் வாயில் மண் தான்.

ராவுத்தர்:—அவர் மோசம் செய்கிறவரல்ல. எதிர்பார்க்கும் தொகைக்கு வராத கஷ்டத்தாலேயே தாமதம். ரயில் செலவுக்கு என்னிடம் நிச்சயமாய்ப் பெறலாமென்று அவர் எண்ணி வருகையில் நான் இல்லையென்று சொல்வது தர்மமாகாது.

செட்டியார்:—உங்களின் தர்ம சாஸ்திரம் கடைசியில் தொகையை இழக்கவே செய்யும்.

ராவுத்தர்:—ஒரு சமயம் கடன் தீர்க்க முடியாமலே போய்விட்டால் அதுவும் உண்மையாகவே இருக்குமானதால், அப்போது மன்னிப்பதும் ஒரு தர்மமேயாகும். எனக்குப் பணமல்ல. மனுஷ்யனே தேவை. உங்களைப்போல மூன்று காசைத் திருப்பிக் கொடாததற்காக ஒரு மனிதரிட மிருந்து விலகும் தன்மை எனக்கில்லை. இருவரையும் தூண்டிப் பிரிக்கப் பார்க்கும் சுபாவம் அவருக்கு இல்லாததால், உம்மைவிட அவரையே நான் அதிகம் விரும்புகிறேன். அவரது பரிசுத்த மனத்துக்காகவும், அவர்மீது பிரியப்படுகிறேன்.

ஃ

வினு:—தாஞகவே சிலர் சிரித்துக் கொள்ளுகிருர்களே — அது என்?

விடை:—(1) தனது உள்ளத்து சந்தோஷத்தால். (2) தான் கட்டிய மனக்கோட்டையில் கண்ட காக்ஷியால். (3) தன்னைக் கண்டு யாரும் சிரிக்காதிருப்பதற்காக. (4) தான் எழுதிய விகடத்திற்கு மற்றவர் சிரிக்காமலிருக்கிற குறையைத் தீர்த்துக் கொள்வதற்காகத் தாஞகவேத் சிரித்துத் தன்னை மெச்சிக்கொள்வதற்காக. (5) வெளியில் சொல்லிக்கொள்ள முடியாத ஒன்றைத் தான் தற்செயலாகக் கண்டுவிடும்போது தன்னையறியாமலே சிரிக்கவைத்து விடுகிறதாம்.

ஃ

சுப்பு:—ரெங்கப்பனுக்கு எத்தனை குழந்தைகள்?

விசாலாக்ஷி:— இதுவரையில் ஒன்றும் காய்க்கவில்லை. இனி காய்ப்பதாகவும் காணேம்.

உள்ளுக்கு உண்மையாக உழைப்பவர்களின் பெயர் வெளிவருவதில்லை. அந்த உழைபபைத் தமமுடையதெனச் சொல்லிப் பெருமை பாராட்டிக்கொள்பவர்களுக்கே பிரஸித்தி ஏற்படுகிறது.

சுப்பு:— ரெங்கப்பனுக்குத்தான் குழந்தைகளில்லை; அவன் மனைவிக்குக்கூடவா இல்லை?

ஃ

ஆச்சாரியார்:—உனக்கு சமஸ்கிருதம் தெரியுமா? வியாகரணம் தெரியுமா?

இளைஞர்கள்:—வியாகர்ணம் எங்கட்குத் தெரியாது. தொல்காப்பியம் தங்கட்குத் தெரியுமா?

ஃ

விருந்தாளி:—நான்கு நாட்களாக அந்த வாலிபனைக் கவனித்து வருகிறேன். அவன் உங்களுக்கு இப்பொழுது காபி கொண்டுவந்து தந்த பெண்ணோடு அதிகப் பேச்சு வார்த்தை, சரஸங்களை வைத்துக்கொண்டிருக்கிறான். இருவரையும் ஒரே இடத்தில் மூன்றுதடவைபார்த்தேன். அவனைத் தாங்கள் கண்டித்து வைக்க வேண்டும்.

வீட்டுக்காரர்:—ஆம், அவசியம் கண்டிக்கவேண்டும். அவன் துணிவை என்னென்று சொல்லட்டும்! சென்ற வருஷம் பந்து மித்திரர்கள் எல்லாம் கூடியிருக்கையில் அவன் பிராமணரின் கையிலிருந்து என்னவோ ஒரு மஞ்சள் கயிற்றை வாங்கி அந்தப் பெண்ணின் கழுத்தில் கட்டினான். அப்பொழுதே அவனைக் கண்டிக்க நினைத்தேன். அங்கு கூடியிருந்தவர்கள் அவன் அப்படிக் கட்டியதை எதிர்க்காததால் நானும்மௌனமாய் இருக்கும்படி நேர்ந்துவிட்டது. என் செய்வது?

ஒரு புஸ்தகத்தைத் தனக்கு விலைக்கு விற்ற புஸ்தக வியாபாரியிடம் காண்பிக்கிற விஸ்வாசத்தைக்கூட, தனக்கு சும்மா புஸ்தகத்தை இனாமாகத் தூக்கிக்கொடுத்த நூலாசிரியரிடம்காண்பிப்பதில்லை. அவரை ஏமாற்றிப் பெற்றுவந்துவிட்டதாக எண்ணுகிறார்கள். இவர்களுக்கு இனாமாகத் தந்ததைவிடப் பாதிவிலைக்கு விற்றிருந்தால் செலவுக்காவது உதவும்.

ஒரு சாமானைப் பெறுவதிலே:—(1) விலை மலிவாயிருக்கவேண்டும். மலிவுக்காக மட்ட சரக்கைத் தேடக்கூடாது. (2) சாமான் மிக்க அழகாய் இருக்கவேண்டும். அழகையே நோக்கி, அது உறுதியாயிருக்குமா வென்பதைக் கவனிக்காதிருந்துவிடக்கூடாது. (3) வெகு விரைவில் செய்யப்பெற்று அந்த சாமான் கிடைக்கும்படி யிருக்கவேண்டும். வெகு விரைவில் என்பதனாலேயே அவஸர அலங்கோலமாய் முடித்துத் தரும்படி துரிதப்படுத்தக் கூடாது.

எதுவும் அகப்படுகிற வேளையில், தானே நமது கண்ணெதிர்ப்பட்டுக் கிடைத்துவிடுகிறது. அதற்கு முன்பு எவ்வளவோ தேடியலுத்து எங்கினும் அது அகப்படுவதேயில்லை. மற்றவர் கைக்குப் போய்விடாதிருந்தால் என்றேனும் ஒருநாள் கிடைக்கலாம். எவரேனும் கொண்டுபோய்விட்டிருந்தாலோ—?

பிறர் விஷயத்தில் அதிகமாக எச்சரிக்கை செய்வோர்தான் தங்களின் சொந்த விஷயத்தில் ஏமாறிவிடுகிறார்கள். மிக்க பிரதாபம் படைத்தவர்களின் குடும்பமே பிற்காலத்தில் வறுமையால் பீடிக்கப்படுகிறது.

மூளை ஜ்வரம்.

மூளை ஜுரமென்பது கடுமையான தொத்துவியாதியாகும். திடீரென ஜுரம் கண்டு அத்துடன் பலத்த தலைவலியும் வாயிலெடுப்பு மேற்படுகின்றன. கழுத்து அப்படியே பிடிப்பாகவிருப்பது முதலிய அடையாளங்கள் ஏற்படுகின்றன. ஆரம்பத்தில் புத்தி மயக்கமேற்படுகிறது. நோய் கடுமையாகக் காணுமிடங்களில் சீக்கிரத்தில் மரணமேற்படுகிறது.

மெனிங்கோ காகஸ் என்று ஒரு கிருமி மூளையிலிருந்துவரும் குழாய்த் திரவத்தில் காணப்பட்டு அதனால் இந்த நோய் ஏற்படுகிறது. இந்த நோயில் கஷ்டப்படுபவர் மூக்கு சிந்துவதினாலும் இது ஏற்படுகிறது. இரும்புவது, மூக்கு சிந்துவது, எச்சில் துப்புவது முதலியவற்றினால் இது தொத்து வியாதியாகப் பரவுகிறது. நெருங்கிப் பழகுவதன்மூலம் இது சுலபத்தில் வியாபிக்கிறது.

நோய் கண்டதும் சுகாதார உத்தியோகஸ்தர்களுக்கு உடனே அறிவிக்க வேண்டும்.

அநேக வருஷங்களுக்கு முன்பு "முடக்கு ஜ்வரம்" என்ற ஒருவித ஜ்வரம் இந்தியா முழுதும் பரவிற்று. திடீரென்று கைகால்கள் மடக்க முடியாமல் பிடித்துக்கொண்டு உடனே ஜ்வரமும் கண்டு நாலைந்து தினங்களில் குணமாவதாக இருந்தது. இப்போதோ எங்கோ தூரநாட்டில் "மூளை ஜ்வரம்" பரவியிருப்பதாகக் கேட்டதற்கு, அது இப்பொழுது சென்னைக்கும் வந்துவிட்டது இது மரணத்தையும் விளைவிப்பதால் மிகு பயங்கரமே.

சில உண்மைகள்.

நம்மவர்கள் ஒரு காரியத்தைச் செய்ய வேண்டாமென்று தடுத்துக் கூறும்பொழுது, ஏன் அதைச் செய்யக்கூடாதென்று கேட்டால், அப்படிச் செய்தால் பாவம் வருமென்று சுலபமாகக் கூறிவிடுகிறார்களேயன்றி உண்மையைத் தெரிவிப்பதில்லை. ஆகையால், நாம் கேள்வியால் அறிந்துள்ள விஷயங்களையும் உண்மைகளையும் இங்கு குறிப்பிடுகிறோம்.

பூனையை யடித்தல் மகா பாதகம். அதனை அடிக்கும்போது அதன் தேகத்திலிருந்து உதிரும் ரோமங்களின் எண்ணிக்கைக்குப் பதின்மடங்கதிகமான பிராமணர்களைக் கொன்ற பாபம் வரும் என்பர் பெரியோர்.

ஏன் அவ்வாறு மொழிகின்றனரென்றால், பூனையானது நாயைப் போல் விசுவாசமுடைய பிராணியன்று. எவ்வளவு அருமையாய்க் காப்பாற்றி நேசித்து வந்தபோதிலும், தன் எஜமானர்கள் சற்று ஏமாந்திருட்பின் பால் முதலிய ஆகாராதிகளைத் தின்றுவிடும். வீட்டில் வளரும் கிளி, குருவி முதலியவற்றையும் தருணம் வாய்த்தால் கொன்று புசித்துவிடும். அதன் நன்றியற்ற தன்மை எவராலும் சகிக்க முடியாதானதால், அப்போது சற்றும் பச்சாத்தாபமின்றி அதைக் கொன்றுவிடலாமாவென்று கோபம் உண்டாவது இயற்கையே. ஆதலால், அதனை நிவர்த்தி செய்வதற்காக அம்மாதிரி கூறியிருக்கின்றனர் அதாவது நன்றி கெட்ட உறவினனை மன்னிப்பது போலாம்.

ஃ

நடந்துகொண்டே பல் துலக்குவது மிக்க பாபமென்பர் இதன் உட்பொருளாவது, நடந்து பல் விளக்கினால் மேலே எச்சில் விழுவது டன் நன்றாகப் பல் துலக்க முடியாதென்பதுமே.

சிறியதிலிருந்தும் பெரிய தீ!



அற்ப விஷயம் பிரமாதமாய் வருகிறது! பக்கத்து விட்டுச் சிறுவன் அடுத்த வீட்டிலிருந்தும் ஒரு காகிதப் பென்ஸலை எடுத்துக்கொண்டு வந்துவிடுகிறான்! அந்தப் பென்ஸல் தன்னுடையதென்று அடுத்த வீட்டுச் சிறுமி பிடுங்கிக் கொள்கிறாள். பையன் அழுகிறான். பக்கத்து வீட்டுக்காரர் அந்தப் பென்ஸல் தன் வீட்டிலிருந்ததென்றும், அது தன்னுடையதென்றும் கூறித் தனது பேச்சையே மேலும் மேலும் ஸ்திரப்படுத்துகிறார். அடுத்த வீட்டுச் சிறுமியோ தன் பென்ஸல் என்பதற்கு அடையாளமும் சொல்லுகிறாள். கடைசியில் சின்ன விஷயத்தில் பெரிய மனஸ்தாபம் எதற்கென்று சிறுமியிடமிருந்து பென்ஸலை வாங்கிப் பக்கத்து வீட்டுச் சிறுவனிடம் கொடுத்துவிடும்படியாகிறது இவ்விதம் சமரஸமாய் நஷ்டப்பட்டாவது விட்டுக்கொடுக்காமற் போனால் சிறிய காரியம் பெரிய கலகத்தில் முடிந்துவிடுகிறது.

ஃ

“இப்படியே சோப்புக்காக ஒரு அணா கொடுக்கும்படி மனைவி கேட்கிறாள். வீட்டுக்காரனிடம் அன்று ஒரு காசும் இல்லாததால் தன்னிடம் ஏதும் கிடையாதென்கிறான். ஒரு அணா பிச்சைக்காசு கூட இல்லையா என்றும் மனைவி சிடுசிடுத்து அலக்ஷியமாய்ப் பேசுகிறாள். “சீச்சீ! பணம் இல்லாவிட்டால் இவளுடன் வாழ்வது வெகு கஷ்டமாய்ப் போய்விடும் போலிருக்கிறதே! கேட்டதுமே கொடுத்தாக வேண்டுமோ! அப்படித் தராவிடில் கெட்டவனுக்கும்! எவ்வளவோ செலவிட்டும், கேட்ட வேளைக்குக் கையில் அந்த சமயம் இல்லாவிடில் சண்டையா? தாழ்த்தி நாணப்படுத்துவதா?” என்கிறான். அவளோ ஆத்திரம் பொங்கிக்கொண்டு தன்தலையில் அடித்துக்கொள்கிறாள். உன்னுடைய அல்ப புத்திக்கு இன்னும் அதிகமாகத் தலையிலடித்துக் கொண்டாலும் போதாது என்கிறான். அவள் கையை நீட்டி வெடுவெடுத்துக்காட்டுகிறாள். இதிலிருந்து மேலும் சண்டை வளருகிறது. “காசில்லா விட்டாலும் கடையில் கடனாகவாவது சோப்பு வாங்கி வாருங்கள்” என்று மனைவி விநயமாய்க் கேட்டிருந்தால், எந்தச் சண்டையுமே இல்லை! சோப்பும் கடையிலிருந்து உடனே வந்திருக்கும். கேட்க வேண்டிய கிரமமும், விநயமும், நடந்துகொள்ளவேண்டிய ஒழுங்கும், அடக்கமான தன்மையும் தெரியாத மூடஸ்திரீகள் எந்த அல்ப விஷயத்தையும், அதையும் ஒருபெரும் சண்டையாக மூட்டி வளர்த்தி விடுகி

பட்டினி கிடப்பது நமது பழைய ஸம்பிரதாயம். நாம் பரிசுத்தமாக இல்லாமலிருந்தால் அதற்காக நாம் பட்டினி கிடக்கிறோம். பாபத்தைப் போக்க நாம் பட்டினி கிடக்கிறோம். இன்னும் நமது சக்திகளைப் பலப்படுத்தப் பட்டினி விரதங்கிடந்து அந்த சமயம் நமக்கிருக்கிற பரிசுத்த உள்ளத்தோடும் பகவானிடத்துப் பிரார்த்தனை செய்கிறோம். பாபத்தைப் போக்கவும் கடவுளைப் பிரார்த்திக்கிறோம். பிறகு நாம் புதியதோர் உருவையும் புதுப் புது எண்ணங்களையும் அடைகிறோம்.

ருர்கள்! பொழுது விடிந்ததுமே வீட்டில் இவ்விதம் ஏதாவது ஒன்றில் கலகத்தைத்தங்களுடையமூடத்தனத்தினுல் வீட்டுப் பெண்கள் தொடங்கிக்கொள்வதில் அன்றையப் பொழுதே விஷமாய் விடுகிறது! கடைசியில் பார்க்கப் புகின் சிறிய விஷயத்திலிருந்தே பெரிய கலகத்தீ எழுந்ததாகிறது.

ரேகை சாஸ்திரி கையைப் பார்த்துப் பலன் சொல்வது போல, அநுபவஞான சாஸ்திரியும் முகத்தைப் பார்த்தளவில் வஞ்சகமனத்தினரை யறிந்துவிடுகிருர். அவரிடம் போலி விசுவாச சூதுகள் செல்லாது.

நூலாசிரியப் பைத்திய புருஷர்கள்.

தங்களின் எழுத்தால் உலகம் திருந்திவிடுமென்று நினைக்கிற பைத்தியக்காரர்களான இவர்களுக்குக் காகிதக் குப்பைகளே ஆஸ்தி! வீடுநிறையக் காகிதமூட்டைகள்! நாள்தோறும் வீடு கூட்டுகையிலெல்லாம் ஓபாமல் காகிதக் குப்பைகள் புறப்பட்டுக்கொண்டிருக்கும். பெட்டிகளுக்குள்ளும் காகிதக் கட்டுகள்தான். பீரோக்களிலெல்லாம் புஸ்தகங்கள் நிறைய அடுக்கிவைக்கப்பட்டிருக்கும். விற்பனைக்குறிய புஸ்தகங்கள் வேறே. தங்கள் சொந்த சொத்தாய் பிராணனுக்கு சமமாயுள்ள நூல்கள் வேறே. இவர்கள் அச்சாகிவிட்ட தங்களின் நூல்களைப் பிறகு வாசிப்பதேயில்லை. அவைகள் இரண்டாம் பதிப்பாகும் அதிர்ஷ்டம் வரும்பொழுதுதான் ஏதேனும் திருத்துதற்காக மறுபடியும் வாசிக்கத் தொடங்குவர். வாசிக்க, வாசிக்க, இவ்வளவு அழகாக எழுதியிருக்கிருமா என்று தங்களுக்குள்ளாகவே பரவசப்பட்டுப்போவார்கள். குப்பையிலே கிடந்த ஒரு காகிதத்தை எடுத்து, அது தாங்கள் எழுதிய நூலுடன் சேர்ந்ததாயிருக்கக்கண்டு, என்ன எழுதியிருக்கிறதென்று பார்த்து, அதிலுள்ள அற்புதக் கருத்துகளுக்கு வியந்து, இவ்விதம் எழுதவும் தங்களுக்கு சக்தியிருந்ததா என்று சந்தேகப்பட்டுக் கொள்வார்கள்! இவர்களை அறிந்தவர்களெல்லாம் போற்றிக் கொண்டாடுவார்கள். அறியாதவர்களோ,—என்ன பிரமாதம் எழுதிவிட்டான் என்று பழிக்கிறவர்களோ,—இவர்களைத் தூற்றுவார்கள். இவர்களிற் சிலர்மட்டும் நல்ல பணக்காரர்களாயினும், பெரும்பாலோர் நிலைமை வறுமைத் தவிப்பாய் ஏழ்மையிலேயே உள்ளது. அது கடவுள் செயல்.

அமைதியான தொண்டு.

உள்ளத்தில் அன்புள்ளவன் எப்பொழுதும் மௌனமாகவும், அமைதியாகவும், தன்னை உணர்த்திக்கொள்ளாமலும் தொண்டு புரிவான். தன்னைப்பற்றி (ஆணவமுள்ளவன்) எவனும் மெய்யான விசுவாசியாகான். ஸ்வாமி விவேகாநந்தர்சொல்கிறார்:—

"லோகோத்தாரணத்திற்காக மெய்யன்புடனுழைத்தவர்களெவரும் மௌனமாகவே—பிரசித்தமாகவன்று—உழைத்து மௌனமாகவே சாலஞ் சென்றனர். மனுஷ்ய சமூகத்திற்காக அபாரமாக உழைத்து அதற்காகவே ஜீவனை விட்டவர்கள் தங்களைப்பற்றிய ஒரு சிறு செய்தியும் கூடப் பெரும்பாலாருக்குத் தெரிவித்ததில்லை."

"எங்கே உனது சிரமத்தைப் புகழ்வதற்கும், வேலையைத் தூண்டுவதற்கும் ஒருவருமில்லையோ, எங்கு எதிர்படும் எவரும் உன்னை வெறுக்கின்றார்களோ, அங்கு நீ ஊக்கங் குன்றாது உழைப்பதிலேதான், அளவற்ற பொறுமையும், அபாரமான சாந்தியும், பரிபூரணமான பயமின்மையும் உண்டென்பதை நீ உதாரணமாக நடத்திக் காட்டக்கடவாய்."

"செய்வதற்கு ஒரு பெரும் (பிரசித்தமான) வேலையும் வந்து, புகழ்வதற்கு ஆயிரக்கணக்கான ஜனங்களுமிருப்பாராயின், ஒரு பயனற்ற கோழையும், அதிதீவிரமான தன் காரியக்காரனுங் கூடத் தன்னைப் பெரும் வீரனென்று காட்டிக்கொள்ள உயிரை விட்டுவிடுவான்."

"ஆயினும், எவனொருவன் பிறருக்குத் தெரியவிடாமல், புகழுக்காக வல்லாமல், கிஞ்சித்து நன்மையேனும் செய்யவல்லனோ, அவனே மெய்யான வீரன்.

மொழிபெயர்ப்புக் குப்பைகள்.

'மொழிபெயர்ப்புக் குப்பைகள்' என்று பழிப்பவர்களின் கருத்து, சுயமாய் யோசித்து எழுதும் அறிவு இன்றி, பிற பாஷைகளிலிருந்தும் வெகு சுலபமாய் எடுத்து உபயோகித்துக் கொள்ளுகிறார்களே என்று பரிதபித்துச் சொல்லியதாக இருக்கலாம். அவ்வளவேயன்றி "மொழிபெயர்ப்புகள்" ஒருபோதும் குப்பைகளாகா. ஒரு பாஷையிலில்லாத புதுக் கருத்துகள் மற்றொரு பாஷையி லிருக்கலாம். அவற்றை மொழிபெயர்த்துக்கொள்ளுதல் கேவலமாகாது. அது தன் யோசனையுடன் இன்னொருவரின் யோசனையையும் கேட்பதுபோலாம். ஒரு ஜாதி ஸமூகத்தின் இயல்பை யறிவதற்கு அந்த ஜாதியாரின் பாஷையை உணர்ந்தால் நன்கு தெரியலாம். ஆங்கிலத்தினின்றும் மொழிபெயர்க்கப்பட்ட நூல்களால் தமிழ் மக்கள் எவ்வளவோ புது விஷயங்களை அறிய முடிந்தது. ஆங்கில மொழிபெயர்ப்பு நாவல்களால் ஆங்கில தேசாசாரங்களை யுணர்ந்து, தமது நாட்டின் ஆசாரக் கிரமங்களை மேல் என்ற அறிவு வரப்பெற்றுக் கொண்டவர் பலர். மொழிபெயர்ப்பு என்பதில்லையாயின் தினசரிப் பத்திரிகைகளே இருக்கமாட்டா. தினசரிப் பத்திரிகைகளுக்கு விஷயங்கள் சகலமும் ஆங்கிலத்தினின்று மொழிபெயர்க்கப்படுவதேயாம். எவ்வளவோ நூல்களைத் தமிழில் மொழிபெயர்த்தே புது அறிவு பெறவேண்டிய நிலையில் நாம் இருக்கும்பொழுது, மொழிபெயர்ப்பைக் "குப்பைகள்" என்று பழிப்பது சரியாகாது. பழிப்பவர்களின் கையிலேயே ஆங்கில நூல்களிருப்பது அதிவிநோதமே. எந்த மொழிபெயர்ப்பும் பயனற்றதன்று.



அலைகளின் சக்தி:—



இன்று கூடிய நமது கடையில் வெகு முக்கியமானவிஷயங்களைப்பற்றிப் பிரஸ்தாபிக்கப்பட்டன. "கடலில் அலைகளுக்கு அதிகமான பலம் நீரின் மேல் மட்டத்திலேதான் என்று அனுபவத்தால் காணப்பட்டிருக்கிறது. கொஞ்ச ஆழத்திற்குக் கீழ் கடல் நீரில் அசைவே கிடையாது. ஆயின், அவ்வாழத்தின் அளவானது அலையெழும்புகிற உயரத்துக்குத் தக்கபடி வேறுபடும். அவ்வாழத்திற்கு மேலெல்லாம் ஒருவாறு அலையுண்டு. அவ்வலைகள் நீரின் மேல்மட்டத்துக்கு அருகில் அநேகம் பாரம் எடையுள்ள பெரும் பாறைகளைப் புரட்டித் தள்ளும்படி அத்தனை வலிவுள்ளனவாயிருக்கும். அதற்குச் சிறிது அடி ஆழத்தின் கீழ்க் குண்டுக் கற்களை அசைக்கத்தக்க வலிவுள்ளவையாயிருக்கும். அதற்கும் அதிக ஆழத்தில் மணலை அசைக்கத்தக்க வலிவுள்ளவையா யிருக்கும். அதற்கும் கடலில் இடையில் ஒரு சுவர் எழுப்பினால், அலையானது அந்த சுவருக்குக் கீழ் அஸ்திவார ஆதாரமாயுள்ள பொருளை அறுக்க ஆரம்பித்து அதன் மூலமாக சுவற்றைக் கீழே தள்ளப் பார்க்கின்றது" என்று சுருமீன் சாஸ்திரியார் கூறினார்.

ஃ

அறிவு பெறுதல்:—

"செயற்கையறிவென்பது மனிதர்களுக்கு மாத்திரமே யல்ல, அதததின் நிலைமைக்கேற்றபடி எல்லாப் பிராணிகளுக்கும் போதுமான அறிவு யுக்தி ஆலோசனைகளைக் கடவுள் இயற்கையாகவே அளித்திருப்பதோடுகூட, பழக்கினால் செயற்கையறிவும் எல்லாப் பிராணிகளுக்கும் உண்டாகும்படி அனுக்கிரகித்திருக்கிறார். ஆய்ந்து பார்க்கையில் இயற்கையறிவில் மன்னுயிர்களைவிடப் பறவை விலங்கு முதலிய பிராணிகளே சிறந்திருக்கின்றன" என்றார் அல்லா பிச்சை

ஃ

ஸ்திரீகளின் சம்பாதனை:—

"பெண்பிள்ளைகள் புருஷர்களோடு ஒப்ப உத்தியோகம் முதலியன செய்வது தகுதியல்லவென்பது அநேகருடைய கொள்கையாயிருப்பினும், விசேஷமாய்க் குடும்ப ஆதரணையுள்ளவர்களும், இல்லாதவர்களும் பிறருக்கு ஒரு சுமையாகித் தாமும் திருப்தியற்று வருந்துகின்றனர். எந்த வேலையும் செய்ய அன்னோர் வல்லுநரே யாயினும் செய்வதற்கு வேலை கிடைப்பதில்லை. இவர்க

வெறும் வெளித்தோற்றத்தை மட்டிலும் வைத்துக்கொண்டு ஒரு முடிவான அபிப்பிராயம் கொள்ளக்கூடாது. வெளிக்குச் சாந்தமாயுள்ளவன் உள்ளுக்குக் கொடியவனாயிருக்கலாம். பேதைபோலும் தோன்றுபவன் ஞானியாகவும் இருக்கலாம்.

ளெல்லாம் படித்து ஏதாவது ஒரு தொழில் கற்றிருந்தால் எத்தனை நலமாயிருக்கும்? பிறரது சகாயத்தை எதிர்பாராது தமது கையுழைப்பில் புசித்து சுதந்திரசாலிகளாய் இருப்பது எவ்வளவு சிலாக்கியம்!" என்று உழைக்கும் கட்டையார் உரைத்தார்.

ஃ

ஆரோக்கிய பாக்கியம்:—

"இவ்வுலக வாழ்க்கையை யோசிக்கையில், தேக சவுக்கியத்தைத் தேடுவதே முதன்மையாயிருக்கின்றது. மூடாபிமானமுடையவர்கள் முக்கியமாய்ப் படிப்பில்லாதவர்களே. தேகப்பயிற்சி போலவே புத்திப்பயிற்சியும் தினந்தோறும் கொஞ்சம் வருந்தி உழைத்துச் செய்துவர வேண்டும். அவ்விதம் தொடர்ந்து செய்யில் ஆழ்ந்த அறிவு விர்த்தியாகும். ஒருசந்ததியாருடைய குணங்களும் நடக்கைகளும் மறு சந்ததியாருக்கும் அமைகின்றன. பெற்றோர்களுடைய தேகக்கூறு எப்படிப் பிள்ளைகளுக்குச் சம்பந்தப்படுகின்றனவோ, அப்படியே அவர்களுடைய மனோ குணங்களும் ஆசாரங்களும்ஒழுக்கங்களும் பிள்ளைகளுக்குப் படிவதுண்டு. ஏனெனில் மனதின் நிலைமையெல்லாம் தேகசவுக்கியத்தையும், தேகத்தில் ஓர் உறுப்பான மூளையின் நிலைமையையுமே ஆதாரமாகக் கொண்டிருப்பதால் தேக நிலை எப்படி யிருக்குமோ, அப்படியே மனநிலைமையுமாகும். பிணிகள் பெற்றோரிடத்திலிருந்து பிள்ளைகளுக்குத் தொடருவது உண்மை. தந்தையினிடத்திலுள்ள துஷ்ட நடவடிக்கைகள் பிள்ளைகளிடத்திலும் பல தலைமுறை வரையில் பிரத்தியக்ஷமாகக் காண்கிறோம். ஆகவே, இன்று நாம் செய்யும் தேகப் பயிற்சியும் மனப்பயிற்சியும் நமது பின் சந்ததிக்கு ஒரு ஆஸ்திபோலாகின்றது" என்றார் ஆமவடைப் பண்டாரம்.

ஃ

வைத்தியர்களின் பயிற்சி:—

"வைத்திய சாஸ்திரப் பயிற்சி செய்யவேண்டுமானால், தேக தத்துவ சாஸ்திரமும், பிரகிருதி சாஸ்திரமும் நன்றாய்க் கற்றறிந்திருக்கவேண்டும். பாஷையில் நல்ல விர்பத்தி சம்பாதிக்க விருப்பமுடையோர்களுக்குப் பூர்வகாலத்துக் கவிகள் எழுதிய கிரந்தங்களைக் கற்பது எப்படியோ, அப்படியே வைத்திய சாஸ்திரத்துக்கு தேகதத்துவ சாஸ்திரப் பயிற்சியும், பிரகிருதி தத்துவப் பயிற்சியும் அவசியமாம். பிரகிருதி தத்துவங்களை நன்றாய் அறிந்தவர்களுக்கு எங்கே பார்த்தாலும் உலக நீதிகள் புலப்படும். பர்வதங்களையும் கணவாய்களையும் பார்க்கையிலேயே அவர்களுக்குப் பூர்வ காலத்துச் சரித்திரங்கள் செம்மையாய் விளங்கும். அவர்களுக்கு இந்தப் பிரபஞ்சமும் எப்போதும் பார்த்துப் படித்துப் பேரானந்தமுற்றிருக்கத்தக்க பெரும் புஸ்தகமா யிருக்கும். அவர்கள் சொல்லுகிற தத்துவமெல்லாம், மற்றவர்கள் மனதினால் மட்டுமே ஊகித்துச் சொல்லுகிற தத்துவங்களைப்

தனவான்களின் வீட்டில் ஏழைகள் ஒருபுறம் ஒதுங்கி வசிக்கப் புகுந்தால், வீட்டில் காணாமற்போகும் களவுக்கெல்லாம் அந்த ஏழைகளையே சந்தேகித்து விடுவதன்றி, நீதான் எடுத்தாய் என்று துணிந்தும் சொல்லிவிடுகிறார்கள். ஒரு சமயம் மாட்டியே அதைத் திருடியிருந்தாலும் பழி ஏழையின்மீதே விழுகிறது.

பார்க்கிலும் வெகு சிறந்தவையா யிருக்கும்'' என்றார் மயிலாடும் பிள்ளை.

ஃ

மந்த புத்தியின் செயல்:—

"மந்தகனின் சங்கதி என்ன? மந்த புத்தியுடையவன் குளித்து வஸ்திரம் உடுத்துமுன்னே காலைப் பொழுது கழிந்து நடுப்பகல் வந்து விடலாம். போஜனம் செய்கையில் பந்தியில் உட்கார்ந்த எல்லோரும் புசித்தாயிற்றென்றாலும், அவன் சப்புச்சப்பென்று மெள்ள மெள்ளத் தின்று வீங்கி எழுந்திருக்குமளவும் அவனோடு பந்தியில் உட்கார்ந்தவர்களும் இடத்தைவிட்டு எழுந்திராது கூடக் காத்திருக்கவேண்டும். ஒரு மந்தகன் தூங்கிக்கொண்டிருக்கையில், வீடு நெருப்பு பற்றிக்கொள்ள, அவனை எழுப்ப ஒருவன் உள்ளே வந்து நெருப்பு நெருப்பு என்று அலறினன். அதற்கு மந்தன் படுக்கையில் படுத்திருந்தவாறே எங்கே நெருப்பு பிடித்திருக்கிறதென, வெளியில் முழுதும் பற்றிக்கொண்டதென்று வந்தவன் கூற, மந்தன் அதைக்கேட்டு அப்படியா; அதிருக்குமிடத்துக்கும் இந்த உள்ளறைக்கும் வெகுதூரம்; இங்கே தீப்பற்ற இன்னும் அரைமணிநேரம் செல்லுமல்லவா? அதற்குள் ஒரு தூக்கம் தூங்கி எழுந்து விடுகிறேன் என்றானும்! இத்தகையோரைத் தட்டி எழுப்புவிப்பது எப்படி?'' என்றார் ஏகாந்தம் பிள்ளை.

ஃ

தூசியும் நோயும்:—

"இருட்டறையில் சூரியகிரணம் படுகையில், அதிலே பரமாணுக்கள் மினுமினென்று மின்னிப் பறந்துகொண்டிருப்பதை நாம் காணலாம். விளக்கொளியில் பார்க்கவொண்ணாத பரமாணுக்கள் சூரிய கிரணத்தில் நன்றாய்ப் புலப்படும். பொதுவாக நோய்களெல்லாம் அத்தன்மையான அணுமயமாகவே இருக்கின்றன. நமது புலத்தில் முட்செடி முளைத்திருக்கக் கண்டு, எங்கிருந்தோ முள்ளின் விதையொன்று அங்கு விழுந்து முளைத்து வேர்க்கொண்டிருக்கிறதென்று நாம் எண்ணுமாறே, நோய்களும் பரமாணுமயமான வித்தின் வழியாய்ப் பரம்புகின்றனவென்று நிதானிக்கவேண்டும். நாம் பருகும் நீரின் வழியாகவும், உட்கொள்ளுகிற உயிர்ப்பின் வழியாகவும், தூசி உள்ளே புகுகின்றது. ஜலத்தை எத்தனைதரம்தான் வடிகட்டினாலும், அதிலுள்ள கல்மஷமெல்லாம் நீங்குவதரிது. நிர்மலமான ஜலமாயிருந்தால் அதைச் சூரியகிரணத்தின் வழியாகப் பார்க்கையில் ஆகாயத்தின் நிறத்தினுஞ் சிறந்த நீலநிறமுடையதா யிருக்கும். எந்தெந்த வித்தை நிலத்திலிடுகிறோமோ அந்தந்த ஜாதியான செடி கொடிகளே உண்டாவது போலவே, எந்தெந்த நோயின் கூறான பரமாணுக்கள் நம்முள் சம்பந்தப்படுகின்றனவோ அந்தந்த நோய்களே உண்டாகும். நாம் புசிக்கும் அன்னபானாதிகள், உட்கொள்ளும் காற்று, உடுக்குமுடை, படுக்கும் பாய், இருக்குமிடம், நடக்கும் வழி முதலியவற்றில் இயன்றமட்டும் தூசியில்லாமல் வைத்திருப்பதானது நமது தேகாரோக்கியத்துக்கு மிகவும் நன்மை பயக்குவதாம்'' என்று பால்கோவா பாக்கியம் பிள்ளை பகர்ந்தார்.

ஃ

சிணுக்கன்:—

"சிணுக்கனை யாரும் அறிவார். அவன் கோணற் பார்வையோடு நெற்றியைச் சுழித்துப் புருவத்தை நெறியாமலும், உதட்டைப் பிதுக்காமலும்

இருந்தால் நலமாயிருக்கும். "சினுக்கெல்லாம் பிணக்குக்கிடம் என்பது பழமொழி. சினத்தல், சிணுக்குதல் என இவ்விருவகையான கோபமும் தீதே. 'எரிகிற கொள்ளியில் எந்தக் கொள்ளி நல்லது?' என்றபடி, இவ்விரண்டும் தீதெனினும், சினத்தை விடச் சிணுக்குதலே கொடிதென்று காண்கிறது. "கோபமுள்ள இடத்தில் குணமுண்டு" என்றபடி விரைவில் கோபி தனது சினம் தணிந்து நல்லோனாதல் கூடும். கோபமுள்ள வர்களுக்குக் கபடமிராது. கபடஸ்தர்கள் தமது கோபத்தை யடக்கி மறைப்பர். கோபஸ்தன் தனக்கு நேர்ந்த குறையை நேரில் வெளியிடுவான். சிணுக்கும் கபடஸ்தனோ தன் வருத்தத்தை மறைத்துக் கொள்வான். அடக்கமின்மையாலுண்டாகும் கேட்டிலும் சிணுக்குதலாலுண்டாகும் பொல்லாங்கு வெகு பெரிது. தெரியாத தோஷத்தால் இவ்வுலகில் எவ்வளவோ தீமை விளைகிறது. சிணுக்கர் தங்களுக்குப் பொல்லாங்கு செய்தவர்களோடு மாத்திரமே யன்றி, மற்றவர்களோடும் சிணுக்குவதனால், அவர்களுக்கு உண்டாகும் இன்பத்தையும் கெடுத்துவிடுகிறார்கள். சுட்ட மண்ணும் பச்சை மண்ணும் ஒட்டுமோ? சிணுக்கனுடைய நட்பமே நமக்கு வேண்டாம்" என்று கொக்கரக்கோ தாஸர் நவின்றார். இத்துடன் நமது கடையும் பூர்த்திபெற்றது.

'பகநூர்' பொன்வண்டு செட்டியார்.

விகட உலக நீதி.

1. ஓதாமல் பத்திரத்தை ஒப்ப வேண்டாம்.
2. ஒருவரையும் பல்லிளிப்பால் நம்ப வேண்டாம்.
3. மாதாவை மனையாள் முன் னிகழ வேண்டாம்.
4. வஞ்சனைகள் பிறர் அறியச் செய்ய வேண்டாம்.
5. போகாத விருந்தினிடம் பேச்சு வேண்டாம்.
6. நெஞ்சார உள்ளதனைச் சொல்ல வேண்டாம்.
7. போகவிட்டுக் காத்திருக்கும் கஷ்டம் வேண்டாம்.
8. நிலையில்லாப் பிழைப்புகளைத் தேட வேண்டாம்.
9. நஞ்சு தின்று மரியாதை நாட்ட வேண்டாம்.
10. நல்லிணக்கம் மைனருடன் வைக்க வேண்டாம்.
11. அஞ்சாமல் துடுக்குகளைச் செய்யவேண்டாம்.
12. அதனாலே பல துன்பம் அடைய வேண்டாம்.
13. அடுத்தகத்துப் பேர்வழியை அடுக்கவேண்டாம்.
14. அதனாலே கெட்டழிந்து அலையவேண்டாம்.
15. மனம்போலே கப்பலேறி ஓட வேண்டாம்.
16. மாற்றாந் தாய் மக்களிடம் உறவு வேண்டாம்
17. தனந்தேடி இடம்பத்தில் அழிக்க வேண்டாம்.
18. தருமத்தைச் சோம்பனுக்குச் செய்ய வேண்டாம்.
19. சினந்தேடி போலீஸில் சிக்க வேண்டாம்.
20. சினத்திருப்பார்க் கொன்றுமே சொல்ல வேண்டாம்.
21. குற்றமொன்றும் திறந்தபடி வைக்க வேண்டாம்.
22. கொலைகளவில் பாகசொத்து தேட வேண்டாம்.
23. கற்றவரை ஆதரிக்க மறக்க வேண்டாம்.
24. கற்பற்றார் வழிதன்னில் நிற்க வேண்டாம்.
25. கொற்றவனின் சட்டத்தை மீற வேண்டாம்.
26. கோயிலில்லா ஊருக்கு குருக்கள் வேண்டாம்.
27. வாய்ப்பட்டி பெண்களுடன் வாழ வேண்டாம்.
28. மனையாளுக் குற்றபொருள் கூற வேண்டாம்.
29. வெஞ்சமரில் சாட்சிசொல்ல நிற்க வேண்டாம்.
30. தாழ்வான குலமென்று தள்ள வேண்டாம்.
31. தாழ்ந்தவரைத் தாழ்வாக்கித் திரிய வேண்டாம்.
32. வார்த்தை சொல்லி வகைமோசம் செய்ய வேண்டாம்.
33. மதியாதார் வாழ்வைநீ மதிக்க வேண்டாம்.
34. மூத்தோர்தம் பொடிசுருட்டில் பழகவேண்டாம்.
35. முன்கோபம் வெளியிலன்றி மனதில் வேண்டாம்.
36. வாத்தியாரை எப்பொழுதும் மறக்க வேண்டாம்.
37. வழிப்பறித்து மதுக்கடையில் குடிக்க வேண்டாம்.
38. வரம்புமீறி செலவுசெய்து வாடவேண்டாம்.
39. வழக்குரைத்துப் பொய்பேசி நிற்க வேண்டாம்.
40. வயிறென்றே பெரிதாக வாழ வேண்டாம்.

6-ஆங்கில காதற் கடிதங்கள்.

(127-ம் பக்கத் தொடர்ச்சி.)

2-ம் கடிதம்.

அந்தப் பெண்ணின் உத்தரம்.

துரையே!

நீங்கள் எழுதிய கடிதம் எனக்கு இப்போதுதான் வந்து சேர்ந்தது. நீங்கள் சாஸ்திரிபோல் மிகவும் நேர்த்தியாகப் பேசியிருக்கிறீர்களென்று நான் சொல்லவேண்டியதே. காதலர் எழுதிக்கொள்ளும் நிருபங்களில் பெரிய சாஸ்திரிகளுடைய நூல்களிலிருந்து மேற்கோள்கள் எடுத்து எழுதப்படும் வழக்கமில்லை யென்று நினைத்திருந்தேன். ஆனால், இந்த நாளில் ஸ்திரீ முதலாய் கிரீக்கு பாஷையைத்தன் பாஷையில் மொழி பெயர்க்கும் பெருமையைச்சம்பாதிக்க உழைத்து அப்பாஷையைப் படித்திருக்கும்போது, (அந்த நூல்களையெல்லாம் நீங்கள் பார்த்திருப்பதற்கு) நான் அதிசயிக்க வேண்டியதில்லை. ஆனால், அவள் மெத்தவே படித்திருக்கட்டும்; எனக்கு அவளைப்போல் படிக்க மனமில்லை; ஆனால், என்மீது காதல்கொண்டிருக்கும் நீங்கள் சாஸ்திர ரீதியாய் எழுதிய கடிதத்தைப்பற்றி யோசிக்கக்கடவேன்.

ஃ

நீங்கள் எங்கள் வீட்டிலிருந்த போது உங்கள் சகவாசம் எனக்குப் பிரியமாயிருந்தது மெய்யே. அந்நேரம் உங்களுக்கு ஸந்தோஷம் வருவிக்க எங்களுக்கிருந்த கவனம் கனவானாகிய உங்களின் யோக்கியதையைத் தெரிந்தேயல்லாது, இப்போது உங்கள் காகிதத்திலடங்கிய கலியாண வார்த்தையை என் தமயனாகிலும் நானாகிலும் கேள்விப்படுவோமென்று எவ்வளவேனுமிருந்த நினைப்பினாலல்ல. அன்றியும் ஆங்கிலேயர்களாகிய நம்மிலே பூர்வம் வழங்கிய மரியாதைக்கும், அதற்கு முன்னிருந்த பெரியோர் நடக்கைக்குமொத்து உங்களை நடப்பித்ததுபோல் அன்னியரையும் நடப்பிப்பதே எங்களுக்கு எப்போதும் வழக்கமாம்.

ஃ

நீங்கள் எனக்கு எழுதியனுப்பிய கலியாணப்பேச்சு மெத்தவும் பெரிய காரியமானதால், எளிதாக உத்தரம் சொல்லக் கூடாமையைப்பற்றி, மஹா கவனத்தோடாலோசித்துச் சொல்ல வேண்டியிருக்கிறது. அன்றியும், அதிலே ஒரு பிசகு வந்தால் அது உலக செல்வத்தின் ஆசையையெல்லாம் அழிப்பதுமல்லாமல், பின்னும் மகா கெடுதியாயிருப்பதென்னெனில், நித்திய செல்வத்தையுங்கூடப் பாழ்படுத்திவிடக் கூடியதாயுளது. மனைவியாகூலத்திற்கேதுவான இந்த உண்மையின்படி நடந்த கொடிய திருஷ்டாந்தரங்கள் அநேகம் நீங்கள் பார்த்திருப்பீர்களென்பதற்கு நான் சந்தேகப்படவில்லை. அவைகளென்னெனில், செல்வத்தையும் வறுமையையும் ஏகமனதாய் அனுபவிக்க மீறக்கூடாத வகையில் உடன்பட்ட

சூரியன் புறப்படும்பொழுது அதற்குமுன் இருந்த இருளேயன்றி, அத்துடன் கூடியிருந்த எண்ணிறந்த தீமைகளும் ஒழிவதேபோல், விவாகமுடிச்சு விழுந்தபிறகு பெண்ணைத் தரக்கூடாதென்று கக்ஷி பேசியவர்களும் தங்களின் எதிர்ப்பை மூடிக்கொண்டு ஒன்றாகிக் குலாவ வருகிறார்கள்.

வர்கள் பலவிதத்திலும் அந்தச் செல்வத்தை யழித்து வறுமைக்குரிய இம்சைகளைச் சீக்கிரத்தில் தங்களின் மதிக் குறைவினால் வருவித்துக் கொள்கிறார்கள். இந்தக் காரியங்களை ஆலோசிக்குமளவில், பெரும்பாலும் மனிதரும் கெட்டு, மிகவும் இச்சிக்கத்தக்கதா யிருக்கும் விவாக வாழ்க்கையும் கெடத் தெளிவான ருசு நமக்கு விளங்குகின்றது. சம்சாரங்களிலே ஸஞ்சலங்கள் விளைவதற்குப் பல காரணங்களுண்டு. நான் விவாகமான மங்கையல்லவாயினும், அந்தக் காரணங்களால் விளைந்த அநேக பொல்லாங்குகளைக் கண்டிருக்கிறேன்.

ஃ

உமது காகிதத்திற் பேசிய ஆக்ஷேபங்களாலும், உங்களுக்கும் இது தெரிந்திருப்பதாய்க் காண்கிறது. உங்களுக்கு உண்டாயிருக்கும் ஸ்திதி நீங்கள் சொல்லியபடியே சரியென்றாலும், இரண்டாம் ஆக்ஷேபத்துக்குச் சொல்லிய உத்தரம் எனக்கு சாமாதானப்பட்டதாக யிருக்கவில்லை. மாற்றாந்தாய்மார்பேரில் வழக்கமாகச் சொல்லப்படும் ஆக்ஷேபங்களுக்கு நீங்கள் சொல்லிய உத்தரம் சரியானதாயினும், அவைகள் நியாயத்துக்கு எப்போதும் சொல்லப்படுகின்றவைகளாயும், விவேகத்துக்கும் அப்படி சொல்லப்பட வேண்டியவைகளாயுமிருக்கின்றன. ஆனால், உலகத்தில் விவேகசாலியா யிருப்பவர்களின் புத்தியில் முதலாய் மாற்றாந்தாயென்பது நீங்கள் எனக்குச் சொல்லும் சமாதானத்துக்கு மிஞ்சிய வெறுப்பாகவே யிருக்கின்றதென்று உங்களுக்கு உண்மையாகச் சொல்வதை நீங்கள் குற்றங் கொள்ளவேண்டாம்.

ஃ

எல்லாரும் தங்கள்கண்களையவள் பேரில் வைத்து, அவள் செய்யும் நல்ல காரியத்தை முதலாய்க் குற்றமாகப் பேசுவார்கள். இரண்டு மூன்று பிள்ளைகளை வைத்திறந்துபோன தாயானவள் தன் புருஷனுக்கு முந்திய தாரமாய் இருந்ததைப்பற்றி, பின்பு வந்த மாற்றாந்தாய் அந்தப் பிள்ளைகளைக் கொடுமை செய்வாளென்று மெய்யான விவேகிகளொருநாளும் நினையார்களென்பதெனக்கு நிச்சயமே. அதேனெனில், அப்படியவள் செய்யும்போது, மூன்று பொல்லாத குற்றங்கள் அவள்மேல் வந்து சுமரும். முதலாவது, இறந்த தாயினிடத்து இரக்கமில்லாமையும், இரண்டாவது, இருக்கும் பிள்ளைகளிடத்தில்கொடுஞ்சூரித் தன்மையும், மூன்றாவது தன் புருஷனிடத்தில் ஒரு லக்ஷ்யமற்ற தன்மையுமாம்.

ஃ

ஸ்திரீயானவள் தன் புருஷனுக்குத் தன்னைப்போல் அன்புள்ளவளாயிருந்த மூத்த மனைவி பெற்ற மக்களை அவன் அன்புடன்நடப்பித்து மற்றவர்களும் அப்படி நடப்பிக்கச் செய்யாவிட்டால், தான் பெறும் பிள்ளைகளைச் சரிவர நடப்பிப்பானென்று எண்ணி அவனை எப்படி மதிக்கப்

அதிக சிக்கனமாயுள்ள தந்தைக்கு அதிகச் செலவாளியான புத்திரன் தோன்றுகிறான். தந்தையின் சிக்கனம் கடைசியில் ஒரு பெரிய செலவில் பணத்தை வீணாக்கச் செய்துவிடுகிறது. தந்தையைக்கேட்டு ஒன்றைப்பெற முடியாததைக் குமாரனைக் கேட்டுப் பெற்றுக்கொண்டு போய்விடுகிறார்கள். இவ்விதமே, வீட்டுக்காரனிடம் பெறமுடியாததை வீட்டுக்காரியை வசப்படுத்திப் பெற்றுக்கொண்டு விடுகிறார்கள்.

போகிறுள்? ஐயனே! நாம் நிலயற்ற உலகத்தில் வாசம் பண்ணுகிறவர்களென்று உங்களுக்குத் தெரியும். தங்கள் சுகத்தைக் கெடுத்துக்கொள்ள எவரும் விரும்பாராயினும், தர்மத்துக்குக் கட்டுப்பட்டுத் தங்கள் சுகத்தை விட்டுக்கொடுத்துங்கூட நடந்து கொள்ள வேண்டிய அவசியமும் வரும். உங்களின் கீர்த்திக்கும் குணுதிசயங்களுக்கும் ஆஸ்திக்கும் நீங்கள் என்னிலும் மிக நேர்த்தியான மனைவிக்கே தகுந்தவராஞலும், மேற் சொல்லிய காரணங்கள் என் உள்ளத்தில் மெத்தவும் உறுத்துகின்றது பற்றி ஒரு மாற்றுந்தாயாக அமர்வதற்கு அஞ்சி நான்பின்னடைகிறேன். அதனுல் உம்மை விவாகம் செய்து கொள்ளத் தடையாயிருப்பதால், அவைகளுக்கு நீங்கள் முன்புசொல்லியிருப்பதைப் பார்க்கிலும் அதிக சமாதானமாக—என்னை உமது மக்களின் மாற்றுந்தாயாக எண்ணுமலிருப்பதாக —உத்தரம் எழுதாவிட்டால், இப்போது இருக்கிறபடி விவாகமில்லாதிருப்பதே எனக்கு இஷ்டமாயிருக்கும் அப்படி யிருந்தாலும் உங்களின் செய்தி அடிக்கடி கேள்விப்படுவது எப்போதும் எனக்கு சந்தோஷமாயிருக்கும்.

இங்ஙனம்

உண்மையாக உங்களுக்கு
க்ஷேமம் கோருகிற
மேரி.

இதற்குப் பதில் உள்ள மூன்றுவது கடிதம் மறுமுறை வரும்.

எல்லோருமே எனக்குத் தெரிந்தவர்கள்.

ஆ! அப்படியா? எல்லோரும் உனக்குத் தெரிந்தவர்களா? எவரைப்பார்த்தாலும் அவர்களோடு குலாவிப் பேசியபடியே இருக்கிருயே. எத்தகையோரும் உன்னைக் கண்டதும் வெகு சொந்தமாகப் பேச உன்னிடம் நெருங்குகிருர்களே! ஊரில் எல்லோருமே உனக்குத் தெரிந்தவர்களா யிருக்கிருர்களே! ஆகா! எவ்வளவு பெருமை! எவ்வளவு கீர்த்தி! எல்லாம் சரிதான். உன்னைப்போலவே ஊரெங்கும் நேசர்களும் அறிமுகஸ்தர்களும் கொண்ட சிலர் வியாதிப்படுக்கையில் வீழ்ந்ததும் எவரும் எட்டியே பாராமற் போனதையும், சிலர் கடனில் மூழ்கித் தரித்திரமாகவே மற்றவர்களும் ஒதுங்கி மறைந்துவிட்டதையம்பற்றி நீ என்ன சொல்லுகிருய்? உனக்கு அப்படி நடக்காதென்றும், நீ பிணிவாய்ப் படின் எல்லோரும் தாங்குவார்களென்றும் நினைக்கிருயா? எல்லாரையும் தெரியுமென்பது வீண் பெருமையே. உன் கையில் ஒரு காசு இருந்தால்—ஒரு உத்தம மித்திரன், ஒரு உண்மையான பந்து இருந்தால்-அதுதான் உனக்கு உதவக்கூடியதாகலாம்.

பெண்கள் நாயினுங் கடையரா?

இனிமேலாகிலும் உங்கள் தர்ம பத்தினிகளை 'ஓசே' 'ஓசே' என்று இழிவாய்க் கூப்பிடாமல் அவர்களின் பேர்களைச் சொல்லி அன்புடன் அழைக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்ளுகிறேன். விவாஹ காலத்தில் பன்முறை பெண் ஜாதியின் பெயரைச் சொல்லும்படி பந்துக்கள் பழக்கியும் 'ஓசே' என ஏன் இழிவாகக் கூப்பிடவேண்டும்?

ஃ

தனது சம்சாரங்களுக்கு வைத்திருக்கும் அழகிய பேர்களைச் சொல்லிக் கூப்பிடாமல், சிலர் உம், உம் என அழைக்கிறார்கள். வேறு சிலர் பள்ளிக்கூடத்திற்குச் சென்றிருக்கும் தன் புத்திரர்கள் பேரை சொல்லிக் கூப்பிட்டால் தன் பெண்ஜாதி வர வேண்டுமென்றும் ஏற்பாடு போலும். இன்னும் சிலர் இரண்டும் சொல்லாமலே தன் பெண்ஜாதி யிருக்கும் இடம்வரை சென்று "ஒருவருக்குக் காப்பி தயார் செய்து கொடு" என்று சுவற்றினிடம் சொல்வதுபோல் மொட்டையாய் சொல்லுவார்கள். மற்றும் சிலரோ தமிழில் "அடியே" என்றும் தெலுங்கில் "ஓசே" என்றும் இழிவாய்க் கூப்பிடுகிறார்கள். அந்தோ பரிதாபம்! கேவலம் நாய்களைக்கூட 'மேரி' 'ரோஸ்' 'டாம்' என்னும் பல அருமைப் பேர்களால் அழைக்கிறார்களே! அப்படியிருக்க அக்னி சாக்ஷியாய்ப் பல நூறு ரூபாய்கள் செலவழித்து விவாஹம் செய்த தர்ம பத்தினிகளை சீதா, துளசி, ஜானகி, கமலா, விமலா, சகுந்தலா, சாவித்திரி என அழைத்தால் இவர்கள் மூதாதைகள் சம்பாதித்த பேரும் பிரக்யாதியும் அத்துடன் போய்விடுமோ என்று நான் கேட்கிறேன். ஒருக்கால் அவ்வாறு கூப்பிட்டுவிட்டால் அப்பெண்களுக்கு அதிக சுதந்தரம் கொடுத்ததாகக் கருதித் தலைக்குமேல் ஏறிவிடுவார்களோ என்னும் பயத்தால் இப்படிச் செய்கிறார்களோ யாதோ!

(இராஜகுல தீபிகை.) சீதாலக்ஷ்மி.

நூலாசிரியன் (பத்திராசிரியனுங்கூட) ஒரு மோசக்காரன். தன் குடும்பத்தைக் கவனியாமல் ஊருக்கு உழைத்துத் துரும்பாய்விடுகிறான். தனது குழந்தைகளுக்குக் கல்வி கற்பிக்கக்கூட அவனுக்கு நேரமிருப்பதில்லை. இறப்பதற்கு ஒரு நிமிஷம் இருக்கும்போதுகூட அவன் பிறருக்குப் பத்து பக்கக் கடிதம் எழுதுவான். அவன் அத்தனை பக்கங்கள் எழுதினானேயென்று அவன் எழுத்தால் அவன் தேகநிலையை—'அவன் சுகமாயுள்ளான்' என்பதாக நம்பிவிடக்கூடாது. 10—பக்கம் எழுதியது பழகிப்போன மனோவேகத்தாலாகும். அவ்விதம் எழுதிய கடிதத்தைத் தபாலுக்கு அனுப்பிய அடுத்த நிமிஷமே இதயத்துடிப்பு நின்று இறத்தலுங்கூடும். மனோ உழைப்பாளரின் தேகம் சாசுவத நம்பிக்கைக்குரியதல்ல. அன்னோர் ஜீவனோடுள்ள காலத்தில் மனதார உதவி புரிவோர், தாம் செய்ததற்குப் பத்து பங்குக்கு அதிகமாய்க் கடவுளிடமிருந்து பிரகு பெறுவது நிச்சயம்.



இஸ்லாத்தில் ஸ்திரீகளின் உன்னதம்:—

[உயரிய காகிதப்பதிப்பு. ஆக்கியோன் மகா-ள-ள-ஸ்ரீ S. புருஹானுத்தீன், "பாவலர் வில்லா" அடியற்கைமங்கலம். தஞ்சாவூர். விலை அணா 3.]

இது ஒரு ஆராய்ச்சி நூல். அழகிய நூல். இஸ்லாத்தில் ஸ்திரீகளுக்குள்ள உன்னதத்தைப்பற்றிச் சொல்வதுடன், மற்ற மதங்களில் மாதர்கள் பெற்றுள்ள சுதந்திரங்களையும் விளக்கியுள்ளது. இவ்வாறான பயனுள்ள நூல்கள் லக்ஷக்கணக்காகப் பரவுதல் வேண்டும். இஸ்லாமே ஸ்திரீகளுக்குப் பூரண சுதந்திரம் தந்துளதென்றும், அவர்கள் அடிமைகள் போன்றும் பதுமைகள்போன்றும் முஸ்லிம்களால் நடத்தப்படுவதாக மொழிவது பொருந்தாதென்றும் இதன் ஆக்கியோன் முடிவுரை கூறுகின்றார். அவரது உத்ஸாகமான சிந்தனைகட்கும் ஆநந்தத்துக்கும் இறைவன் ஆசியருள்வாராக. பழகிப்போன ஒரு தன்மையால், சுதந்திரமோ, சுதந்திரக் குறைவோ எதுவுமே தோற்றாமல் உள்ள உரிமையில் திருப்திகூர்வது எங்கும் இயல்பாயுளது.

ஃ

இஸ்லாத்தின் கோட்பாடுகள்:—

[ஆக்கியோன் மகா-ள-ள-ஸ்ரீ S. அப்துல்மஜீது மஜீத்மான்ஷன், நாச்சியார் கோவில் தஞ்சாவூர். விலை அணா 5.]

இஸ்லாம் மதத்தின் உயரிய உண்மைத் தத்துவங்கள் வெகு தெளிவும் சங்கிரகமுமாக இந்த அழகிய நூலில் தொகுத்துரைக்கப்பட்டுள்ளன. சிறப்பாக முஸ்லிம் ஸகோதரர்களும், பொதுவாக ஏனைய மதத்தினர்களும் வாசித்துப் பார்க்கத்தகுந்த நூல். ஒவ்வொரு மதத்திலும் உயரிய தத்துவங்களிருந்துகொண்டு, அவைகள் அந்தந்த மதத்தினர்களை மேல் நோக்கிச் செல்லுமாறு செய்வித்து உய்விக்கின்றன.

ஃ

இஸ்லாமிய சரித்திரத் திரட்டு:—

[ஆக்கியோன் மகா-ள-ள-ஸ்ரீ S அப்துல்மஜீது. விலை அணா 4.]

இஸ்லாமிய சரித்திர சம்பந்தமான 12—பாடங்கள் இதில் உள்ளன. முஸ்லிம் ஸகோதரர்கட்கு இது மிகவும் உபயோகமான நூல்.

ஃ

டால்ஸ்டாய்:—

[அல்லது மகாத்மா காந்தியின் குரு. படத்துடன் உள்ளது. ஸ்ரீமான் ஆக்கூர்—அனந்தாச்சாரியார் அவர்கள் இயற்றியது. கிட்டப்பா மலர் பிரசுராலயம் திருவல்லிக்கேணி சென்னை. விலை அணா 3.]

டால்ஸ்டாயின் சரித்திரம் சங்கிரகமாயும் அழகாகவும் தொகுத்துள்ளது. அவரது பொன்மொழிகளும் போதனைகளும் அடங்கியுள்ளன. படிப்பவர் பயன்பெறத் தகுந்த முறையில் நூல் ஆக்கப்பெற்றுள்ளது. இதனை இயற்றினோரது விசால

ஹிருதயமும், அன்னவர் பாரதனூல த்திடை வைத்துள்ள பேரன்பும் போற்றற்பாலது. இந்நூலை வாசிப்ப வர் புது எண்ணங்களுடன் பத்துயிர் பெறுவரென்பது உறுதி. சிறு நூல்க ளைச் சிறு குழந்தைகள்போன்று போற்றிப் பெற்று ஆசிரியரை ஆத ரிக்க வேண்டியது ஒவ்வொருவரு டையவும் கடமையாகும். இதன் ஆசிரியரது புதிய ஊக்கம் மேன்மே லும் வளர்ந்தோங்குவதாக.

புருஷன் மனைவிக்கு நல்ல வனாய் இருக்கவேண்டுமானால், —அப்படிச் செய்துகொள்ளக் கூடிய சக்தி-மனைவி காட்டுகிற அன்பிலும், வணக்கத்திலும், உட்பட்டுத் தாழ்மையுடன் நடந்துகொள்ளுவதிலும் இருக் கிறது. ஆவதும் அழிவதும் பெண்ணாலே.

துணிந்து போட்டுவிடு.

செலவுகளுக்கு என்ன குறைவு? மேலும் மேலும் ஏதாவது செலவுகள் வந்துகொண்டேதான் இருக்கும். அந் தச் செலவுகளோடு தபாலாபீஸ் சேவிங்க் பாங்கியிலும் ஒரு குறித்த தொகையைப் பிரதிமாதமும் போட்டுவருவதையும் ஒரு செலவாக வைத்துக்கொள். ஒவ்வொரு மாதமும் இவ் வளவு தொகை மிச்சம்பிடிப்பதென்பதில் ஒரு உறுதிகொள். பின் செலவுகளை யோசித்துக் கையில் பணத்தை நிறுத்திக் கொண்டு, அடுத்தமாதம் போடுவோம் என்று பின்வாங் காதே. ஒவ்வொரு மாதமும் ஒழுங்காகச் செலுத்திவிடத் துணிவுகொள். துணிந்துபோட்டுவிடு. பிறகு அந்த மாத செலவுகளுக்குக் கஷ்டமாயிருந்தால், எவ்விதமோ சிக்கன மாய்ப் பாதி பட்டினியோடு நடத்திக்கொண்டு போய்விடு. இவ்விதம் நீ துணிந்துவிட்டாயானால், கடவுளும் அதற்குத் தகுந்த வழி செய்துவைப்பாரென்பதை நீ திடமாக நம்பு. செலவிட்டு விடுவது சுலபம். சேர்ப்பதுதான் மஹா கஷ்டம். ஒழுங்காகச் சேர்த்துவந்தால் தான் பிறகு ஒரு மொத்தத் தொகையைக் காணமுடியும். அந்தத் தொகைதான் இவ்வுல கில் உனக்கு ஒரு தைரியமான ஆஸ்தி. ஆகவே, எந்தச்செல வையும் எண்ணாமல் கடவுளை நம்பித் துணிந்துபோட்டுவிடு. லைப் இன்சூரன் கம்பெனியிலும் சேர்ந்துகொள். அது ஒரு பெரிய பலம். சேர்த்தவனுக்கே எங்கும் மதிப்பு.

இனிய பொழில்கள், நெடியவயல்கள், எண்ணரும் பெருநாடு
கனியுங் கிழங்குந் தான்யங்களும் கணக்கின்றித் தருநாடு.
[இது கணக்கின்றித் தருநாடு—நித்த நித்தங் கலைக்கின்றித் தருநாடு]

சித்திர தரிசனம்.



மாலை நேரம். சித்ரீகனொருவன் மலையின் மீது காற்று வாங்கிக்கொண்டிருக்கின்றான். அவன் இருதயம் குதூஹலத்துடனிருக்கின்றது. உதடுகள் புன்னகையால் பிரிகின்றன. உலகை நோக்குகின்றான். அவன் உள்ளத்தில் புதியதோர் சித்திரம் வரையும் ஆசை உதிக்கின்றது. உடனே சித்திரம் எழுதப் பலகையைத் தேடுகிறான். மானிட வாழ்க்கை யென்னும் பலகையைத் தரையினில் பரப்புகின்றான். அடாடா! எழுதுகோலும் மைக்கோலு மில்லையே யென வருந்துகின்றான். மானிட இன்ப துன்பங்கள் எழுதுகோலாயும் மைக்கோலாயும் அவன் கரங்களில் ஏறுகின்றன. ஆனால், மைக்கு எங்குபோவது? ஆசைகளுக்கு அடிமையர்க்குகிற அற்புத சக்தியானது மையாக மாறி அவன் முன் குதிக்கின்றது. இனி அவன் வேண்டுவதென்ன? இல்லற இன்பதுன்பங்களைக் குறிக்கும் அழகிய படமொன்றை வரைந்தான்.

ஃ

முத்தத்தை வரைய வேண்டுமென்றோர் ஆசை யவனுள்ளத்தில் உதித்தது. காதலர் இருதயங்களை எழுது பலகையாக்கினான் சித்ரீகன் அமுதத்தைக்கொண்டு எழுதவேண்டுமென்ற ஆசை எழுந்தது. ஆனால், அமுதம் பொறாமை யென்னும் அரலினால் கெட்டிப்பட்டிருந்தது. கதிரவனுதிப்பதற்குமுன் பொற்கிரணங்களில் சுகந்த மலர்களின் நுனியிலும், பசும்புற்களின் நுனியிலும் மாணிக்கமென ஜ்வலிக்கும் பனித்துளியைக் கொண்டு அமுதத்தைக் கரைத்தான். காதலென்னும் பேனாவைத் தோய்த்து முத்தமென்னும் படத்தை யெழுதினான். அதைக்கண்டு பொறாமைகொண்ட மற்றோர் மாது அப்படத்தை யழித்துவிட்டுச் சென்றாள். ஓவியன் மனம் நொந்தான். ஹா! அவர்கள் முத்தமிடுவதைக் காண இவன் மனம் சகிக்கவில்லையே யென்றெண்ணினான். அதே நிமிடம் பொறாமை யென்னும் சித்திரத்தை யெழுதும்படி அவன் மனம் தூண்டியது.

ஃ

சுடும் நெருப்பில் கருகிய ஓர் பலகையை யெடுத்தான். அக்கினித் திராவகத்தில் வஞ்சனை யென்னும் பேனாவைக்கொண்டு கோரமானதோர் சித்ரம் வரைந்தான். அவன் ஆத்மா சாந்தி பெற்றது. மனம் பூரித்தது. மெய்மறந்து அங்கு படுத்து, பின் ஜாமத்தை ஈசனுடன் கழித்தான். ஆ! இந்த சித்ரீகனின் வல்லமை என்னே!

K. V. S. வாஸ்.

மனிதனால் செய்யப்பட்ட ஒவ்வொன்றும் எல்லாவிதத்திலும் ஸம்பூர்ண ஒழுங்குடையதாயிருப்பது கஷ்டம். ஆதலின், தான் செய்தவற்றைச் சரிதானா என்று பிறரைக்கேட்டுத் திருத்துவது மேல். ஆனால், எல்லாவற்றுக்கும் பிறரது யோசனைகளைக் கேட்பதென்பது சாத்தியமா?

ஆ! படிப்பே! திருத்தமே!! ஏக்கமே!!!



ஆ! படிப்பே! பூரணமே! ஆநந்த வாரிதியே! வற்றாத சமுத்திரமே! உற்சாகபீடமே! உன் மகிமை என்ன? அந்தஸ்து என்ன? ஆரவாரமென்ன? பூரிப்பென்ன? புளகாங்கிதமென்ன? மீட்டிங்குகளென்ன? அதிலே பேச்சுகளென்ன? எழுத—எழுத ஊற்றெடுத்துப் பெருகும் நின் அதிசயமென்ன? சுந்தரமென்ன? இனிமை என்ன? சொகுஸென்ன? ஆ! உன்னை எவ்விதமென்று புகழ்வது—துதிப்பது—கொண்டாடுவது—போற்றுவது—வழிபடுவது? உனக்கு இணை—சமானம்—ஒப்பு—உயர்வு—இவ்வுலகினில் ஏதவுண்டு? "கல்வியினூங்கில்லை சிற்றுயிர்க்குற்றதுணை" என்றதுகூட உன் அருமை அறிந்துதானே சொன்னது! நீ மட்டும் ஒருவனுக்குச் சொந்தமாகிவிட்டால் அவன் நிலைமையையே மாற்றிவிடுகிறாய்! பிச்சைக்காரனை அரசனின் பக்கத்தில் வீற்றிருக்கத் தக்கவனாகச் செய்துவிடுகிறாய்! ஏழையொருவனை ஐகோர்ட் ஜட்ஜியாக்கிவிடுகிறாய்! கப்பலிலே சாமான்கள் தேய்த்துக்கொண்டிருந்தவனை அரசாளவைக்கிறாய்! ராணுவத்திலே ஒரு மூலையில் கிடந்தவனை முடிசூட வைக்கிறாய்!

ஃ

ஆ! படிப்பே! உன் அருள் பெற்றவுடனே தரித்திரகுடும்பம் தன சம்பத்துள்ள குடும்பமாக மாறுகிறது! சொக்காய்தானும் உடுத்தறியாதவனைச் சோக்காக மோட்டாரில் ஏறச் செய்கிறாய்! ஆ! படிப்பே! உன்னைச் சொந்தமாகக் கொண்டால் பெண்ணும் பொருளும் பூமியும் வலியக் கிடைக்கிறது! குடிசைவாழ்வு கோபுரவாழ்வாகி விடுகிறது! மாமனார் வீட்டைக் கொள்ளையடிக்கப் பண்ணுகிறது! வரதக்ஷிணை ஐயாயிரம்ரூபாய் கூசாமல் கேட்கத் திமிர்கொடுக்கிறது! முந்திய நிலைமையையே மறந்துபோக வைக்கிறது! நாற்காலிகளென்ன! ரவுண்ட் டேபிள்களென்ன! பீரோக்களென்ன! கட்டுங் கவிகளென்ன! பலபக்க வியாசங்களென்ன! நாவல்களென்ன! மொழி பெயர்ப்புகளென்ன! பவுண்டன்பேனா, பென்ஸல், மைப்புட்டி, மையொட்டுங் காகிதம், தபால், தந்தி, ரயில், உத்தியோகம் இவைகளெல்லாம் உன் மகிமைகளல்லவா?

ஃ

ஒரே பெயரைக்கொண்டு நாளுக்கொருவிதமாய், வாரத்திற்கொரு

தினுசாய், பக்ஷத்திற்கொரு வகையாய், மாதத்திற்கொரு மாதிரியாய் வரும் பத்திரிகைகளெல்லாம் உன் மகத்துவத்தால்தானே! வேதங்கள் உன்னாலே! சாஸ்திரங்கள் உன்னாலே! போதனைகளுன்னாலே! ஜெகமிருப்பதும் உன்னாலே! சட்டதிட்டங்களுன்னாலே! ஜாதி மகாநாடுகளுன்னாலே! பெரிய சிறிய சபைகளுன்னாலே! வித்தியாபட்டங்கள் உன்னாலே! வாசா மகோசரமாய்ப் பேசுவதுன்னாலே! பொய்மையும் மெய்மையும் தலைகீழாக்கும் சாமர்த்திய வக்கீல்களுமுன்னாலே! செத்துப்போகக் கால்நிமிஷமிருக்கும்போதுகூட பீஸ் பணம் வாங்கிப்போகும் டாக்டர்களுமுன்னாலே! வஞ்சனை செய்வதும், குடிகெடுப்பதும், குல்லாபோடுவதும், நம்பினவனை நட்டாற்றில் தள்ளப் பார்ப்பதும்—அதற்கான யோசனை—யுக்தி—வாய் சமர்த்து—சாமர்த்தியம்—எல்லாமுமே உண்டாக்கிக்கொடுப்பதும் நீயே! பக்தி, ஞானம், மோக்ஷம், தியானம், இன்பம், சித்திரம், சங்கீதம் எல்லாவற்றிற்கும் வழி காண்பிப்பதும் நீயே! கலைநூல், சாஸ்திரநூல், போதனை, சாதனை, சமயம் முதலான பலதிறத்து அறிவுகளும் ஆ! படிப்பே! உன்னில் அடங்கியதுதானே!

ஃ

மோகம்—என்ற அவலக்ஷண பதத்தை நீக்கி—"காதல்"—என்ற கௌரவமான பெயர் வழங்க வைத்து விடுகிறாய்! உன்னைச் சொந்தமாகக் கொண்ட பெண்களுக்கு ஆ! நீ என்னென்ன கௌரவங்களை யெல்லாம் கொடுத்துவிடுகிறாய்! அழிந்த கற்பை மறைத்துக்கொள்ளவும் மார்க்கம் காட்டுகிறாய். கர்ப்ப காலத்திலே உன் திபானத்தையே பெண்கள் கொண்டிருந்தால், அவர்களின் வயிற்றுக்குள்ளிருக்கும் சிசுவையும் உன் அமிஸமாகச் செய்துவிடுகிறாய்! கொண்டையிலே பூமுடித்துக் கோடி பட்டுச் சேலை கட்டிடுங் கண்டசரம் காசுமாலைக் காரிகைமின்னார் உபாத்தியாயனிகளாக வந்துவிடில் மூக்குக் கண்ணாடிகளோடும் பெரிய மதிப்பை உண்டாக்கிவிடுகிறாய்! "அவள்"—என்ற இழிந்த சொல்லை நீக்கி "அவர்"...என்றழைக்கும் பெருமைக்குக் கொண்டுவந்து விடுகிறாய்! "கல்வி கரையில—கற்பவர் நாள் சில—மெல்ல நினைக்கிற் பிணிபல"—என்றதும் உன்னைக் குறித்துத்தானே! எவ்வளவு வருந்திக் கற்றாலும் "கற்றது கைம்மண்ணளவு" என்று சொல்லிவிடுகிறாய்! ஆ! உன் மகிமை—பெருமை — கீர்த்தி—பிரதாபம்—உயர்நலம்—ஜகஜ்ஜோதி இவைகளைப்பற்றி இன்னும் எவ்வளவோ இந்த விகடன் சொல்லலாமே!

ஃ

ஆ! படிப்பே! இவ்வளவு சிலாக்கியங்கள், உன்னதங்கள் எல்லாமுமே உனக்கு இருந்தாலும், உன்னைத் துணையெனக் கொண்டோர் படும்பாடு கடவுளுக்கே அற்புதம்! அந்தக் 'கண்ராவி'யை ஏன் நீ உண்டாக்குகிறாயோ? சந்திரனிடத்திலும் களங்கமிருக்குமென்பார்களே! உன்னிடத்திலுள்ள களங்கமோ பெரும் நம்பிக்கைத் துரோகமாய் பிராண வேதனையாய்த் தவிப்பா யிருக்கிறதே! ஔவையும் "கூழுக்குப்பாடி" எனப்

பெண்ணுருவம் இயற்கையிலேயே மிக்க அழகுள்ளது. அதை ஸகோதரியாகவும் குமார்த்தியாகவும் பெற்று இன்னொரு வீட்டிற்குத் தானமாகத் தருவது மகா பாக்கியமாகும். அதனால் ஒரு வீட்டுடன் இன்னொரு புதுவீடும் சேருகிறது.

பெயரேற்ருள்! காளமேகமும் சால வறிஞனுன்! 'இரட்டைய'ரும் வறுமையில் ஈடில்லாதவர்களே! கம்பனும் இவ்வளவு நெல்லுக்காக, "நெற்கொண்டு போமளவும் நில்லாய் நெடுஞ்சுவரே" என்று பாடி வருந்தினுன்! "அட கெடுவாய், பல தொழிலுமிருக்கக் கல்வி யதிகமென்றே கற்றுவிட்டோம் அறிவில்லாமல்" என்று உன்னை இகழாத குறையாக இகழ்ந்து ஒரு வித்வான் வயிறெரிந்தார்! அதே வித்வான் "சனியான தமிழை விட்டுத் தையலார்தம் இடமறிந்து தூதுசென்று பிழைத்தோ மில்லை" என்று வாடினுர்.

ஃ

ஆ! படிப்பே! ஐயோ! உன்னை நம்பியவர்கள் தங்களின் பிழைப்பு தவறிவிடும்போதும், பிழைப்பே கிடையாத போதும், ஆ! எவ்வளவு கஷ்டப்பட்டுப் போகிருர்கள்! கைத்தொழில்கள் எதுவுமே அறியார்! வேறு வகையில் உழைத் துண்ணவும் தெரியார்! ஒரு வெற்றிலைப் பாக்குக் கடை வைத்து ஜீவிக்கவும் அனுபவம் காணுர்! அதனை இழிவென்று எங்குவார்! எல்லாம் நீயே என்று உன்னையே நம்பியதில் அவர்கள் நாசக் குழிக்கே போகிருர்கள்! ஆ! படிப்பே உன்னையே கைப்பிடியாகப் பற்றிய ஒரு உத்தியோகஸ்தன் நாளைக்குத் தன் வேலையிலிருந்தும் தள்ளப்பட்டுப்போவானுகில் அவன் கதியென்ன?—அவன் குடும்பம் போகும் வழியென்ன? அன்ன வஸ்திரத்துக்கு மார்க்கம் எப்படி?—அவன் வாணுள் கழிப்பது எவ்வாறு ?

ஃ

ஆ! படிப்பே! உன் நேசம் தேடவந்து எத்தனை மாணவர்கள் பரீக்ஷை தேருமல் தற்கொலைசெய்து கொண்டார்கள்! எவ்வளவு கல்விமான்கள் பிழைக்க வகை யறியாமலும்—அதற்குத் தருணம் கிடைக்காமலும் தவிக்கிருர்கள்! எத்தனை நூலாசிரியர்கள், கிரந்த கர்த்தர்கள் தாங்கள் எழுதிய நூல்களைத் தாங்களே அச்சிடமுடியாமல் பிறருக்கு விற்றுழுகிருர்கள்! துணிந்து அச்சிட்டாலும் அப்புஸ்தகங்கள் சீக்கிரம் விலையாகாது போக, அவர்கள் மனம் குன்றி, ஊக்கம் தளர்ந்து படும் பரிதாபம் பகரற்பாற்றே? பீ.ஏ., எம்.ஏ., படித்துவிட்டு உத்தியோகம் கிடைக்காமலும், கிடைத்தாலும் அது 15, 20, 25 ஆனுல் அது எவ்வளவு வயிற்றெரிச்சல்! கல்விக்குச் செலவிட்ட பணத்துக்கு வட்டிகூடக் காணுமே! எவ்வளவு படிப்பாளிகள் வீட்டிலுட்கார்ந்துகொண்டு சீலைப் பேன் குத்துகிருர்கள்!

ஃ

ஆ! படிப்பே! உன்னைக் கைப்பற்றியதால் அறிவு வளர்ந்து போயிற்று! ஆவல் தாகம் பெருகி விட்டது! தேசாபிமான எண்ணங்கள்-லோகோபகார சிந்தனைகள்—பத்திராதிபத்யம் நடத்துகிற தீவிரங்கள்—பல்வகைத் தாய நூல்களை இயற்ற யோசனைகள்—பெரிய பெரிய கருத்துகள் மனோரதங்கள்—இவைகளெல்லாம் அதிகப்பட்டுப் போயின! ஆ! படிப்பே! இந்த ஆசைகளை யெல்லாம் நிறைவேற்றுவதற்கு முயன்று உன்வரம் பெற்றவர்கள் படும் கஷ்டங்கள் எண்ணித் தொலைய முடியுமோ! அவர்களின்

மாமியில்லாத மருகி மரத்தால் ஒருமாமி செய்துவைத்துக்கொண்டு, எது ஒன்றையும் அந்த மர மாமியாரைக் கேட்டுச் செய்துவந்தாளாம். அவ்விதமே சகோதரியில்லாதவன் எங்கேயாவது இரவல் பெற்றுக்கொண்டால்தான் மனதிற்குத் திருப்தியுண்டாகுமாம்.

பாடுகேன் எழுத்திலடங்குமோ! எடுத்தது கைகூடாமல் வேகுகிற அவர்களது நெஞ்சின் துயரம் சொல்லவும் ஒண்ணுமோ! என் இப்படிச் செய்கிறாயோ!—சோதிக்கிறாயோ!—வாதிக்கிறாயோ!—பகை சாதிக்கிறாயோ!—படித்த படிப்புக்கு மதிப்பைக் காணோமே! பணமூட்டைக்குத்தானே அதிக மதிப்பு ஏற்பட்டு விட்டது! படியாத வியாபாரிக்குள்ள மதிப்பு படித்த சாம்பிராணிக்கு இல்லையே!

ஃ

ஆ! திருத்தமே! சீர்திருத்தமே! வா அப்பா வா! உன்னைத் தேடாத தேசம் எது? உன்னை நாடாத ஜாதியார் யார்? எல்லோருமே உன் வரவுக்கு எதிர்பார்க்கிறார்கள்! உன்னை விரும்பி யழைக்கிறார்கள்! உன்னைக் கொண்டாடுகிறார்கள்!— புகழ்கிறார்கள்!— துதிக்கிறார்கள்!— வாழ்த்துகிறார்கள்!— வணங்குகிறார்கள்!— யாவருமே உன்னை வழிபடுகிறார்கள்! ஆனால் நீ, சீர் ஆக உள்ளதைக்கூடத் திருத்தம் செய்து அவலக்ஷணப்படுத்திப் பழய மதிப்பைப் பாழாக்கிவிடுகிறாய்! அந்தப் பிசகு தான் கூடாது! பழய நாகரீகமென்று புராதன நாகரீகத்தைக் குப்பையிலே தள்ளுகிறாய்! உன் சீர்திருத்த நாகரீகத்தைக் கோபுரமீது உச்சிக்கு ஏற்றுகிறாய்! பூர்வீக சாதாரண உபோவனைகளை நீக்கி, அதிகச் செலவுள்ள வழிகளைக் கற்பிக்கிறாய்! முன்னோர் தலைமுறையாக இருந்த வீட்டை விற்று மோட்டார் வாங்கச் செய்கிறாய்! பண்ணுகிற ஆசார ஒழுக்க ஹீனங்களை யெல்லாம் சீர்திருத்தமென்று சொல்லி சமாளித்துக்கொள்ள வைக்கிறாய்! அனுசாரங்களை யெல்லாம் சீர்திருத்தம் என்கிறாய்! "கற்றதுங் கேட்டதும் போக்கிலே போகவிட்டு" கண்டபடியெல்லாம் நடக்கத் தலைப்படுகிறாய்! ஏக குடும்பமாய்ப் புஷ்டியாய் இருந்ததைப் புருஷன் மனைவி என்ற தனிக்குடும்பமாக வேறுபடுத்தி விடுகிறாய்! கடவுளையே மறக்கிறாய்! பண்டிகை நோன்பு விரதங்களைப் பழிக்கிறாய்! குடி முதலியவைகளிலே குடி புகுகிறாய்! ஏழை எளியவர்களுக்கு உதவாமல், டம்பங்களுக்கும், கௌரவங்களுக்கும் உலகப் பிரசித்திகளுக்கும் பணத்தை வாரி யிறைக்கிறாய்! வஞ்சனை, மோசம், பொய், துரோகம், திருட்டுக் காமம், ஏமாற்றுதல், சுயநலம் இவற்றை ஸதா துணையாகக் கொள்வதும், பெரியோர்களை அலக்ஷியம் செய்வதும், ஆகிய இவற்றை யெல்லாம் சீர்திருத்தமென்று கற்பித்துவிடுகிறாய்!

ஃ


ஆ! சீர்திருத்தமே! இந்தத் தவறு வழியில் நீ செல்லாதே! எற்கெனவே சீராக உள்ளதை இன்னும் திருத்திப் பரிமளிக்க வை! அந்தப் பொன் மலருக்கு நன்மணம் புகட்டு! தற்கால நாகரீகத்தில் சிலாக்கியமானதை பூர்வ நாகரீகத்துடன் கலந்து, பெருக்கி இன்னும் அதிக ஒளிகொண்டு வீசச் செய்! ஆ! படிப்பே! நீ சீர்திருத்தத்துக்குத் துணை நேசனாயிருந்து அதைத் தவறு வழிகளில் போகாதவாறு காத்து வா! ஆ! படிப்பே! ஆ! சீர்திருத்தமே! உங்களுக்குள் நல்வழியிலே ஒற்றுமை யுண்டாவதாக! ஃ

இவ்வுலக வாழ்வுக்குரிய வித்தைகளில், நவீன ஐரோப்பியர்கள் சிறந்தவர்களாயிருப்பினும், பாரமார்த்திக வித்தையானது எப்பொழுதும் இந்தியாவிலிருந்தோ, அல்லது வேறு கீழ்த்திசை நாடுகளிலிருந்தோதான் கிளம்பி உலகத்தவரை நன்னெறிப்படுத்தி வந்திருக்கிறது.

ஏண்டா அப்பா! எக்கமே! என்னடா செய்கிறாய் அங்கே? ஏங்கி, வீங்கி, கவலைகள் தாங்கி, தூங்கிப் போகாதேயப்பா! தலை எழுத்துக்குத் தக்கபடியே எல்லாம் நடக்குமப்பா! பொறுத்துக் காத்திரு அப்பா! எப்போதுமே உற்சாகமுள்ளவனா யிரு அப்பா! மனத் தைரியம் தான் பெரிய தைரியம் அப்பா! உள்ளம் சோர்ந்துபோக விடுதல் பெரிய தப்பு அப்பா! நீயும் சுகப்படுகிற காலம் இனி வரும் அப்பா! நீமட்டும் உழைத்தபடியே—முயன்றபடியே நாலு பணம் தேடி வருவதற்கான வழியில் அலைந்தபடியே—உன் சுறுசுறுப்பு காட்டிய வழியிலே போய்க்கொண்டிரு அப்பா! தொழிலிலே கேவலமில்லையப்பா! எந்தத் தொழிலும் கௌரவத் தொழில்தா னப்பா! எதையாவது ஒன்றைத் தொட்டுக் கொண்டு பிழைக்கப் பார் அப்பா! ஏக்கத்தை விட்டு, ஊக்கத்தைத் தொட்டு, மேல் நோக்கத்திலே எட்டு அப்பா! கடவுளை நம்பித் துணி அப்பா! வழி கிடைக்குமப்பா! இது பழங்காலத்து விகடன் வாக்கு அப்பா! போதுமா இவ்வளவு அப்பா! இனி விகடன் விடை பெற்றுக்கொள்ளட்டுமா அப்பா! ராம்! ராம்! சுபம்! சூ!! சுவாஹா!!!

சிறைவாச அனுபவங்கள்.

காலை 6-மணிக்கு அரிசி கஞ்சியம், பகல் 11-மணிக்கும் மாலை 8-மணிக்கும் சுமார் 3-பவுண்டு சாதமும் குழம்பும் கொடுக்கப்படுகிறது. முந்தினநாளே துவரையை ஜலத்தில் ஊறப்போட்டு அன்று மாலையில் ஜலத்தை வடிக்கட்டப்படுகிறது. அடுத்த நாள் காலை முளை கிளம்பிவிடும். பிறகு இடித்து அதைத் தனியாக வைத்துக்கொள்வார்கள். புளி ஜலத்தில், மிளகாய்ப்பொடி, உப்பு முதலியவைகளைக் கொதிக்கவைத்து ஏற்கனவே இடித்து வைக்கப்பட்டிருக்கும் துவரையுடன் சேர்க்கப்படுகிறது. இதில் உப்பும், காரமும் சற்று குறைவாகவேயிருக்கும். இதைத்தான் குழம்பு என்று சொல்லுகிறார்கள். மாவு அரைப்பவர்களுக்கும் பைத்தியக்காரர்களுக்கும் தான் பிரதிதினமும் குளிக்க அனுமதி உண்டு. கைதிகள் தங்கள் உடுப்புகளைப் பிரதி ஞாயிற்றுக்கிழமை காலையில் சலவைக்குப் போட்டுவிடவேண்டும். சாதாரணக் கைதிகள், உடுப்புகளையெல்லாம் சலவைசெய்து மாலையில் திருப்பிக் கொடுப்பார்கள். ஆகையால், அன்று காலை முதல் மாலை வரையில் கௌபீனத்துடன் தான் இருக்கவேண்டி நேரிடுகிறது. அலுமனியத்தினால் செய்யப்பட்ட டம்ளரும், தட்டும், தென்னைநார் பாயும், கம்பிளியும் கொடுக்கப்படுகிறது. கைதிகள் மண்ணினால்தான் பல் துலக்கவேண்டியிருக்கிறது.



புதுப் பிராம்மணர்களாவதற்கும், பரம பாகவத சிகாமணிகளாவதற்கும் முதலில் மீசையைச் சிறைத்துக் கொள்ளவேண்டுமாம்!

தான் தனது மாமிக்கு உட்படா விட்டால், தனக்கு இனி வருகிற மருமகளும் தன்னைப் போலத்தான் தடித்தனமா யிருப்பாளாம்!

நல்ல தூக்கம் வருவதற்கு வீட்டில் மூட்டுப்பூச்சிகளையும் கொசுக்களையும் வளர்க்க வேண்டுமாம்!

தன் ஈனப்போக்குகளை நன்றாகத் தெரிந்துகொண்டார்களென்று தான் அறிந்தாலும், அறியாதது போல் காட்டவேண்டுமாம்!

மூக்காலணா தபாலுக்குச் செலவிடாதிருக்க ஒரு மனஸ்தாபத்தை யுண்டாக்கிக் கொண்டால் கடிதம் எழுதாதிருக்கலாமாம்!

பொடிபோட்டுச் சீந்தாத மூக்கு இருந்தும் பயனில்லையாம்!

'பஞ்சதந்திர'க் கதையைவிடப் பத்து நூறு தந்திரங்கள் தங்களுக்குத் தெரியுமென்று விபசாரப் பேய்கள் சொல்கிறார்களாம்!

கையை விரித்து ஏமாற்றுவதை மறுதடவைக்கு வைத்துக்கொண்டு, முதல் தடவையில் ஆஹா என்று இனிக்கப்பேசி அனுப்பவேண்டுமாம்!

தனம் தேடிப் பிள்ளைகட்கு வைக்காவிடில் கோர்ட்டுச் சண்டையே கிடையாதாம்!

ஒரு பெண்ணுக்கு மகிமை அவள் ஒரு மாமியாகும்போது தானாம்!

வீடு விளங்குவதற்கு உட்கார்ந்து தின்னுகிற நாலைந்து பிள்ளைகளைப் பெற்றால் போதுமாம்!

'எனக்குச் செலவிடுவதென்றால் தான் பணமில்லாமற் போகும்' என்று குத்திப் பேசுகிறவர்களுக்கு அப்படியே இல்லாமல்தானே போகுமாம்

இடித்துப் பிடித்துக் கடித்து முட்டிக்கொள்கிற ஸ்திரீ புருஷர்களுக்குத்தான் ஆயுசு அதிகமாக வளருமாம்

பிறரை மோசம் செய்து சம்பாதித்த வீட்டிலே மலடித்தேவிகளே தான் அதிகமாக நிறைவார்களாம்!

மருமகன் வந்துவிட்டால் பாவாடை கட்டக்கூடாதோவென்று ஒருவர் தன் மனைவியைக் கோபித்துக்கொண்டாராம்!

பெட்டைக்கோழிக்குப் புருஷனைத் தேடிவைக்க வேண்டியதில்லையாம்! எப்படியோ அது பல முட்டைகளிட்டுவிடுமாம்!

கும்பகோணத்தில் ஆடுகளைப் பலியிட்டுப் பெரிய யாகம் செய்யப்போகிறார்களாம்! ஆடுகளைக் கொல்வது கழுத்தை யறுத்தா?—அல்லது ஆட்டின் விதைகளைப் பிசைந்தா என்று விகட சித்தர் வினவுகிறார்!

11-வயதுள்ள மருமகளுக்கு சூடு போட்ட மாமிக்கு நாவிக் செஷன்ஸ் ஜட்ஜி 9 மாதம் கடுங்காவல் விதித்ததைக் கண்டு மற்ற ஊர் மாமிகள் "மாமி மதிப்பு போச்சே" என்று ரொம்ப கோபித்துக் கொண்டார்களாம்!

சட்ட சபைப் பிரவேசத்தில் தமக்கு நம்பிக்கை யில்லையென்று மகாத்மா சொல்லிவிட்டாலும் மற்றவர்கள் அதை விடமாட்டார்களாம்!

சும்மா சும்மா போகிறவர்களிருந்தால், சுகமாகத் தின்பதற்கு வருகிறவர்களு மிருப்பார்களாம்!

தங்கள் தங்கள் காரியத்தைப் பார்த்துக்கொண்டு போகிற சங்கதிக்குதான் "பொதுநலம்" என்று பேராம்!

பாச்சுவை நயம்.

[“மனோன்மணீய”த்திலிருந்து திரட்டியவை.]

1. “காலமென்பது கறங்குபோற் சுழன்று
மேலது கீழாய்க் கீழது மேலாய்
மாற்றிடுந் தோற்ற மென்பது மறந்தனை.”

2. “உனக்கென் கவலை? நினைக்குமுன் னோடலாம்.”

3. ....“நின் மனக்
களவெலாம் வெளியாக் கக்கிய பின்ன
ரேது நீ யொளிக்குதல்? இயம்பாய்.”

4. “பேய் கொண்டனையோ? பித்தேறினையோ?
நீ யென் நினைத்தனை?”

5. “இனியென் செய்வேன்? என்னினைப் பாரோ?”

6. “யார்பா லுரைப்பேன்? யார்போ யுரைப்பார்?”

7. “நெருப்பையுங் கரையா னரிக்குமோ நேர்ந்தே?”

8. “ஆவதாயி னறிவியா தொழிவனோ?”

9. ....“தாதையர்
மாற்றங் கேளா மக்கள் கூற்றுவ
ரெனு மொழி யெனக்கே யனுபவம்.”

10. “விடுவிடு நின் மொழி யெல்லாம் விகடம்.”

11. “என்னோ வறியேன் இந்நோய் விளைவு.”

12. “நகையே யாகும் நீ செயும் வகையே.“

13. “எல்லா மறியு மும்பாற்
சொல்ல வல்ல தொன் றிலை; சுகமே.”

14. “அருகுள தெட்டியே யாயினு முல்லைப்
படர் கொடி பரவும்.”

15. “எதுவோ பொல்லாங் கெண்ணினன்; திண்ணம்.”

16. “நீ கலங்கிய கலக்க மென் கண்ணுள தின்றும்.”

17. “நொந்தது புண்ணே யென்னுளம்.”

18. “நீண்டவும் வேண்டுமோ தீயனை?”

19. “அவாவிற் களவிலை அன்போ வறியார்
மணமு மவர்க்கொரு வாணிபம்! அந்தோ!
சீ! சீ! என்னித் தீயவர் செய்கை!”

தனது கபட குணங்களைப் பிறர் கண்டுகொண்டார்களென்று தெரிகிற போதும், தனது செயல்கள் பிறருக்குப் பிடிக்கவில்லையென்று உணருகிறபோதும் தாங்கள் அங்கு அதிகமாய் நெருங்கிச் சேர்வதினின்றும் மெதுவாக விலகிக்கொள்கிறார்கள். மற்றவர்களும் அவர்கள் விலகியதை ஒரு பொருட்டாக லக்ஷியம் செய்வதில்லை.

20. "நஞ்சினுங் கொடிய நெஞ்சினர். அவர் தாங்
கெஞ்சிடின் மிஞ்சுவர்; மிஞ்சிடிற் கெஞ்சுவர்."
21. "நன்றுதீ தென்றவ னென்றைபு நாடான்."
22. "புலி வேட்டைக்குப் பொருந்துந் தவிலடி
யெலி வேட்டைக்கு மிசையுமோ? இபம்பாய்."
23. "ஆழிபுடைசூ ழுலகம் யாவு நல மேவ!
அறத்துறை புகுந்துயிர்க ளன்பு வெள மூழ்க."
24. "எ! எ! கெடுவாய்! இது வல உன் னெறி."
25. "பன்னு ளிரவும் பகலு முழைத்தீர்
எந்நா ளாறுவீ ரிவ் வலுப் பிணிமேல்?"
26. "எல்லா மறியு மீசனே சான்றெனக்
கல்லா வில்லை.—"
27. "கைக் கெட்டியது தன் வாய்க் கெட்டுதற்குள்
வந்துறு மந்தமில் பிரதிபந்தங்களே."
28. "படபடத்திடு நின் பாழ் வாய் திறவாய்."
29. "உண்மைக் குறைவிடம், திண்மைக் கணிகலம்
சத்திய வித்து, பத்தியுன் மத்தன்"
30. "வருதுயர் சூழ்பிணி யாவும் தொலைய வாழ்க."

---

1. ஹரிஜனச் சார்பான வினுக்கள்:—குகன் குடிசையில் தங்கி, அவனை நண்பனுகக்கொண்டு கட்டித் தழுவியும், சபரியின் எச்சிற்பழத்தை அன்போடு உட்கொண்டும் நடத்திக்காட்டிய இராமபிரானின் ஆலயத்துள் சபரி, குகன் சந்ததியார் (ஹரிஜனன்) வந்தால் இராமன் ஓட்டம் எடுப்பாரா?

2. ஆலயத்துள் யானை, ஆடு, மாடு. எலி. மூஞ்சூறு. பூனை, வௌவால் முதலியன புகுவதுமல்லாமல் எக்காலமும் உள்ளேயே தங்கி மலமூத்திராதி அபசாரங்கள் செய்வதை சகித்துக்கொண்டு ஓட்டம் எடுக்காத சுவாமி ஆறறிவு படைத்த மனிதன் (ஹரிஜனன்) உட்புகுந்தால். ரத்னங்கி, முத்தங்கி திருவாபரணப் பெட்டியோடும், பெண்டு பிள்ளையோடும் சுவாமி ஓட்டம் எடுப்பாரோ?

3. அப்பர் ஸ்வாமிகளின் அடிபணிந்து பூசைகள் புரிந்து அமுது படைத்த அப்பூதி யடிகளைக் குறைகூற முடியுமா?

3. ஞானசம்பந்தர் பாடிய தலங்கள் தோறும் ஆலயத்துள் உடன் சென்ற யாழ்வாசித்த திருநீலகண்ட யாழ்பாணரின் ஆலயப்பிரவேசத்தை எந்த ஆகம சாஸ்திரமும் தடுத்ததா?

5. ஆதி சங்கரருக்கு ஞானகுரு ஆதிதிராவிடனே என்பதை மறுக்க முடியுமா?

6. ஆலயப்பிரவேச இயக்கத்தை உண்மையில் முதலாவதாக ஆரம்பித்தவர் இராமாநுஜாச்சாரியார் என்பது தெரியுமா? ஆகையால் மகாத்மா காந்தி புதிய கிளர்ச்சி ஒன்றும் செய்யவில்லை என்பதை இனியேனும் அறிய வேண்டாமா?

திருச்சி உண்மை சனுதன இளைஞர்கள்.

கோபம் கவனிக்க நேரம்?

சிலர் தங்களின் கோபத்தைப் பிறர் உணர வேண்டுமென்று நினைக்கிறார்கள். தாங்கள் கோபித்துக்கொண்டிருப்பது அவர்களுக்குத் தெரியவேண்டுமென்று அதற்காக எவ்வளவு அலக்ஷியங்களைக் காண்பித்துக்கொள்ள வேண்டுமோ அவ்வளவும் செய்கிறார்கள். அவர்களின் அருகேயிருந்து அன்புடன் பேசிக் குலாவியதை விட்டு விட்டு வேறிடத்திலிருந்து கொள்கிறார்கள். தாங்கள் கோபித்துக்கொண்ட இடத்துக்கு எந்த வகையிலும் வராதிருக்கவும், எட்டிப் பாராமற் தூர விலகியபடி நடக்கவும் முயலுகிறார்கள். எதைக் கேட்டாலும் இல்லையென்று சொல்லிவிடுகிறார்கள். ஒன்றை வாங்கி வருமாறு பணம் கொடுத்தாலும் வாங்கி வராமல். ஓ! வாங்கிவர மறந்துவிட்டேன் என்று சொல்லிப் பணத்தைத் திருப்பிக் கொடுத்துவிடுகிறார்கள். உதவி செய்வதற்கு வருவோரைக்கூட வராதபடி சொல்லித் தடுத்துவிடுகிறார்கள் இவ்விதமெல்லாம் தங்களின் கோபத்தன்மையை வெளியிட்டுக் கொள்கிறார்கள்.

ஃ

இவர்களின் சங்கதி இவ்வாறாக, இனி இவர்களது கோபத்துக்கு ஆளானவர்களுக்கோ இவர்களின் கோபத்தைக் கவனிக்க நேரமே இருப்பதில்லை இவர்களின் கோபத்தைப் பற்றிச் சிந்திக்கவும் சமயப்படுவதில்லை. அவர்களுக்கு அவர்களின் வேலைகளே சரியாயிருக்கின்றன. அந்த வேலைகளைச் சரிவரசெய்து முடிக்கவேபொழுதுகிடைப்பதில்லை. இரவில் வெகுநேரமட்டும் விழித்திருந்து தங்களின் வேலைகளைச் செய்யும்படி யிருக்கிறது. இதன் மத்தியில் சற்று சிரமசாந்தி செய்துகொள்ளுகிற நேரத்தில் இன்னார் கோபம் கொண்டிருப்பதான நினைவு வந்து அதைப்பற்றி யோசிக்கப் போகும்போது, வேறொருபுதியவேலை வரவே அதில் கவனமாயிருந்துவிடுகிறார்கள். கோபக்காரர்களின் மூலமாய் ஆகவேண்டிய காரியங்களுக்குக் கடவுள் அந்த சமயத்தில் கருணையோடும் உதவிக்கு வேறு மனுஷ்யர்களைக் காட்டிவிடுவதால். அவர்களைக்கொண்டு தங்களுக்கு ஆகவேண்டியவற்றை நடத்திக்கொள்கிறார்கள். ஒரு கருவி கிடைக்காவிடில் மற்றொரு கருவியைத் துணைக்குக் கொள்கிறார்கள். எப்படியோ பொழுது போய்விடுகிறது. கோபக்காரர்களோடு சந்தோஷமாய்ப் பேசி இன்புறவேண்டிய காலத்தைக் கடவுளோடும் இயற்கை அன்னையோடும் கலா ஞானத்தோடும், ஏகாந்த இன்ப வெள்ளத்தோடும் பேசிக்கொண்டு. எப்போதுமுள்ள ஆநந்தத்திற்கு எவ்விதக் குறைவுமில்லாமலே ஸந்தோஷ சித்தர்களாயிருந்துவிடுகிறார்கள். கோபக்காரர்களின் கோபத்துக்கு ஒரு மதிப்பு வைத்துக் கவனிக்க நேரமில்லாமலே ஒவ்வொரு தினத்தின்பொழுதும் வெகு வேகமாய்ப் போய்விடுகிறது. இவ்வித நிலையில்—கோபித்துக்கொண்டோர் தங்களின் கோபத்துக்கு மதிப்பில்லாமற் போனதைக் கருதி ஏமாறும்படியாகிறது. ஐயோ! பாவம்!! வெளியூர் மனிதனை எவர் கைவிடினும் கடவுள் கைவிடுவதில்லையன்றோ?

வில் வளைத்தல்.

ஆதியில் அம்பும் வில்லும் இப்படிப் பட்டதெனக் கண்டு பிடித்தவன் ஒருவகைக் காட்டுமனிதனே யாயினும், அவன் இன்னானெனப் பேரூர் தெரியவருமானால், அவனுடைய பேரும் புகழும் என்றும் அழியாதிருக்கும்படி அவனுடைய பதுமையொன்று அவசியம் பிரதிஷ்டை செய்விக்க வேண்டியதாகும். ஏனெனில், உலகத்தில் நாகரீகம் விசேஷமாய் விருத்தியாவதற்கு ஏதுவான ஒரு பிரகிருதி தத்துவத்தை வெளியிட்டு அவன் மானிடர்களுக்கு மகோபகாரம் செய்தவனாவன்.

ஃ

சண்டை செய்கையிலும், சமாதானமா யிருக்கையிலும் மன்னுயிர்களுக்கு மிகவும் உபயோகமாகும்படி பிரகிருதி தத்துவமொன்று வரவர விருத்தியாகி வந்த வரலாற்றைக் காட்சிப் பொருட்சாலையில் குறித்து வைப்பது மிக்க உபயோகமா யிருக்கும். ஆதியில் அற்பமாயிருந்த அம்பும் வில்லும் வரவர விருத்தியடைந்து, மிகுந்த வலிவுள்ளதான வக்கிர தனுசாக யந்திரங்களில் செய்யப்பட்டு. மனிதர்களோடும் மிருகங்களோடும் போராடுவதற்கு உயர்ந்த கருவியாயிற்று அந்தக் கருவி பின்னும் சீர்திருத்தம்பெற்று துப்பாக்கி முறுக்குக்குழல் துப்பாக்கி முதலாக மிகவும் பெரிதான 100-டன் எடையுள்ள பீரங்கிவரையில் உள்ள பல யுத்தக் கருவிகளும் மற்றும் செய்வதற்கு ஏதுவாயிற்று.

ஃ

இந்த வரிசையில் முதற் கருவியான வில்லுக்கும், கடைசிக் கருவியான பீரங்கிக்கும் யாதொரு ஒற்றுமையும் இல்லைபோல மேற்பார்வைக்குத் தோற்றுமாயினும் ஊன்றிப் பார்த்தால் இந்தக் கடைசிக் கருவி, முதற்கருவியின் மாறுபாடேயெனத் தெளிவாய்த் தோன்றும்.

ஃ

வில் வளைப்பதற்குரிய தத்துவமானது யுத்தரங்கமொன்றுக்கு மாத்திரமே உபயோகப்படுவதாயிருக்குமாயின், ஆதியில் அந்தத் தத்துவத்தைக் கண்டு பிடித்தவனைத் தெய்வமாகக் கொண்டாடும்படி அவனுக்கு அத்தனை பெருமை வராது. அப்படியிராமல் அந்தத் தத்துவம் வெவ்வேறு கருவிகள் செய்வதற்கும் ஏதுவாகி உலகத்துக்கு மிகவும் உபயோகமாகும்படி யாயிற்று. மேற்பார்வையாகப் பார்க்கும்போது அம்பு பாய்வது, சங்கீத வாத்தியங்களில் நாதம் உண்டாவது வாயுமண்டலத்தில் ஒளி பரவுவது நீராவி யந்திரம் ஓடுவது இவை முதலியவற்றிற்கெல்லாம் சம்பந்தம் யாதொன்றுமில்லையெனத் தோன்றுமாயினும் விசாரிக்குமளவில் இவை யாவற்றிற்கும் மூலகாரணம்

ஹிந்துக்களாகிய நாம் வசிப்பது பூமாதேவி; நம் மேலே உள்ளது ஆகாசவாணி; நாம் பருகும்நீர் கங்காதேவி. எல்லாம் ஸ்திரீமயம் என்பதை மறந்துவிடக்கூடாது. பெண்மையைக் கௌரவப் படுத்தாதவனுக்கு நல்ல வாழ்வு இல்லை

ஒன்றே யெனவும், அது அந்த வில்லானது வளைந்து பிறகு தனக்குத் தானே நிமிர்ந்து கொள்ளுகிற சூக்ஷ்மமாகிய ஒரே பிரகிருதி தத்துவத்தாலேயே இவையாவும் உண்டாகின்றன வெனவும் தெளிவாகும். இவ்விதம் வில் வளைந்து தானுகவே நிமிர்கிற தத்துவத்திற்கு ஸ்திதஸ்தாபக துணம் என்று பெயர். இதை இன்னும் சற்று விளக்கிச் சொல்லலாம்.

ஃ

முதலில் வில்லின்செயலைப்பற்றி விசாரிப்போம். நாணைப் பிடித்து இழுத்தால் வில் வளைகின்றது. அப்படி யிழுத்த நாணை மறுபடிவிட்டு விட்டால், அந்த வில் நிமிர்ந்திருப்பதான தனது இயற்கை நிலையைப் பெறும்படி அதே நிமிஷம் வெகு வலிவாக நிமிர்கின்றது. சாதாரணமாய்ப் பார்ப்பவர்கட்கு இதில் அதிகம் தோன்றுதாயினும், இவ்விதம் வளைந்து பிறகு வெகு வலிவாகத் தனது இயற்கை நிலையையடைய நிமிர்கிறதான சக்தியே உலகுக்குப் பெரும் உபகாரமான முன்னேற்றக் குறிப்பாய் ஏற்பட்டுவிட்டது. இந்தவிதமான நிமிர்கிற சக்திக்கு ஸ்திதஸ்தாபக துணம் (Elasticity) என்று பெயர். ஒரு பொருளின் இயற்கையான நிலையை நாம் நமது வலிவைக்கொண்டு மாற்றுவோமானுல், மறுபடி அந்தப் பொருள் தன் இயற்கையான நிலையையடையும்படி செய்யத்தக்க குணத்திற்கே ஸ்திதஸ்தாபக துணம் என்று சொல்லப்படுகிறது இந்த குணத்தை ஆதியில் வில் வளைப்பிலிருந்து தெரிந்து கொண்டு, பெரிய யந்திரங்கள் முதல் சிறிய கடியார யந்திரங்கள் வரையில், அக்குணத்தை, அதாவது வளைந்து கொடுத்து நிமிரப் பார்த்தலான தன்மையை அமைத்து அற்புதமான சூக்ஷ்ம சக்தியுள்ளதாகும்படி செய்தனர். இந்த அறிவு வில் வளைப்பி லிருந்தும் உண்டாயிற்றெனில், அது ஆச்சரியமன்றோ?

காணுமற்போன பொருள்.

காணுமற்போன ஒன்றை எடுத்தவர்கள் இன்னுரெனத் தெரிந்திருந்தும், அவர்கள் தனக்கு மிகவும் வேண்டியவர்களானதால், அவர்களைக் கேளாமல் ஜாடையாயிருந்து விடும்படி நேருகிறது. பிறகு மற்றொரு சமயம் ஒரு சாமான் காணுமற்போய்விட, அதை வீட்டு வேலைக்காரியே எடுத்தாளென்று ஒரு சந்தேகமுண்டாகிக்கொள்ள, அவள் அன்னிய மனுஷியானதால் பின்வாங்காமல் நீ தான் எடுத்தாயென்று சண்டையிடத் தொடங்குகிறுர்கள். இதின்மேலே முன்பு திருடிய அந்த வேண்டிய பேர்வழிகளும் இந்த வேலைக்காரியை எதிர்த்து இவர்களுடனே சேர்ந்துகொண்டு தாங்கள் மகா யோக்கியர்கள்போலக் காண்பித்து, அந்த வேலைக்காரியின்மேல் அதிகாரம் செய்ய ஆரம்பித்து விடுகிறுர்கள். பணக்காரத்திருடி பந்தியிலே, அதில்லாத திருடி சந்தியிலே போலும்!

சுக்கிரனின் விசேஷங்கள்.

வானத்திலே நாம் காணத்தக்க அநேகம் கிரகங்களும் அநேகம் நக்ஷத்திரங்களும் இருந்தாலும், அவற்றுள் நமது கண்ணுக்கு அதிகப் பிரகாசமாய்த் தோன்றுவதும், இந்து ஜோதிஷர்களால் ஜாதகங்களுக்கு மிகச் சுப கிரகமென்று கொண்டாடப்பட்டதுமான நக்ஷத்திரம் சுக்கிரன் ஒன்றுதான். முற்காலத்திலே சில தேசத்தார்க்கு அந்த நக்ஷத்திரத்தின் சொரூபம் இப்படிப் பட்டதென்றே தெரியாமலிருந்தது. அது சில காலத்தில் சூரியனுக்கு முன்னாகக் காலையிலும், சில காலத்தில் சூரியனுக்குப் பின்னாக மாலையிலும் தோன்றுகிறதென்பதும் தெரியாமல், காலையில் தோன்றுவது வேறு; மாலையில் தோன்றுவது வேறென்று எண்ணி, அதற்கேற்க வெவ்வேறு பெயர்கூட இட்டு வைத்திருந்தார்கள். பிறகே உண்மையுணர்ந்து காலை மாலை நக்ஷத்திரம் எனப் பெயர் வழங்கலாயினர்.

ஃ

சுக்கிரன் பூமிக்கும் சூரியனுக்கும் மத்தியில் சஞ்சரிக்கின்ற கிரகமாகும். சந்திரனைப்போல் அது தேய் பிறை, வளர் பிறை உள்ளதா என்று கேள்வியும் தோன்றியது. அந்தக் கேள்வி சரியே யென்றும், சந்திரனைப் போலவே சுக்கிரனுக்கும் சூரியனைக் கிட்டிப் போகப் போகத் தேய்பிறையும், தூர ஒதுங்க ஒதுங்க வளர் பிறையும் உண்டென்றும், அது இப்போது காணப்படா விட்டாலும் காலக்கிரமத்திலே காணலாகு மென்றும் கலிலியோ கண்டறிந்தார். ஆயினும், அப்போது இவ்விஷயத்தை முற்றும் தெளிவாய்க் கண்டறிந்த பிறகு வெளிபிடுகிறதா, உடனே வெளிபிடுகிறதா என்கிற சந்தேகத்தால் அவர் மனம் அலை பாய்ந்து கொண்டிருந்தது. உடனே வெளியிட்டுப் பிறகு அது பிசகாய் விட்டால் பரிகாசமாகும்; நிச்சயமாய்த் தெரியுமளவும் காத்திருந்தால், அதற்கிடையே இவ்விஷயத்தை இன்னும் யாராவது கண்டு வெளிப்படுத்தி விட்டால், இப்பெருமை அவர்களுடைய தாகிவிடுமே என்று இப்படியே அவர் கவலைப்பட்டுக் கொண்டிருந்தார்.

ஃ

ஆயினும், கலிலியோ அக்காலத்தில் வழங்கி வந்த ஒரு முறையைப் பின்பற்றி கண்ட பத்திரிகை மாதிரி எழுதி வெளிபிட்டார். (கண்ட பத்திரிகையென்றால், ஒரு பாட்டு, அல்லது ஒரு வாக்கியத்தின் அக்ஷரங்களைத் தனித்தனியே ஒழுங்கில்லாமல் எதிரிக்குச் சொல்லிக் கடைசியில் அதைச் சரியாகச் சொல்லும்படி செய்வதாகும்.) அவ்விதமாகவே, ஒரு வாக்கியத்திலுள்ள அக்ஷரங்களையெல்லாம் தனித்தனி

ஒரு சமயத்தில் பிறரை விருப்பமாய் வரவேற்பதுபோல் பாசாங்குசெய்வது; மற்றொருசமயம் பார்த்தும் பாராததுபோல் இருந்துவிடுவது. இது சுயநலமே உருவாய்க்கொண்டவர்களின் செய்கை. இவ்வளவு சமர்த்துக்குக் கடைசியில் ஏமாறிப்போவதே லாபம்.

எழுதி ஒழுங்கில்லால் கும்பலாகச் சேர்த்து விட்டு, எதிரியைக்கொண்டு அதை ஒழுங்கு படுத்தச் சொல்லும் வழக்கம் அக்காலத்திலிருந்தது. அதே விதமாகவே கலிலியோ தான் கண்டறிந்த விஷயத்தைச் சுருக்கமாக எழுதி, அதிலுள்ள எழுத்துகளை ஒழுங்கு மாற்றி விளம்பரம் செய்தார். அவ்வெழுத்து மாற்றுச் சொற்களை விடுவித்ததில், சுக்கிரன் சந்திரனைப் போலவே தேய்பிறை வளர் பிறை உள்ளதாய் இருக்கிறதெனவும், இது வரையில் பல பேர் முயன்றும் கண்டு பிடிக்கக் கூடாமலிருந்த கடின விஷயத்தை நான் கண்டு பிடித்தேனெனவும், இரண்டு விதமாகப் பொருள் படுகின்றது.

ஃ

எது எப்படியிருந்தாலும் இந்த விஷயம் முதலில் கலிலியோவினால் கண்டு பிடிக்கப்பட்ட தென்பதற்குச் சந்தேகம் இல்லை. பிறகு திருந்திய தூர திருஷ்டிக் கண்ணாடிகளைக் கொண்டு சுக்கிர மண்டலமானது களங்கங்களோடு கூடிய ஒரு கோளமென்றும், இப்பூமியைப் போலவே, கொஞ்சங் குறைய இருபத்து நான்கு மணி நேரத்தில் தன்னைத்தானே சுற்றுகிற தெனவும் கண்டு பிடிக்கப் பட்டது. ஆயினும், இவையெல்லாம் பூர்வமே கண்டறிந்த விஷயம். இக்காலத்து மிகத் திருந்திய கருவிகளால் அவற்றைப் பார்க்கிலும் அதிகமாய் ஒன்றும் கண்டு பிடிக்கப் படவில்லை.

ஃ

சுக்கிர மண்டலத்தில் மலைகளும் இருக்கின்றனவென்றும், நுட்பமாய்ப் பார்த்தால் அம்மலைகளின் உயரத்தையும் கண்டு பிடிக்கலாமென்றும் இரண்டொருவர் கூறினர். அவற்றின் உயரம் 25 மைல்களுக்கு மேற்பட்டிருக்கிறதென்று ஒருவர் சொல்லுகிறார். யோசிக்கையில் முக்கியமாய் இவ்விஷயங்களைக் கண்டு பிடித்தவர்கள் இத்தாலியா தேசத்துச் சோதிட சாஸ்திரிகளே. சென்ற நூற்றாண்டில் சுக்கிரனுக்கும் ஓர் உபக் கிரகம் உண்டென்று சங்கிக்கலாயிற்று. ஆயினும் அது இன்னும் செம்மையாய்க் கண்டறியப் படவில்லை. சுக்கிரமண்டலத்தைச் சுற்றி வாயு மண்டலம் உண்டு. சுக்கிரன் பிரகாசத்தில் செவ்வாய், பிரகஸ்பதி, சனி இவைகளுக்கெல்லாம் தாழ்ந்தது தான். சுக்கிரன் இப்பூமிக்குச் சமமான தென்று சொல்லலாம்.

“நீ கோபமு நா பாக்யமு” என்பது தெலுங்குப் பழமொழி. உனது கோபம் எனது பாக்கியம் என்பது பொருள். ஒருவருடைய கோபமானது பிரிந்துபோக நினைப்பவர்களுக்கு ஒரு பாக்கியம்போல் தோற்றுகிறதாம். ஒருவர் கோபம் கொள்ளும்போது சிலருக்குக் கெடுதியும், சிலருக்கு நன்மையும் உண்டாவதில். நன்மை கண்டவர்கட்கு அந்தக் கோபம் ஒரு பாக்கியமாய் முடிகிறது. ஒருவர்மீதுள்ள கோபத்தில் தன் சொத்துகளை மற்றவர்களுக்கு எழுதி வைத்துவிடப் புத்திபோகிறது. அவ்விதம் எதிர்பாராது சொத்துக்களை யடைவோருக்கு அந்தக் கோபம் ஒரு லாபமே. ஒருவரது மூடத்தனமான கோபத்தை நாம் சமாதானப்படுத்துகையில், நமது மானத்திற்கும் ஒரு மதிப்பு வைத்துக்கொள்ள வேண்டும். அவன் இன்னும் மீறினால், நாம் உடனே தூர விலகிவிட வேண்டும்.

“அமிர்த குண போதினி”யை யாம் பிரதிமாதமும் பெறுவது சிறியேம் பெற்ற பெரும்பேறு.

இல்வாழ்வில் மகளிரின் பணிவு.

(104-ம் பக்கத் தொடர்ச்சி.)

எப்பொழுதும் முகத்தை ஸந்தோஷமாகவும், லக்ஷ்மீகரமாகவும், நெற்றியில் ஸதா திலகத்துடனும், குளித்து முழுகி சுத்தமான வஸ்திரத்தோடும் அழகாக நின்று உங்களின் பர்த்தாவுக்கு எதிரில் தோன்றி, அவர் மனம் பரவசப்படும்படியான காட்சியைக் காட்டுவீர்களானால், அதுவே இவ்வுலகத்து நகைகள் யாவற்றிலும் மஹா பெரிய நகையாகும். இந்தக்குளிர்ந்த குணப் புன்னகையொளிர் வதன நகையின்றி மற்ற நகைகளிருந்து பயனில்லை. இத்துடன் இன்னொரு சங்கதி. ஊரிலுள்ள புத்தியில்லா ஸ்திரீகள், "உங்கள் புருஷர்கள் நூற்றுக் கணக்காய்ச் சம்பாதிக்கிறார்களே, உங்களுக்கு ஒரு நகைகூட இல்லையே, ஸ்வல்ப சம்பளமுள்ளவன் மனைவிகூட அநேக நகைகள் செய்து அணிந்து கொண்டிருக்கிறாளே"—என்று சொல்லி, "நீங்கள் உங்களுடைய கணவர்களிடத்தில் சண்டை யிட்டாலல்லவோ செய்து கொடுப்பார்கள்"—என்று தூண்டிவிட்டு நிர்ப்பந்தப் படுத்துவார்கள். அப்பொழுது நீங்கள் அறிவுள்ளவர்களா யிருந்தால், உங்களால் இயன்ற மட்டும் அவர்களுக்கு சமாதானம் சொல்லி விட்டு, உங்களுடைய நிலைமையை நன்றாய் அறிந்து சமயத்துக்குத் தக்கபடி நடக்கத்தெரிந்து கொள்வீர்கள். குடும்ப சமாதானமே பெரிய நகை. இரவல் நகை யணிவதும், இரவலுக்கு நகை தருவதும் நல்ல வழக்கங்களாகாது. அதில் உறுதியும் கண்டிதமும் வேண்டும்.

ஃ

புருஷர்கள் வெளியே போய் வேலை செய்துவிட்டு வீட்டுக்கு வந்தவுடன், உங்களின் முகத்தை வீட்டுக் கஷ்டங்களால் கடுகடுத்துக் கொண்டு எதிர் நிற்பது தகுதியன்று. வருவதற்குச் சற்று முன்பாகவே அவர்களுக்கு இஷ்டமுள்ள உணவுகளை நல்ல உருசியோடும் செய்து வைத்து, வந்தவுடன் குளிர்ந்த முகத்தோடும் அன்பும் ஆதரவோடும் கைகால் சுத்தி செய்ய சுத்தமுள்ள ஜலத்தைக் கொடுத்து, பிறகு சித்தப்படுத்தி யிருக்கிற பலஹாரங்களை உண்ணச் செய்து, அவர்கள் இளைப்பாறியபின் வீட்டு விஷயங்கள் எது இருந்தாலும் சரி, மற்ற எதுவானாலும் சரி, சொல்வது உசிதமாகும். இவ்வுபசாரங்களுக்கும் இணங்காத துர்க்குண புருஷனாயிருந்தால், அவன் மனதை யறிந்து நடப்பது கடமை. சில புருஷர்கள் படித்திருந்தும் விவேக சூன்னியராய்; சொல்வார் பேச்சை யெல்லாம் காது கொடுத்துக் கேட்டுத் தங்களின் அருமை மனைவிகளைக் கொடூரமாய் நடத்துவதோடும், சிறு குற்றங்களுக்கெல்லாம் அடிப்பதும் திட்டுவதுமாவார்கள். அவ்வித சமயங்களில்

ஒரு பெண் ஒருவனைக் காதலித்துத் தன் மனத்தை அவனுக்கு ஸமர்பித்துவிட்ட போதிலும், விவாகத்தின் மூலமாக தேகத்தையும் கொடுக்கும் விஷயம் அநேகமாய்த் தடுக்கப்பட்டே போகிறது.

ஸகிக்க மாட்டாமல் பொறுமையின்றி கணவர்களை நிஷ்டூரப்படுத்தி வீட்டுச் சங்கதி நாலு வீடுகட்கு எட்டும்படி செய்யாமலும் பர்த்தாவின் மானம் மதிப்பைக் கெடுக்காமலும், அவர்களை எதிர்த்துச் சண்டையால் ஜெயிக்க முடியாமல் பொறுமையால் வெல்வது தான் நற்படைமை யாகும். உண்மை யாகவே உங்களிடத்தில் தப்பில்லாமல் இருக்க, அவர்கள் சினம் கொண்டால் அந்த சமயத்தில் அடக்கமாய்ச் சும்மா இருந்துவிட்டு கோபம் சாந்தமான பொழுது உங்களின் நிஜமான கஷ்டத்தை நயத்தோடும் தெரியப்படுத்திக் கொள்ளவேண்டும். "நம்ம விதி இப்படி யிருக்கிறது; இவர்களிடத்தில் சொல்வானேன்?" என்று இருப்பது சில சமயங்கட்கு நல்லதானாலும், எப்போதும் அது நலத்தைச் செய்யாது; உங்கள் கஷ்டமும் ஒரு பொழுதும் விடியாது. ஆனால், சொல்லத்தக்குந்த சமயங்கண்டு தெரிவித்துக் கொள்வதே விவேகமாகும்.

ஃ

சில அறிவிலிகள் மருந்து மாயங்கள் செய்து கொடுத்துக் கணவனை வசப்படுத்தத் துர்வழியில் பிரயத்தனப் படுவோர்கள். அத்தகைய கொடும் புலிகள் விஷம் போடவும் அஞ்சார்கள். இவ்வழியில் நீங்கள் செல்லாமல் உங்களின் பர்த்தாக்கள் போன வழியெல்லாம் நீங்களும் மனங் கோணாது நடந்தால் உங்களுக்கு அவர்கள் நிச்சயமாய் வசமாவார்கள். நீங்கள் அடங்கி நடந்தும் அவர்கள் வயிரம் பற்றிய நெஞ்சராயிருப்பாரானால் நீங்கள் செய்யக்கூடியது ஒன்றுமில்லை. அவர்கள் துஷ்டர்கள் என்று அறிந்தாலும், நீங்கள் சத்தியத்தைக் கைவிடாமல் பதிபாதசேவகிகளாய் நடக்கவேண்டும். இவ்விதம் நடப்பது பரிசுத்தமான கடமைகளுள் ஒன்றேயன்றி ஒருபோதும் அடிமைத்தனமாகாது சோதனைக்குள்ளான இடத்தில்தான் உங்களுக்கு உயர்வு கிடைக்கும். உயர்வுக்குப் பொறுமையும் சகிப்பும் துணை. இல்வாழ்க்கையானது சத்தியம், சந்தோஷம், சுகம், கீர்த்தி இவைகளோடு சேர்ந்திருக்க வேண்டுமென்ற கருத்துண்டானால், வீட்டிற்கு "எஜமானன்"-"எஜமானி" என்னப்பட்ட இருவரும் மனம் ஒத்திருக்கவேண்டும். இல்லாவிடின் இருபாலாருக்கும் மேன்மையான இல்வாழ்க்கைச் சுகம் கிடைக்காது போய்விடும்.

ஃ

நீங்கள் எத்தனை பணமுள்ளவர்களானாலும் வீட்டு வேலைகளுக்குப் பின்வாங்கக்கூடாது. ஸ்திரீகள் நேரில் பார்க்காத சமுசாரம் சீர்கெட்டுப் போவதில் சந்தேகம் என்ன இருக்கிறது? தாய்வீடு தனமுள்ள தாயும், கணவன் வீடு எளியதாயும் இருந்தால், புருஷனையும் அவன் பந்துக்களையும் லக்ஷியம் செய்யாத நாரிகளுமுண்டு. அந்தப் பிறவிச் செல்வியானவள் மாமி வீட்டில், "எனக்கு வேலை செய்யத் தெரியாது; செய்து வழக்கமில்லை" என்று கௌரவமாய்ப் பேசுவதுமுண்டு. இந்த வீண் டம்பம் குடித்தனத்தை அழிக்குமேயன்றிப் பெருமைப்படுத்தாது. தங்க

மணி பன்னிரண்டாய் விட்டதே! இன்னுமா எழுதியபடி யிருக்கிறீர்கள்; நான் பாக்கியை எழுதிவிடுகிறேன்; எழுதவேண்டியதற்கு விஷயங்களைச் சொல்லிவிட்டு நீங்கள் படுத்துக்கொள்ளச் செல்லுங்கள்" என்றாள். மனைவி கணவனும் அவ்விதமே செய்து ஸயனிக்கச் சென்றான். இது படித்த மனைவியைப் பெற்ற அதிர்ஷ்டம் போலும்!

ளால் இயன்ற மட்டும் தாங்களே வேலைகளைச் செய்வதுதான் உத்தமம். வேலை செய்வதிலும் ஒழுங்கு இருக்கவேண்டும். சாமான்களை இடம் விட்டு இடம் மாற்றுவதும், வேறிடத்தில் வைத்து மறந்து பிறகு அதைத் தேடுவதும், கண்ட இடமெல்லாம் பரப்புவதும் சிந்துவதும், உப்பு இருப்பதில் பருப்புப் போடுவதும், பருப்பு இருப்பதில் புளி போடுவதுமான ஒழுங்கீனங்களைச் செய்து தடுமாறுவது வாழ்க்கையையே தடுமாற வைக்கும் ஒவ்வொரு வேலையையும் தகுந்த காலத்தில் செய்து முடிப்பது அவசியமாகும். அப்படிச் செய்யாவிடின், ஒருநாளில் எத்தனை வேலை செய்ய வேண்டுமோ அத்தனையும் அன்றைக்கே செய்து முடியாமல் மறுநாளைக்குப் பாக்கி விழுந்து, மறுநாள் வேலையோடு இதுவும் சேர்ந்து, கடைசியில் எதையுமே செய்ய முடியாமல் தேகத்திற்கு இரட்டிப்பு கஷ்டத்தை விளைவிப்பதோடு காரியமும் சீரழிந்து கெட்டுப்போகும். அன்றியும், சில மணி காலம் படிப்புக்கென்றும், சில மணிநேரம் ஸந்தோஷ வார்த்தைகள் சிநேகிதிகளோடு, பேச வென்றும் ஏற்படுத்திக் கொண்டு, அதன்படி நடப்பது அதிக நன்மையைத் தருவதாகும்.

(மற்றதில் முடிவு.)


தன் சக்தி தனக்குத் தெரிவதில்லை.

நம்முடைய சொந்த சக்தி நமக்கு எளிதில் தெரிவதில்லை. நாம் வலிமையற்றவர்கள் என்று எண்ணி வருந்துகிறோம். வருந்தாவிடினும் வாளாவிருக்கின்றோம். ஒவ்வொருவனுக்கும் ஒரு தூண்டுகோல் வேண்டியிருக்கிறது. உள்நோக்கிப் பார்க்கும் அறிவை நாம் இழந்துவிடுகிறபோது, வெளியிலே நமக்குத் தூண்டுதல் செய்வோர் வேண்டும். அப்பொழுதுதான் புதிய ஊக்கம் நம்மிடை தோன்றும். அடிக்கு அடி ஒவ்வொன்றையும் சரிதான் என்று பிறர் சொன்னாலொழிய நாம் முன்பு நடப்பதில்லை; நடக்கவும் கூடுவதில்லை. பிறன் நம்முடைய தகுதியை ஏற்றுக்கொண்டு போற்றினாலொழிய நம்முடைய சக்தியை நாம் கண்டுகொள்வதில்லை. ஹனுமான்கூட இவ்வித அவஸ்தைக்கு உள்ளானாராம். கடல் தாண்டமுடியாது என்று கரையிலே நின்று வருந்தினாராம். வயது சென்ற ஜாம்பவான் ஹனுமாரைத் தேற்றி, "உமக்கு முடியாதது ஒன்று உண்டா? இந்தக் கடல் எம்மட்டு? நீர் எளிதில் தாண்டிவிடலாம்" என்றாராம். ஜாம்பவான் உண்மை உரைப்பவர். ஆனதால், ஹனுமான் அவரை நம்பி, அவ்விதம் கடல்தாண்டி ஹாவென்று அக்கரை சேர்ந்தார். தூண்டுதலுக்கே நண்பரையும் உறவினரையும் தேடுவது. அவர்களோ அந்த சமயம் எதிர்படுவதில்லை!


மேல் நாட்டுக் காதல்.

2. டியூப் ரெயில்வே மர்மம்.

[ஆசிரியர் கே. வி. எஸ். வாஸ்.]



லூசி ஜோன் பேரன்பு வாய்ந்த பெண்ணரசி. காண்போர் மனத்தை யெல்லாம் கவரவல்ல மனோன்மணியாய் விளங்கினாள். வயது இருபத்தொன்றுக்கு மேல் இராது. தன் தந்தை தாமஸ் ஜோனுடன் லண்டனில் வடபாகத்திலுள்ள க்வீன் மேரீஸ் தெருவில் வசித்து வந்தாள். அவள்மீது அநேக வாலிபர்கள் கண்வைத்து நின்றனர். பிரதிதினமும் அவளது அறையில் அந்த வாலிபர்களின் ஸன்மானங்களும் அத்துடன் சுற்றியிருக்கும் காதற் கடிதங்களும் பல விழுந்து கிடக்கும். மோகப் பித்தேறிய வாலிபர்கள் நள்ளிருளில் ஜன்னலின்வழியாக அவற்றைப் போட்டுவிட்டுச் செல்வர். அவளுக்கு வரும் காதற் கடிதங்களில் இரண்டை மட்டும் மாதிரிக்காக இங்கு குறிப்பிடுகிறோம்.



ஃ

அன்புள்ள காதலி,

நீ என்னை நேற்றுப் பார்த்தபார்வையினின்றும் என்னை; நீ உண்மையில் காதலிக்கின்றாயென்றே எண்ணுகிறேன். உன் பொருட்டு என் ஆவியையும் அர்ப்பணம் செய்யச் சித்தமாயிருக்கிறேன். சீக்கிரம் நாம் இருவரும் அன்புள்ள காதல் வாழ்க்கையைத் தொடங்குவோமாக. நாளை காலையில் நகரப் பூங்காவில் 51-எண்ணுள்ள பெஞ்சியில் நான் அமர்ந்திருப்பேன். தவறாது சந்தித்து இன்பமளிப்பாய் எனக் கருதுகிறேன். இத்துடன் ஓர் தைல பாட்டில் சன்மானமாக அனுப்பியுள்ளேன்.

உன் அடிமை,
ஜே. மாதேய்.

பிறர் மனை தழுவும் மனுஷநாய்களெத்தனை? அதில் வரும் கலகம் கொலை பொல்லாப்புகளெத்தனை?

II

காதற் கிளியே!

நேற்று எழுதிய கடிதத்தை நீ பார்த்தாயோ பார்க்கவில்லையோ? பார்க்கவில்லை யென்றே மறுபடியும் இக்கடிதம் இன்று எழுதலானேன். இன்றேனும் பாலத்தடியில் என்னைச் சந்திக்க மறக்கமாட்டாய் என்றெண்ணுகிறேன். இத்துடன் அனுப்பியுள்ள அமெரிக்கன் ஸோப்புப் பெட்டியை அங்கீகரிக்கவும்.

உன்னையே கருதி வாடும் காதலன்,
டி. மேகன்ஸி.

ஃ

லூசிஜோனின் அறையில் அவளைத் தவிர வேறு எவரும் உட்பிரவேசியாராதலின், இக்கடிதங்களும் ஸன்மானங்களுமே வெளிக்குத் தெரிய இடமில்லை. லூசி நித்திரையிலிருக்கும்போதுகூடக் கடிதங்கள் வந்துவிழும். பிரதிதினமும், காலையில் லூசி ஜோன் அக்கடிதங்களையும் ஸன்மானங்களையும் ஒவ்வொன்ருய் எடுத்துப் பார்த்துத் தனது ரூபலாவண்யத்தை மேன்மையாக நினைத்துக்கொண்டு பூரித்து ஆநந்தம் பொங்குவாள். ஒரு நாள் லூசி ஜோன் உத்ஸாகத்தோடு இவ்வாருன ஆபாஸக் கடிதங்கள் பலவற்றைப் படித்து வருகையில், அவைகளுள் பளபளப்பான சிவப்பு உறையில் ஓர் கடிதத்தைக் கண்டு வியப்புடன் லூஸி அதைப் பிரித்துப் படித்தாள். அவளது கண்கள் ஜ்வலித்தன. தன்னையே நம்பாமல் அக்கடிதத்தைப் பலமுறை திருப்பித்திருப்பிப் படித்துப் பார்த்தாள். ஆச்சர்யமும், சந்தோஷமும் மேலிட்டுக் கடிதத்தைப் பன்முறை முத்தமிட்டுக்கொண்டாள்! ஆநந்தக் கண்ணீர் கடிதத்தை நனைத்தது! அக்கடிதம் பின்வருமாறு:—



அழகு சுந்தரி!

இன்று மாலை தற்செயலாய் இவ் வீதியின்வழியாய் வந்தேன். உன்னைக் கண்டேன். மோகங் கொண்டேன். இன்று இரவு 8 மணிக்கு டியூப் ரெயில் வழியில் ஐந்தாம் பாலத்தடியில் உனக்காகக் காத்திருப்பேன். மறக்கவேண்டாம் என் கண்ணே!

உனது காதலன்,
டியூக். பார்ட்லன்பால்.

ஃ

டியூக் பாட்லன் என்பவர் மகா பெரிய பிரபுக்களிலொருவர். அவருடைய குமாரனுன பாட்லன்பால் என்பவனை லூஸி பலமுறைகள் நகரப் பூங்காவில் சந்தித்திருக்கின்ருள். ஆனுல், அவன் இவளைக் கண்டதில்லை. லூஸி முதன்முதலாக அவனைக் கண்ட தினத்தன்றே தன் உள்ளத்தைக் கொள்ளை கொடுத்துவிட்டனள். ஆனுல், சாதாரண ஓர் ஏழைப்பெண் பிரபுவின் குமாரனைக் காதலிப்பதைப் பிறர் அறியின் சிரிப்பார்களென்றெண்ணித் தன் இச்சையை எவரிடமும் கூருதிருந்தாள். தன் மனதிற்கினிய வாலிப சுந்தரனை மணம் செய்து கொள்ளாவிடினும், அவனுடன் ஸரஸ ஸல்லாபமாய்க்கூடி இன்பமனுபவிக்காவிடில் தனது ஜென்மம் பாழ் என்றே இதுகாறும் கருதிவந்தாள். இப்பொழுது பழம் நழுவிப் பாலில் விழுந்து, அது நழுவி வாயில் விழுந்தாற்போல், அவரே வலியக் கடிதமெழுதியிருக்கையில் அவள் ஆனந்தத்திற்கும் ஓர் வரையுண்டோ?

ஃ

இன்று பொழுது போவது லூஸிக்கு வெகு கடினமாயிருந்தது. இந்தப் பாழும் சூர்யன் எப்பொழுதுதான் மேற்புறம் சாயும் என்று மனம் வெம்புவாள். மத யானைபோல் அவளுடலில் ஓர்விதத் திமிர் குதூஹலத்தாலுண்டாகியது. அடிக்கடி பூங்கொடிபோல் உடலை வளைத்து சோம்பல் முறிப்பாள். கண்கள் காமாக்கினியைக் கக்கின. கன்னங்கள் காதலனின் கனி முத்தத்திற் கேங்கித் துடித்தன. மாலையும் நெருங்கியது. கதிரவன் மேற்றிசையில் வீழ்ந்தான். காரிருள் உலகைச் சூழ்ந்தது. வானத்தில் நக்ஷத்திரங்கள் அவளது தாபத்தைக்கண்டு நகைப்பனபோல் 'மினுக் மினுக்' என்று பிரகாசித்தன. லூஸி சரீரம் முற்றிலும் வெளிக்குத் தெரிய பஞ்சினும் மெல்லிய யுடை யுடுத்து வெளிக் கிளம்பினுள்.

ஃ



சிறிது தூரம்சென்றதும் அவளது தந்தை தாமஸ் ஜோன் எதிரில் வர, லூஸியின் மனம் கடலினிடையே அகப்பட்ட துரும்பைப்போல் துடித்தது. இந்நேரத்தில் ஆடம்பர ஆடையுடுத்து எங்கு போகின்ருய் எனத் தந்தை கேட்கின் யாது பதிலுரைப்பதெனச் சற்று சிந்தித்தாள். ஆனுல், பெண்ணரசிகளின் மாயத்தை யறிந்தோர் சிலரே! உடனே லூஸியின் மனதில் மின்னலைப்போல் ஓர் யோசனை யுதித்தது. இன் படக்காக்ஷிக்குப் போக என்று தந்தையிடம் தாள். "ஓ! நானும் பார்க்கவேண்டும்!" என்று அவர் வருபவன் கல்லாத உள்ளம் துடித்தது. "வீட்டில் ஒருவருமின்றி இருவரும் ஸ்திரீயின் பக்கத்

விடுவது நலமல்ல! நாளை நீங்கள் போகலாமே !" என லூஸி கூறவும், அவள் தந்தை வீட்டை நோக்கிச் சென்றார். லூசி பக்கத்து ரயில்வே ஸ்டேஷனை யடைந்ததும் படிகளின் கீழிறங்கி டியூப் லயினுக்குள் பிரவேசித்தாள்.

ஃ

லண்டன் நகர் ரெயில்வே லயினின் மர்மம் கள்ளக் காதலர்களுக்கே நன்கு விளங்கும். அதிக ஜனசஞ்சாரமுள்ள வீதிகளில் ரயில் பாதைகள் பூமிக்கு அடியில் (சுரங்கம்) டியூப்களுக்குள் செல்லும். ஆங்காங்கு தெரு மட்டத்தில் உயரத்தில் ஸ்டேஷனும், ரயில் பாதைகள் மட்டும் பூமிக்கு அடியிலுமிருக்கும். அந்த டியூப் பாதைகளின் இரு பக்கங்களிலும் இருளடர்ந்தவிடங்கள் ஏதேஷ்டமாயுண்டு. அங்கே மாலை நேரங்களிலும், இராக் காலங்களிலும் கள்ளக் காதலர்கள் கூடிச் சுகிப்பதும், மணமாகாத கன்னிகைகளும், புருஷனில்லாத பெண்களும், தங்கள் சிசுக்களைக் கொலை செய்து பாதைகளின் நடுவே எறிவதும் வழக்கம்! அந்தோ! பஞ்சமாபாதகங்களில் ஒன்றான விபசாரத்தைக் 'காதல்' என்னும் புனித பதத்தால் அழைக்கும் அலங்கோலம் என்னே !

ஃ

லூஸி ஜோன் டியூப் பாதையினுள் நுழைந்ததும் இருளடர்ந்த ஒவ்வோர் மூலையாகத் தனது காந்தவிளக்குகொண்டு கவனித்தவாறாகச் சென்றாள். ஹா! அங்கு கண்ட காட்சி பிரமிக்கச் செய்துவிட்டது! இதுகாறும் மிக்கப் பதிவிரதைகள் என்றும், பரிசுத்தமானவர்களென்றும் அவள் கருதிவந்த சிநேகிதிகள் திகம்பரமாய்க் கள்ளக்காதலர்களுடன் ஆங்காங்கு மன்மத சேவையில் ஏகமனத்தினராய் ஈடுபட்டிருப்பதைக் கண்டு பேராச்சர்யம் கொண்டாள். இன்னும் சிறிது நேரத்தில் தானும் அவ்வித இன்பங்களைப் பெறப்போகின்றோமென்றெண்ணுகையில் அவள் உடல் பூரித்தது ஆம்! ஐந்தாம் பாலமும் வந்தது! விளக்கை யேற்றிப் பார்த்துவிட்டு



வழியில் ... றணைத்து விட்டாம் என் கூறுவலுடன் ஓர் யௌவன வாலிபன் அவளை யப்படியே லிங்கனம் செய்து அவள் உடல் முழுதும் முத்த மழைபாகப்

ற்றார் பலர்; குமர வறிவுற்றார் சிலர்; முதிர்ந்த அறிவடைந்

பொழிந்தான். நம் காதலர்களின் இன்பத்தைக் கெடுக்காவண்ணம் இவர்களை இப்படியே மனம் சென்றபடிக்கு விட்டுவிடுவோம்.

ஃ

எதை மறைப்பினும் விபசாரத்தை எவ்வளவு நாட்கள்தான் மறைக்க வியலும்? லூஸிக்குத் துயர நாட்கள் தொடங்கின! அடிவயிறு கனத்தது! மூன்றுமாத கர்ப்பவதியாகினள். இதுகாறும் தன் தந்தையிடம் மறைத்து வந்த மர்மத்தை இனியும் எவ்வளவு நாட்கள்தான் மறைக்க வியலும்? பிறர் கண்களில் படாவண்ணம் வீட்டினுள் அடைபட்டிருக்கவேண்டிய விதியும் வந்தது. தன்னைத்தானே நொந்துகொண்டாள். டியூக் பாட்லன்பாலுக்கு எவ்வளவு கடிதங்கள் வரைந்தும் அவன் தன்னை மணம் செய்துகொள்ளத் தயாராகவில்லை யென்பதை யுணர்ந்து உள்ளம் பதைத்தாள். மேலும் தான் லூஸியையே கண்டதில்லை யென்றும் சபதம் செய்யலானான். என்ன செய்வாள் லூஸி? அந்தோ, மேல்நாட்டு நாகரீகமே! உன் சிறப்பை என்ன வென்றுரைப்பது!

ஃ

இனி மறைப்பதில் பயனில்லை யென்றுணர்ந்து லூஸி தன் தந்தை யிடம் உண்மையை யுரைத்துவிட்டாள். கடுங்கோபம் கொண்ட அவள் தந்தை லூஸியையும் அழைத்துக்கொண்டு டியூகின் வீட்டிற்குச் சென்றார். அச்சமயம் டியூக் தன் குமாரன் டியூக் பாட்லன்பாலுடன் பேசிக்கொண்டிருந் தார். ஜான் நுழைந்து அவர் மகன் செய்த அக்ரமத்தைக் கூறி, அவன் தன் மகளை மணம் செய்துகொள்ளாவிடில் வழக்குத் தொடருவதாகக் கூறினார்.



இதேசமயம் டியூகின் மனைவி யான இஸாபெல்லா உள் நுழையவும், அவளைக் கண்ட தே ஜான் "ஹா! இஸா பெல்!" என்று வாய்விட்டல றினான். அம்மாதும் லூஸி யின் தந்தையைக் கண்டு சற்று வெளித்தமுகத்துடன் ஓர் பார்வை பார்த், நவண் ணம் கூச்சலிடவிருந்த தன் வாயைக் கைக்குட்டையால் மூடிக்கொண்டாள். லூஸி இஸாபெல்லைக் கண்டு திடுக் கிட்டுப்போனாள்.

ஃ

மூத்த மனைவி படித்தவளாயிருந்தால், இளையாளாக வருபவள் கல்லாத மடந்தையாய் முடிகிறாள். கடைசி காலத்தில் படியாத ஸ்திரீயின் பக்கத் திலேதான் கிடந்து உயிர்விட நேர்கிறது.

"இஸாபெல்! டியர்!! இவர் யார்? நீ இவரை முன்னதாகவே அறிவாயோ?" என்றார் டியூக்.

—"ஆம்! இவ் எனது முதல் கணவர்! இவரிடமிருந்தபோது தான் லூசியைப் பெற்றேன் பிறகு எங்களிருவருக்கும் உண்டான மனஸ்தாபத்தால். விவாகரத்து செய்துகொண்டு இந்தியாவிற்குச் சென்றேன். அங்கு வந்திருந்த தங்களைக் கண்டு காதலித்து மணந்தேன்!" என்று அச்சம் கலந்த குரலில் தடுமாற்றத்துடன் கூறினாள் இஸாபெல்.

ஃ

இருவரும் தங்கள் மகன் பாட்லனைத் திரும்பிப் பார்த்தனர். அவன் பிறகு இல்லை. மேன்மெத்தையில் இருக்கலாமென்று அங்கு சென்றனர்.



அறையின் கதவு உள்ளுக்குத் தாள்ப்பாளிடப் பெற்றிருந்தது. உள்ளிருந்து "நீ என்னைச் சுடு, அதேசமயம் நான் உன்னைச் சுடுகிறேன். இனி நாம் இருவரும் ஜீவித்திருப்பது சரியல்ல" என்று சொல்லிக் கொள்ளும் சப்தம்கேட்டது. அதற்கு அடுத்த நிமிஷம் துப்பாக்கிக் குண்டின் ஓசை உண்டாயிற்று. கதவைப் பிளந்து கொண்டு உட்செல்லவும் பாட்லனும் லூஸியும் இரத்தம் பெருகத் தரையிற் கிடந்தனர். அருகில் இரு துப்பாக்கிகளும் இருந்தன. இருவரின் பிராணனும் போய விட்டது. மதனும் ரதியும்போல் கூடிக்குலாவி இன்பமனுபவித்து வந்த கள்ளக் காதலர்கள் தாங்கள் இருவரும் ஒரே தாய்க்குப் பிறந்த சகோதர சகோதரிகளென்ற உண்மையையுணர்ந்ததும் தங்கள் தாய்க்கும், தந்தைக்கும் எதிரில் எங்ஙனம் உயிரை வைத்துக்கொண்டிருப்பர்?

ஃ

ஏ, மேல்நாட்டு நாகரீகமே! உனக்குமுன் தங்கள் தாய்தந்தையர்கள் யார் என்றுணராத எவ்வளவு சகோதர சகோதரிகள் புருஷனும் பெண்சாதியுமாய் இன்புறுகின்றனர்? உன் அட்டகாசத்தால் பரகதியடையும் சிசுக்கள் எவ்வளவு? துடிக்கும் இதயங்கள் எத்தனை? மடிந்திடும் மக்கள் எவ்வளவு பெயர்! என்னே நின் விநோதம்!

தமக்கையும் தம்பியும் வெவ்வேறு பத்திரிகைகளின் ஆசிரியர்களாயிருந்தனர் தம்பி நோய்வாய்பட்டு எழுத முடியாதபோது, தமக்கை வேண்டிய விஷயங்களை எழுதித் தனது தம்பிக்கு அனுப்பி உதவினர். இது படித்த தமக்கையின் உதவி.

சென்றமாதம்

பம்பாயில் கலவரங்கள்:—

ஆலைத்தொழிலாளரின் வேலை நிறுத்தங்களால், பம்பாயில் கலவரங்கள் அதிகமாகின்றன. தொழிலாளரும் சமாதான எல்லையை மீறுகிறார்கள். தொழிலாளரின் தலைவர்கள் கைது செய்யப்படுகிறார்கள். வேலை நிறுத்தங்களைச் செய்யும்போது பிறரை ஹிம்ஸிப்பதில்லை யென்ற திடசித்தத்துடனிருந்தால் எந்தத் தொல்லையும் நேராது வெற்றியும் காணலாம். அதற்கான பக்குவம் பெறுவதென்பது பழகியே வரவேண்டும்.

ஃ

தாழ்ந்த ஜாதி சம்பந்தம்:—

ராஜநந்த தயானில் ஒரு மார்வாடி 6000 ரூபாய் கொடுத்து ஒரு பெண்ணை மணந்து இரண்டரை வருஷங்களுக்குப் பிறகு அது தாழ்ந்த ஜாதிப் பெண்ணென்று தெரியவரவே, அவள் கைப்பட்டதை உண்ண மறுத்துவிட்டாராம். மோசமாய்ப் பெண்ணை விற்ற இருவரும் நாலு வருஷமும், இரண்டரை வருஷமும் கடுங்காவல் விதிக்கப் பெற்றனராம். வெளியூர்களில் பெண் தேடுவதில் இவ்வளவு தொல்லைகளிருக்கிறதென்று நெருங்கிய பந்துக்களுக்குள் செய்தாலோ, அவர்கள் புது மனிதர்களாய் மீறி ஏறிக் கோணி ஆகாசத்திலே நின்றுகொண்டு ஆரவாரம் செய்கிறார்கள். புது ஜோர்!—புது நடை!—புது சீன் காட்சி காட்டுகிறார்கள்! எங்கும் சிக்கலில்லாமலில்லை. எந்த சிக்கலுக்கும் ஒரு முடிவும் இல்லாமலில்லை!

ஃ

மறுபடியும் காங்கிரஸ்:—

இருமுறை துரைத்தனத்தாரால் தடுக்கப்பட்டுப்போன காங்கிரஸ் மகா சபை சீக்கிரம் புத்துயிர் பெற்று மறுபடியும் கூடுமென்று தெரிகின்றது. இதற்கு எவ்வளவோ வேலைகள் செய்தாகவேண்டியிருக்கிறது. காங்கிரஸின் சாயலே சற்று நிதான அடக்கமாய்த் திருத்தப்பட வேண்டியதாயுமிருக்கும்.

ஃ

சட்டசபைப் பிரவேசம்:—

மகாத்மா சட்டசபைப் பிரவேசத்தில் தமக்கு நம்பிக்கையில்லையென்று ஒதுங்கிக் கொண்டதானது, சட்டசபைப் பிரவேசத்தில் ஆவல் உள்ளவர்களுக்கு வெகு ஏமாற்றமாக முடிந்தது. காந்திஜீயை மயக்குவதென்பது வெகுகஷ்டமாயிருக்கிறது. அவரை அலக்ஷியம் செய்து நேரிலேயே கேலிப்படுத்தினாலும், அதற்கும் ஒரு பொக்கைவாய்ச் சிரிப்பு சிரித்து விடுகிறார்! என் செய்வது?

ஃ

பாம்பு கடித்துப் பிழைத்தவன்:—

அரிசிகரை தாலுக்காவைச் சேர்ந்த ஒரு கிராமத்தில் இருவர் தென்னந்தோப்பில் இளநீர் பிடுங்கிக் கொண்டிருக்கையில், இரண்டு எலி பிடிக்கும் ஒட்டர்கள் எலிவளையிருக்கும் இடங்களிலெல்லாம் கையிட்டுப் பார்த்தவண்ணமிருந்தனர். ஒரு ஒட்டன் கையிட்ட வளையிலிருந்த பாம்பு ஒன்று அவனைக் கடிக்கவே அலறி மூர்ச்சித்தான். மற்றொரு ஒட்டனை

கிழவன் ஓடிவந்து, தன் இடுப்பிலிருந்த பையைத் திறந்து ஒரு வேரை எடுத்து அரைத்து மூர்ச்சையானவனின் வாயில் விட்டு, ஒரு மணியை எடுத்து சரீரத்தில் காயம் பண்ணி அதில் வைத்தான். பிறகு பையனுடைய தேகத்தைக் கிள்ளினான். கடியுண்டவன் ஸ்மரணையற்றிருந்தான். கழுத்தண்டைக் கிள்ளவே, ஹோவென்று சத்தமிட்டான். அதுவரையில் பையனுடைய உடம்பில் சுற்றிக்கொண்டு படம்எடுத்தாடியபடியிருந்த பாம்பு சரசரவென்றோடிற்று. பாம்பை அத்துடன் விடாமல் வளையண்டை சென்று வேரையும் மற்றொரு பொடியையும் உள்ளே தூவினான். உடனே பாம்பு வெளியே வந்தது. இளநீர்க் குடிக்கவந்தவர்கள் இவைகளைக் கண்டு ஆச்சரியமுற்று, பாம்பை ஆட்டும்படிக்கேட்டுக்கொண்டனர். கிழவன் அவ்விதமே ஆட்டினான். பாம்பு கிழவன் சொன்னபடியெல்லாம் கேட்டது. கடியுண்டவன் தூங்கினவன்போல் எழுந்திருந்து வேலை செய்ய ஆரம்பித்தான். எவ்வளவோ பணம் தருவதாகக் கூறியும் வேரையும் மணியையும் சொல்லவோ தரவோ மறுத்துவிட்டான். பாம்பு மிகப் பெரிதாயிருந்தது. அதை ஒரே தடவையில் அந்தக் கிழ ஒட்டன் அடித்துக் கொன்றுவிட்டான். ஆச்சரியமே!

சந்தா நேயர்களே!

நான் பிரதி மாதமும் 15-ந்தேதி யன்று, அதாவது தமிழ் மாதம் முதல் தேதியன்றே பிரசுரம் பெறுகின்றேன். குறித்த தேதியில் நான் தங்களை நாடி வந்தடையாவிடில், உடனே நேயர்கள் என் தாமதத்தைப்பற்றித் தங்கள் ஊரைச் சேர்ந்த போஸ்ட் மாஸ்டருக்குத் தெரிவிப்பின், நான் ஒழுங்காகத் தங்களிடம் வந்தடைந்து விடுவேன்.

தங்கள் செல்வி, அமிர்தினி.

ஒரு கோயிலுக்கென்று ஒரு வீட்டைத் தர்மத்திற்கு எழுதிவைத்தால், அந்த வீட்டுக்காரர் இறந்ததும், கோயில் குருக்கள் பெண்டு குழந்தை குட்டி பேரன் பேர்த்திகளுடன் அவ்வீட்டைச் சொந்த சொத்தாய்க் கருதிக் குடி புகுந்து விடுகின்றனர். கோயிலுக்கு எழுதிய சொத்து குருக்களுக்குச் சொந்த ஜீவனமாய் விடுகிறது. இந்தக் குருக்களுக்குத் தர்மம் செய்து அது கடவுளுக்கு எட்டுமென்று என்னுவதும், இவர்களைக் கடவுளின் பிரதிநிதிகளாகப் பாவிப்பதும் நமது வெகுகால மடமைகளில் ஒன்றாகும். பாத்திரமறிந்து பிச்சை கொடு.

மட் பாண்டங்களில் ஜலம் விட்டுக் குளிர வைத்துப் பருகுவது இந்த வெயில் காலத்திற்கு எவ்வளவோ இன்பமானது.

பழமொழிக் குறிப்புகள்

4. மக்கள்.

(17-ம் பக்கத் தொடர்ச்சி.)

364. "பெற்ற மனம் பித்து, பிள்ளை மனம் கல்."

பெற்ற மனம் எப்பொழுதும் தன் மக்களிடம் அன்பால் உருகி நிற்கும். தன் பிள்ளைக்குச் சொற்ப கஷ்டம் நேரிட்டாலும் அது தனக்கு வந்ததுபோல நினைத்துத் தவித்திடும். இவ்வித அன்பை மக்கள் தம் பெற்றோரிடத்தில், அதிலும் பெரிய வயதாய் வளர்ந்த பின் சில சமயங்களில் காட்டத் தவறிவிடுகிறார்கள். தமக்காகத் தமது தாய் தந்தையர்கள் படும் வருத்தத்தை யுணராமல் தமது பிடிவாத புத்தியையே கொள்வதும் சிலரது வழக்கம். ஒரு ஊருக்குப் புறப்படுகையில் பெற்ற மனம் தனது குமாரனை விட்டுப் பிரியத் தவித்தாலும், குமாரனோ அதைப் பொருட்படுத்தாமல் தனது பிரயாண சந்தோஷத்திலே கவனமா யிருந்து விடுகிறான். தான் ஒரு குழந்தைக்குத் தந்தையாகும்போதுதான், தன்னிடத்தில் தனது பெற்றோர் கொண்டிருந்த அன்பு எத்தகையதென்பதைத் தன்னில் தானே உணர முடியும். இதற்கு ஒரு சிற கதையும் வழங்குகிறது. ஒரு சிறு கிராமத்தில் ஒரு கொத்தனுக்கு மருதை என்ற ஒரு குமாரன் இருந்தான் மருதைக்கு விவாகமாகி ஒரு குழந்தையும் பிறந்திருந்தது. குழந்தைக்கு வயது ஒன்று இருக்கும். ஒருதினம் மருதை வழக்கம்போல் தன் வேலைக்குச் சென்று மத்தியானம் ஒருமணி வேளைக்கு வீடு திரும்பி வந்தபோது, அவ்வீட்டின் தாழ்வாரத்தில் ஒருபக்கம் நாலைந்து அடி ஓடு சரிந்திருந்தது. அதை மருதை கண்டு உடனே வெயிலையும் லட்சியம் பண்ணாமல் ஒரு ஏணியை வைத்து மேட்டின்மேல் எறி ஓடு மாற்ற ஆரம்பித்தான். வெயில் பொன்னுருக அடிக்கிறது. இப்படி மருதை மேட்டின்மேலிருப்பதைக் கண்டு அவனுடைய தந்தையின் மனம் தத்தளித்தது. "அப்பா! இந்தக் கடும் வெயிலில் பட்டப் பட்டினியாய் ஓடு மாற்றுவானேன்? இறங்கு கீழே; சாயங்காலம் மாற்றிக்கொள்ளலாம்; குளித்து சாதம் உண்ணப் போ" என்று பல முறையும் கூறினான். கிழவன் என்ன சொல்லியும் மருதை கேட்கவில்லை. கிழவன் மனமோ பிள்ளை வெயிலில் உட்காருவதைப் பார்க்கச் சகிக்கவே யில்லை. அவன் என்ன் சொல்லியும் கேட்கவில்லை. கிழவன் புத்திசாலி யானதால் எதையும் அனுபவமாய்ச் சுடச்சுடத் தானே யுணரும்படி

தமது தாயை இழந்து மாற்றாந்தாய்க்கு உட்பட்டிருப்பவர்கள் தங்களுடைய வீட்டிலேயே "அன்னியர்" என்று சொல்லப்படவேண்டிய நிலையில் ஆகிவிடுகிறார்கள். ஆக்கின சட்டியிலிருந்து ஒன்றைத் தானே வாயிற்போட்டுக்கொள்ளச் சுதந்திரமில்லை. மாற்றாந்தாய் எடுத்துக்கொடுத்தால் தான் உண்டு.

காட்டினால்தான் சூடு தெரிந்து சரியான வழிக்கு வருவானென்று நினைத்து, "நல்லது நீ இறங்கமாட்டாயல்லவா? ஒரு நிமிஷத்தில் உன்னை இறங்கச் செய்கிறேன்" என்று மனதில் சொல்லிக்கொண்டு, உட்சென்று தொட்டிலில் தூங்கும் மருதையின் கைக்குழந்தையை எடுத்து வெயிலில் வைத்தான். "ஐயோ குழந்தை வெயிலில் தவிக்கிறதே" என்று கதறிக்கொண்டு மருதை தான் செய்துகொண்டிருந்த வேலையை விட்டுவிட்டுக் கீழே இறங்கிக் குழந்தையைத் தூக்கிக்கொண்டான். அதைப் பார்த்த கிழவனும் "அப்படிதானப்பா எனக்கும் இருக்கும் என் பிள்ளை மருதை" என்று சொல்லிச் சிரித்தானும். சிலர் தம் தாய் தந்தையரைக் கவனியாமலும், ஆதரிக்காமலும் கொடுமையுடனிருக்கையில் அவர்களைப் பார்த்து "பெற்ற மனம் பித்து, பிள்ளை மனம் கல்" என்று கூறிப் பழிப்பதும் வழக்கம். விவாகத்திற்குப் பிறகே ஆண் மக்களிற் சிலரிடம் இவ்விதம் கல்லாகப் போய்விடுகிற சுபாவம் அமைகிறது. பெண் தன்மைக்கு இந்த சுபாவம் அரிது; அவர்கட்குத் தம் பெற்றோரிடத்துள்ள அன்பு எஞ்ஞான்றும் மாறுவதில்லை. அது பெண் வடிவத்தின் உயரிய குணங்களில் ஒன்றாகும்.

365. "குருமொழி கேளாதவனும், தாய் வாய் வார்த்தைக் கடங்காதவனும் சண்டி."

குரு மொழியை மீறி நடப்பவன் சுகப்படப் போவதில்லை. தாய்க்கு உட்படாதவனும் உருப்படான். அவன் ஒரு பெரிய சண்டிதான். இவ்விதம் மக்கள் வாய்ப்பது பூர்வம் செய்த வினையே.

366. "கெட்ட குடிக்கொரு துஷ்டப் பிள்ளை."

மேன்மையான நிலையிலிருந்து காலவசத்தால் தாழ்ந்துபோன குடும்பங்களுமுண்டு. பழைய நாளில் தங்களின் குதிரையையும் வண்டியையும் வைப்பதற்குக் கட்டிய சிறு இடத்தையே இப்போது வீடாகக் கொண்டு வாழவும் வினை சூழ்வதுண்டு. அவ்விதம் வறுமைப்பட்டுப்போன குடும்பத்தில் ஒரு உத்தம புதல்வன் பிறந்தால் அவனால் அக்குடும்பம் பிற்காலத்தில் முன்னுக்கு வந்து ஓங்கிவிடுவதும் உண்டு. ஆனால், இவ்வித ஸம்பவம் மிக அபூர்வமே. பெரும்பாலும் கெட்ட குடியே பின்னும் கெடுவது வழக்கம். அவ்விதம் கெட்டுவிட்ட குடும்பத்தில் இன்னும் துரதிர்ஷ்டமாக ஒரு துஷ்டப் பிள்ளை பிறந்து இருந்த மிச்சத்தையும் பாழ்படுத்திக் கண்டபடி கெட்டுத் திரிவானானால், அந்தக் குடும்பம் அத்துடன் தொலைந்த மாதிரிதான். அக்கிரமமாகப் பொருள் தேடியவர்களின் சந்ததி அடுத்த தலைமுறையில் இப்படிக் குடி முழுகிப்போவது சதாரணமாய்க் காணும் விஷயமே. ஆனால், தான தருமங்கள் செய்து விளங்கிய புண்ணிய புருஷர்களின் குடும்பத்திலும்

மனிதன் இரண்டு நாள் வாழ்ந்தாலும் அழகிய வாழ்வு—இன்ப வாழ்வு வாழவேண்டும். ஆயிரக்கணக்கான வருஷம் செக்குமாட்டைப் போல சுற்றிக்கொண்டிருப்பதில் என்ன பயன்? காகிதத்தாற்செய்த மலர் எத்தனை ஆண்டுகள் இருந்தாலுமென்ன? 'கமகம' வென உள்ளங்குளிர மணக்கும் இயற்கை மலருக்கு ஈடாகுமோ? அது இரண்டு நிமிஷம் இருந்து வாடிவிட்டாலும் பரவாயில்லை. அதற்குரிய புகழ் ஒரு தனிப்புகழ் தான்.—'பாரதி'.

இவ்விதம் துஷ்டப்பிள்ளை பிறந்துவிடுவது தான் மிக்க விபரீதமாயிருக்கிறது. அது பூர்வம் செய்த வினையின் வழியில் வந்த தோஷம் போலும்.

367. "கெட்ட குடிக்கு ஒரு கேட்டை பிறந்தது."

மேலே கூறிய பழமொழியின் கருத்தே இதற்குமாம். கேடு என்ற பதத்திலிருந்தும் கேட்டை என்ற பதம் தோன்றியது. கேட்டை என்பதற்கு மூதேவி என்று பொருள். கெட்டுப்போன குடும்பமொன்றில் மூதேவித் தனமான குழந்தைகள் பிறப்பதும், தாழ்ந்த புத்தியே கொண்டு நிற்பதும் காணக்கூடியதுதான். செல்வமும் பதவியும் ஓங்கும்பொழுது அழகும் நற்குணமு மமைந்த குழந்தைகள் உதிப்பதும், தாழ்ந்து கேவலப்பட்டுவிட்ட காலத்தில் அவலக்ஷணமும் துர்க்குணமுமுள்ள பிள்ளைகள் வாய்ப்பதும் வழக்கம். உயர்தலும் தாழ்தலுமின்றி என்றைக்குமே சாமானியமான குடித்தனம் செய்து வாழ்பவர்களுக்கு சாதாரணத்தன்மையில பழிப்பில்லாத குழந்தைகள் பிறப்பதும் பார்க்கக் கூடியதே.

368. தலை யிருக்க வால் ஆடுமோ?"

இப்பழமொழியின் முக்கிய தாற்பரியம் பெரியவர்கள் ஒரு வம்சத்திலிருக்க, சிறியவர்கள் தாங்களே தங்களுக்குப் பெரியதனம் வைத்துக்கொள்ளக்கூடாது என்றபடி. 'தலையிருக்க' என்றால் தனக்குப் பெரியவர்கள், தந்தை மூதாதைகளிருக்க, 'வால்' என்றால் சிறியவர்கள். தங்கள் பெரிய தனத்தைக் காட்டக்கூடாது என்றபடி. பெரியவர்களை அலக்ஷியம் செய்துவிட்டுத் தாங்களே தலைமை வகித்து நடத்துகிற ஒரு காரியம் மதிப்புடையதா யிராது. தாங்களே பெரியவர்களின் மூலமாகச் செய்தால் அதற்கு ஒரு விசேஷ மரியாதையும் பாராட்டுதலும் நடக்கும். தம்பி ஒரு விசேஷச் சடங்கைத் தனது தமையனைக் கொண்டு செய்விக்கும்போது அது தமயனுக்கும் கௌரவம்; தம்பிக்கும் அது சிறப்பு தருவதாய்ப் பரிமளிக்கும்.

(தொடரும்.)

"அரை வார்த்தைகள் போட்டிப் பந்தயம்."

ரூ 1025 ரொக்கப்பரிசு

முதற் பரிசு (சரியான விடைக்கு)	ரூ.	500
2-வது பரிசு (ஒரு தவறுள்ள விடைக்கு)	,,	300
3-வது பரிசு (இரண்டு தவறுகளுள்ள விடைக்கு)	,,	200
தனிப் பரிசு (முதலில் வந்துசேரும் சரியான விடைச்கு	,,	25

குறிப்பு:—இந்தப் போட்டியில் இரண்டு தவறுகள் உள்ள விடைகளுக்கும் பரிசு உண்டு என்பதையும், முதலில் வந்துசேரும் சரியான விடைக்கு பிரத்தியேகமான ஒரு தனிப்பரிசு அளிக்கப்படுமென்பதையும் கவனிக்கவும்.

பிரவேசக்கட்டணம் 8-அணா.


விடைகள் கூபனிலும், வெறுங்காகிதத்திலும் எழுதியனுப்பலாம்.

விடை கண்டுபிடிக்கும் விதம்:—அடுத்த பக்கத்தில் ஒன்பது தமிழ் அரை வார்த்தைகள் அச்சிடப்பட்டிருக்கின்றன. ஒவ்வொரு வார்த்தையிலும் அடிப்பாகம் பாதி மறைக்கப்பட்டிருக்கிறது. முதல் வரியில் காட்டியபடி ஒவ்வொரு எழுத்தையும் பூர்த்தி செய்தால் முழு வார்த்தை கிடைக்கும். முதல் வரியிலுள்ள வார்த்தை வினாயகர். இவ்வாறே ஒவ்வொரு வரியிலுள்ள எழுத்துக்களையும் பூர்த்திசெய்து எல்லா வார்த்தைகளையும் கண்டுபிடித்து வரிசை கிரமமாக கூபனிலோ, வெறுங்காகிதத்திலோ எழுதியனுப்ப வேண்டும்.

நிபந்தனைகள்.

1. ஒவ்வொரு விடைக்கும் பிரவேசக்கட்டணம் அணா 8. பிரவேசக் கட்டணத்தை மணியார்டர் மூலம் அனுப்பவேண்டும். ஒருவர் எத்தனை விடைகளேனும் அனுப்பலாம். ஆனால் ஒவ்வொரு விடைக்கும் பிரவேசக் கட்டணம் அணா எட்டு செலுத்துவதுடன் பணம் அனுப்பியதற்கு அத்தாட்சியாக மணியார்டர் ரசீதையும் விடையுடன் சேர்த்து அனுப்பவேண்டும்.

...1 "அரை வார்த்தைகள் போட்டிப் பத்தயம்-"



2. மணியார்டர் கூபனிலும், விடை அனுப்பும் கவர்மேலும் விடை அனுப்புவரின் முழு விலாசத்தை தெளிவாய் எழுதுவதோடு "அரைவார்த்தைப் போட்டி" என்றும் குறிப்பிடவேண்டும். விடைகளை தனித்தனி எழுத்தாக தெளிவாய் எழுதவேண்டும்.

"அரை வார்த்தைகள் போட்டிப் பந்தயம்."

"அரை வார்த்தைகள் போட்டிப்பந்தயம்."

முடிவு தேதி **25—6—34.**

விடை கூபன்.

1. விஞயகர்
2. பாத்தியம்
3. தலைமகன்
4. அணைக்கல்
5. சத்திரம்
6. பகைமகன்
7. வாசியம்
8. பணைத்தல்
9.

இந்த "அரை வார்த்தைகள்" போட்டியில் கலந்துகொள்வதில் மானேஜர் தீர்ப்பே முடிவானதென்றும் சட்டப்படி கட்டுப்படுத்துவதென்றும் ஒப்புக்கொள்கிறேன்.

பெயர்.

விலாசம்.

ஜில்லா.

3. மானேஜர் ஆபீசில் சீல் செய்துவைத்திருக்கும் விடைக்கு எழுத்துக்கெழுத்து சரியான விடை அனுப்புபவருக்கு முதற் பரிசும், அடுத்தபடி ஒரு தவறுள்ள விடை அனுப்புபவருக்கு இரண்டாவது பரிசும், அதற்கடுத்தபடி இரண்டு தவறுகள் உள்ள விடை அனுப்புபவருக்கு மூன்றாவது பரிசும் அளிக்கப்படும். அதில் விடைகள் வந்தால் பரிசுத்தொகையை பகிர்ந்தளிக்கப்படும். மேலும் முதலில் வந்துசேரும் சரியான விடைக்கு ரூ. 25 தனிப் பரிசும் அளிக்கப்படும்.

"அரை வார்த்தைகள் போட்டிப்பந்தயம்."

4. எவருமே சரியான விடை அனுப்பாவிட்டால் கூடியவரை சரியான விடையனுப்பியவருக்கு முதல் பரிசும் மற்ற பரிசுகள் இதே முறையில் அளிக்கப்படும். பரிசளிக்கும் விஷயத்தில் மானேஜர் தீர்ப்பே முடிவானது.

5. இந்தபோட்டியில் ஒருவர் ஒன்றுக்கு மேல்பட்ட பரிசுகள் பெறலாம் முதல் பரிசு பெறுபவர் இரண்டாவது, மூன்றாவது பரிசுகளும் பெறலாம். பலர் சேர்ந்து தங்களுடைய விடைகளை ஒரே கவரில் அனுப்பலாம். அத்தகைய விடைகளுக்கு பிரவேசக்கட்டணங்களை ஒன்று சேர்த்து ஒரே மணியார்டராக அனுப்பலாம்.

6. விடைகள் 25-6-34 தேதிக்குள் வந்து சேரும்படி அனுப்ப வேண்டும். இந்த தேதிக்கு பிறகு வந்து சேரும் விடைகள் கவனிக்கப்படமாட்டா. குறிப்பிட்ட வாய்தாவுக்குள் விடைகள் கீழ்க்கண்ட விலாசத்திற்கு அனுப்பப்படவேண்டும். முடிவை தபால் மூலமாகவும், மாத சஞ்சிகை மூலமாகவும் தெரிவிக்கப்படும்.

விலாசம்:—

மானேஜர், வித்யாபோட்டி நிலயம்,
மல்லூர் P. O. சேலம் S. I.

" அமிர்த குணபோதினி "

பவஹூத்திய ஆனி மாத பஞ்சாங்கம்.

யோகம்	இங்	தமிழ்	வார	திதி, நக்ஷத்திரம், விரதாதிகள், முதலியவை.
				ஷடசீதி, சூன்யர்க்கம்.
அ	14	1	வியா	துவி-15-33, புந-60-0, மிதுனரவி 31-26, கரிநாள்,
சி-உ	15 ஜூன் 5—28	2	வெ	திரி-21-0, புந-3-42, ரம்பா கௌரீ விரதம்.
சி-ம	16	3	சனி	சது-28 20, பூச-11-51, சதுர்த்திதிதி.
சி-ம	17	4	ஞா	பஞ்-34-37, ஆயி-19-49, ஆவடையார்கோயில் ரதம்
ம-சி	18	5	திங்	ஷஷ்-40-2, மக-27-4, ஆரண்ய கௌரீவிரதம்.
சி-அ	19	6	செவ்	ஸப்-44-12. பூர-33-0, கரிநாள், சீவரம் கருடன்.
அ-ம	20	7	புத	அஷ்-46 37, உத்-37-20, ஆனி திருமஞ்சனம்.
சி	21	8	வியா	நவ-47-2, ஹஸ்-39-45, துர்க்காஸ்வாபோத்ஸவம்.
சி	22	9	வெ	தச-45-21, சித்-40-6, கடகாயனம் 6-16, கங்காவ தாரம், பாபஹரதசமி.
அ-சி	23	10	சனி	ஏகா-41-41, ஸ்வா-38-28, ஸர்வ நிர்ஜல ஏகாதசி.
உ-ம	24	11	ஞா	துவா-36-12, விசா-35-0, ராமலக்ஷ்மண துவாதசி.
சி	25	12	திங்	திர-29-12, அநு-30-2. பிரதோஷம்.
உ-அ	26	13	செவ்	சசி-20-57, கேட்-23-51, திதிதுவயம்.
ம-அ	27	14	புத	○ 11-59, மூல-16-55, திருவல்லிக்கேணி ரதம்.
சி	28	15	வியா	பிர-2-50, உப-50-57, பூரா-9-50
சிமசி	29	16	வெ	திரி-45-10, உரா-2-54, உப-53-38.
சி-அ	30	17	சனி	சது-37-22, அவி-51-4.
சி	1	18	ஞா	பஞ்-30-39, சத-46-48.
சி	2	19	திங்	ஷஷ்-25-24. பூட்-43-55. ஷஷ்டி திதி.
அ-சி	3	20	செவ்	ஸப்-21-42, உட்-42-36, திதிதுவயம்.
உ-ம	ஜூலை 4	21	புத	அஷ்-19-33. ரே-42-48, நவமி திதி.
அ-சி	5	22	வியா	நவ-19-2, அசு-44-42.
சி	6	23	வெ	தச-19-56. பர-47 58,
அ	7	24	சனி	ஏகா-32-14, கிரு-52-29, கிருத்திகா விரதம், அதிதி.
சி	8	25	ஞா	துவா-25-43, ரோ-58-7, லக்ஷபத்ம விரதம்.
அ	9	26	திங்	திர-30-21. மிரு-60-0, பிரதோஷம், சிவராத்திரி.
சி-ம	10	27	செவ்	சசி-35-47. மிரு-4-38, கிருஷ்ணாங்காரக சதுர்தசி.
சி	11	28	புத	● 41-50. ஆரு-11-50, திருவள்ளூர் தெப்பம்.
அ	12	29	வியா	பிர-48-13, புந-19-32. ஆஷாடசுத்தம்.
உ-ம	13	30	வெ	துவி-54-40, பூச-27-23, அமிர்தலக்ஷ்மி விரதம்.
ம-அ	14	31	சனி	திரி-60-0, ஆயி-35-10, திரிதியா திதி.
ம-சி	15	32	ஞா	திரி-0-55, மக-42-28, கடகரவி 58-23, தக்ஷிணாய ணம், சூன்ய திதி.

		ரவி குஜசு	
சனி	15உ-உதயத்திற்கு ராசி		புத கே
ராகு			
			குரு

Printed & Published by the Proprietor E. M. Gopalakrishna Kone,
At the Amirtha Gunabodhini Press, 158-A, Broadway, Madras.